
நிலாச்சோறு
வெ.நாயகி
கங்கை புத்தக நிலையம்

# நிலாச் சோறு

பெ.நாயகி

கங்கை புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராய நகர், சென்னை – 600 017.

முதற் பதிப்பு : டிசம்பர், 2005

விலை : ரூ. 40.00

- Title : **NILA CHORU**
- Author : P. Nayagi
- Language : Tamil
- Subject : Short Stories
- Edition : First Edition, December, 2005
- Pages : 144
- Publication : **GANGAI PUTHAKA NILAYAM**
  23, Deenadayalu Street
  Thyagaraya Nagar
  Chennai - 600 017.

- Price : **Rs. 40-00**

---

Laser typeset at **EXPRESS COMPUTER**, Chennai-600 024.

Printed at : Nathan & Company, Chennai - 42.

# சமர்ப்பணம்

பெண்மையைப் புரிந்துகொள்ளும்

என் முயற்சிக்குப்

பெரும் சவாலாக விளங்கி வரும்

இனிய இல்லத்தரசி

**ஹேமாராணிக்கு**

# முன்னுரை

பார்த்த, கேட்ட விஷயங்களில் பாதித்தவைகளைப் பட்டியலிட்டு, அவற்றில் சுய விருப்பு வெறுப்புகளைத் தாண்டி பொதுத்தன்மை கொண்டு நிற்பவைகளை மட்டுமே படைப்புகளாக்கி வந்திருக்கிறேன். அதனால் தான் பாண்டித்யம் கலந்த பதிவுகளாக மட்டும் உருவாக்க முயலாமல் எங்கோ முகம் தெரியாத யாருக்கோ இதன் மூலம் ஒரு செய்தி போகிறது என்கிற பொறுப்புணர்வுடன் எழுத முடிந்திருக்கிறது என்று நம்புகிறேன்.

இந்தத் தொகுப்பு, கங்கை வெளியீடாக மலர்கின்ற என்னுடைய ஐந்தாவது சிறுகதைத் தொகுப்பாகும். இந்தச் சிறுகதைகள், குமுதம், கல்கி, தேவி, ராணி, தினமணிகதிர், பாக்யா, தினத்தந்தி, குங்குமம் முதலான பத்திரிகைகளில் பல்வேறு காலகட்டங்களில் வெளிவந்தவை. அவற்றைப் பிரசுரித்து

எனக்கு ஊக்கம் அளித்த அனைத்து பத்திரிகை ஆசிரியர்களுக்கும், தொகுப்பாக வெளியிட்டு என்னை வளர்த்து வரும் வானதி திருநாவுக்கரசு ஐயா மற்றும் இராமநாதன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'முழுதாகப் புரட்டி முடித்ததும் எது உன்னைப் புரட்டுகிறதோ அதுவே நல்ல புத்தகம்' என்று எங்கோ படித்த ஞாபகம். இந்த நூலின் ஏதாவது ஒரு பகுதி யாராவது ஒருவருடைய மனத்தையாவது கொஞ்சம் புரட்டியிருந்தால் எழுதியது குறித்த திருப்தி எழுதியவனுக்கு மிஞ்சும்.

**பெ.நாயகி**

10, வயல்கரை வீதி,
காரைக்கால் 609 602
30.12.2005

## பொருளடக்கம்

1. அன்னை வரம் ------------------------------ 7

2. துணை ------------------------------------ 14

3. கோணங்கள் -------------------------------- 24

4. மகள் தந்தைக்கு ---------------------------- 33

5. முதல்தேதி தேவதை ------------------------- 44

6. மரியாதை ---------------------------------- 56

7. நிலாச்சோறு -------------------------------- 63

8. புரிதல் ------------------------------------ 78

9. தங்கை ------------------------------------ 89

10. சக்கர நாற்காலி ----------------------------- 101

11. தோழமை ---------------------------------- 109

12. விளிம்பு ------------------------------------ 118

13. இது சாபமல்ல; வரம்! ------------------------ 127

14. பத்ம வியூகம் -------------------------------- 135

# அன்னை வரம்

**டா**க்டர் விமலாவின் முகம் சந்தோஷப் பூரிப்பில் விரிந்திருந்தது.

புகழ்மொழிகளும் பாராட்டுக்களும் அவள் மீது எல்லாத் திசைகளிலிருந்தும் பாய்ந்து செவிவழியே உட்புகுந்து ஆன்மாவை வருடிக் கொடுப்பது போல் உணர்ந்தாள்.

இந்த வாழ்த்துக்களும் பேச்சுக்களும் வெறும் சம்பிரதாய மானவை அல்ல; சொல்வோரின் அடிமன ஆழங்களி லிருந்து வெளிப்படுபவை என்று அவள் மட்டுமின்றி அந்த மண்டபத்தில் இருந்த அனைவரும் அறிந்திருந்ததாலேயே அந்த இடம் ஓர் உணர்ச்சிப் பிழம்பாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது

"எனக்கு மூன்று அம்மாக்கள்", என்று மைக் உயரம் கூட இல்லாத ஒரு சிறுவன் கழுத்தை உயர்த்திப் பேசினான். மண்டபம் சலசலப்பு நிறுத்தி அமைதி காத்து அவனைக் கவனித்தது. "இப்போது என்னை வளர்க்கிறாரே, அவர் மூன்றாவது அம்மா. என்னைத் தன் கருப்பையில் வாடகைத்

தாயாகச் சுமந்தாரே அவர் என் இரண்டாவது அம்மா. என் தந்தைக்கும் தாய்க்கும் வாரிசு உருவாக்க முடியும் என்று நம்பிக்கை ஊட்டி என் ஜனனத்துக்கு டெஸ்ட் ட்யூபில் பிள்ளையார் சுழி போட்ட டாக்டர் விமலா தான் என் முதலாவது அம்மா".

பளிச்சென்று மேடையிலேயே தன் கால்களில் அந்தச் சிறுவன் விழுந்து வணங்க அவனை அப்படியே வாரி எடுத்து முத்தமிட்டாள் டாக்டர் விமலா கண்களில் நீர் கசிய. பத்திரிகைக்காரர்களின் காமெராக்கள் அந்த உணர்ச்சிமிகு காட்சியை அவசரமாகப் படம் பிடித்துக் கொண்டன.

மண்டபம் முழுக்க ஏகப்பட்ட தாய்மார்கள். ஏகப்பட்ட குழந்தைகள். எல்லோரும் டாக்டர் விமலாவுக்கு நேரடியாகத் தொடர்பு உடையவர்கள்.

ஏராளமான பணம் இருந்தும் தங்கள் சொத்தினை அனுபவிப்பதற்கு வாரிசு இல்லையே என்று ஏங்கித் தவித்த பல பணக்காரத் தம்பதிகளுக்கு டாக்டர் விமலா அந்த படைப்புக் கடவுள் பிரம்மாவின் பெண் வடிவ மாகவே தோன்றினாள் என்றால் அது மிகையான வார்த்தை அல்ல.

உங்களுக்குக் குழந்தைப் பேறு இல்லை என்று மற்ற டாக்டர்களால் கை விடப்பட்ட அத்தனை பேரும் கடைசி நம்பிக்கையுடன் நாடி வருவது டாக்டர் விமலாவிடம் தான். சோதனைக் குழாய்க் குழந்தை, செயற்கை முறையில் கரு, வாடகைத் தாய் முதலான கடந்த முப்பது ஆண்டுகளில் எவருடைய கற்பனையையும் மீறிய சாதனைகளை மகப்பேறு

விஷயத்தில் சாதித்துக் காட்டி இன்று அகில உலகத்தின் பார்வையையும் தன்பால் திருப்பிக் கொண்டுள்ளவள் டாக்டர் விமலா.

அப்படி அவள் மூலமாகக் குழந்தை பெற்றவர்களும் அவர்களுக்கு நெருங்கியவர்களும் மட்டுமே கூடியுள்ள சபை என்பதனால் அது ஒரு பொது விழா மாதிரி இல்லாமல் குடும்ப விசேஷ நிகழ்ச்சி போல் நெகிழ்ச்சிக்குப் பஞ்சமில்லாமல் இருந்தது.

மேடைக்கு வந்து பேசச் சொல்லி யாரும் யாரையும் அழைக்கவில்லை. எல்லோரும் தாமாகவே முன் வந்து மேடை ஏறினார்கள். நாத் தழுதழுக்கப் பேசினார்கள். உணர்ச்சி வசப்பட்டுக் கண்ணீர் வடித்தார்கள். குழந்தை இல்லை என்கிற ஒரே காரணத்துக்காக தாங்கள் எந்த் அளவுக்கு உறவினர்களால் குடும்ப நிகழ்ச்சிகளில் அவமானப்படுத்தப்பட்டோம் என்பதை விவரித்தபோது பேசு வோருக்கும் சரி, கேட்போருக்கும் சரி கண்கள் குளமாகாமல் இல்லை. தங்களுடைய சமூக அந்தஸ்தையே உயர்த்திய டாக்டர் விமலாதான் தங்களின் குலதெய்வம் என்று சொல்லாதவர்கள் இல்லை. அவளுக்கு நோபல் பரிசு தரப்பட வேண்டும். குறைந்த பட்சம் மக்சேசே பரிசு வழங்கப்பட வேண்டும். பாரத அரசு பத்ம விபூஷண் பரிசு கொடுக்க வேண்டும் என்றெல்லாம் பேசியவர்கள் உணர்ச்சிகளைக் கொட்டினார்கள்.

பத்திரிகையாளர்கள் இந்த உணர்ச்சிகளை எப்படி வார்த்தைகளில் வடித்துக் கட்டுரையாக்குவது என்கிற சிந்தனையில் ஆழத் தொடங்கியிருந்தார்கள்.

எல்லாம் நல்லபடியாக நடந்து கொண்டிருந்த போது தான் அந்தச் சிறுவன் மேடை ஏறினான்.

வயது எட்டோ பத்தோ இருக்கலாம். அவனைப் பார்த்தால் அந்தச் சபைக்கு ஒட்டாதவனாக இருந்தான். உடலிலும் முகத்திலும் ஒரு வித ஏழ்மை குடியிருந்தது. கண்களில் மட்டும் ஓர் ஒளி தீவிரமாக ஜொலித்தது. பளிச்சென்று எவராலும் விரும்பத்தக்க முகப் பொலிவு.

யாராக இருக்கும் என்று எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்க அவன் முதலில் டாக்டர் விமலாவின் கால்களில் விழுந்து வணங்கினான். மைக் முன்னால் சென்று நின்றான். பேசத் தொடங்கினான் :

“இங்கே பேசிய பெரியவர்களின் பேச்சுக்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். என் வயது ஒத்த சிறுவர்களின் பேச்சுக்கள் என்னை மிகவும் கவர்ந்தன. நிறையப் பேர் சொன்னார்களே, எனக்கு இரண்டு அம்மா, மூன்று அம்மா என்றெல்லாம்; அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். எனக்கு ஒரு அம்மா கூட இல்லை”, என்று நிறுத்தினான்.

சபை மூச்சு விட மறந்து அவன் பேச்சைக் கவனித்தது.

“ஆம், நான் ஒரு அநாதை. நான் யாரை அம்மா என்று அழைப்பது? இங்கே பேசிய பெண்கள் சொன்னார்களே, அவர்களுக்குக் குழந்தை பிறப்பதற்கு முன் குடும்ப அங்கத்தினர்களாலும் சமூகத்தாலும் பெரும் அளவுக்கு அவமானங்களை அனுபவித்ததாக. நாங்கள், அதாவது என் போன்ற அநாதைகள் அதைவிட அதிகமாக

அனுபவிக்கிறோமே, எங்களுக்கு யார் நீதி வழங்குவது? பிறக்காத ஒரு குழந்தைக்காக லட்சக்கணக்கில் செலவழித்துப் புதிதாக உருவாக்கியே தீர்வது என்று போராடும் உங்களுக்கெல்லாம், ஏற்கெனவே பிறந்து வாழ வகை அறியாமல் திண்டாடும் என் போன்றோரின் நிலைமை தெரியுமா? டாக்டரம்மா! நீங்கள் உங்களிடம் குழந்தைப் பேறு கேட்டு வருபவர்களுக்குக் குழந்தை தருகிறீர்களே, நான் இப்போது உங்களிடம் எனக்கு ஒரு அம்மா பெற்றுத் தாருங்கள் என்று கேட்கிறேன். கொடுக்க முடியுமா?"

அவனுடைய கண்களில் கண்ணீர் தாரைதாரையாக வழிந்தது.

பொட்டில் அடித்தாற்போல் தூக்கம் கலைந்து எழுந்தாள் டாக்டர் விமலா.

இரண்டு நாட்களுக்குப் பிறகும் அந்தச் சிறுவனின் கதறல் காதுகளுக்குள் பாய்ந்து இதயத்தைப் பிசைந்து கொண்டிருந்தது.

"என்னாச்சு?" என்று உலுக்கினார் கணவர் ராமு.

வெறித்த பார்வையுடன் சிலையாக இருந்தாள் விமலா.

"அந்த விழாவுக்குப் போயிட்டு வந்ததில் இருந்தே நீ சரியில்லை. யாரோ ஒரு பையன் என்னவோ சொல்லிட்டதுக்காக ஏன் இவ்வளவு ஃபீல் பண்ற? உன்னை தெய்வமா மதிச்சுப் பேசினவங்களை நினைச்சுப் பாரு."

“இல்லைங்க, அந்தப் பாராட்டுக்கு நான் முழுசா தகுதியில்லாதவள்னு கோடி காண்பிச்சுட்டானே அந்தப் பையன்.”

“ஓ.கே. அந்தப் பையனின் ஆதங்கம் சரிதான். அதுக்கு நீ என்ன செய்திருக்க முடியும்?” என்று ஆறுதலாக அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

புதிது புதிதாகக் குழந்தைகள் பிறப்பது பற்றியே சிந்தித்த நான் எப்படி இந்த ஒரு கோணம் பற்றி சிந்திக்க மறந்தேன்? அவனுடைய ஏக்கமும் ஆதங்கமும் நியாயம் தானே?

“நான் ஒண்ணுமே செய்திருக்க முடியாதா? அவன் பேசி முடிக்கவும் என்னையே குறிவைத்ததுபோல் பேரமைதியில் இருந்ததே அந்தச் சபை.”

“என்ன நினைக்கற நீ? ஒரு முடிவுக்கு வந்ததுபோல் எழுந்து அவன் அருகில் சென்று அப்படியே அணைத்துக் கொண்டு ‘உனக்கு அம்மாதானே வேண்டும்? நான் தான் இனி உனக்கு அம்மா’ என்று சொல்லியிருக்க வேண்டும் என்றா?”

“அப்படி நான் சொல்லி இருந்தால் என்ன ஆகியிருக்கும்?”

“கூட்டம் கொஞ்சம் தயங்கி பிறகு நடப்பு புரிந்து கை தட்டத் தொடங்கியிருக்கும். அப்புறம்... என்னவோ சினிமாக் காட்சி போலாகியிருக்கும். விடு விமலா, எதையாவது கற்பனை செய்யாதே. அமைதியா தூங்கு.”

“இல்லைங்க, அந்தச் சிறுவன் எனக்குத் தக்க சமயத்தில் ஞானம் ஊட்டிய முருகக் கடவுளாகவே தோணுது. நாளைல இருந்து என்னிடம் சிகிச்சை வேண்டி வருபவர் களுக்கு இரண்டு நிபந்தனைகள் விதிக்கப் போகிறேன்... ஒன்று, பிறக்கப் போகும் குழந்தையுடன் சேர்த்து ஓர் அநாதைக் குழந்தையையும் தத்தெடுத்து வளர்ப்பதற்கு அந்தப் பெற்றோர் தயாராக இருக்க வேண்டும். இரண்டாவது ஏதாவது ஓர் அநாதை ஆசிரமத்திற்குப் பத்தாயிரம் நன்கொடை அளித்து அந்த ரசீதைக் காட்டினால்தான் சிகிச்சையே ஆரம்பம். ஓ.கே.யா?”

“வெரி குட். நல்ல முடிவு” என்று பாராட்டினார் ராமு.

“இத்தனை வெளிப்படையா அறிவிச்ச பிறகு நான் ஏற்கெனவே சிகிச்சை கொடுத்தவர்களில் சிலராவது அவங்களும் இதை ஏற்று நடைமுறைப் படுத்த முன் வந்தால் எவ்ளோ நல்லா இருக்கும்” என்ற டாக்டர் விமலா திடீரென்று ஞாபகம் வந்தாற்போல், “என்னங்க, முடிந்தால் அந்தப் பையன் யார் என்று கண்டுபிடித்து எதாவது செய்யணும்ங்க” என்றாள்.

அடுத்த சிறிது நேரத்தில் அமைதியாகத் தூங்கிய விமலாவின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார் ராமு, அடுத்தவர்களின் தியாகங்களைப் பாராட்டத் தயாராக இருக்கும் பணக்காரர்களில் பலர் சுயமாக அதனைச் செய்ய முன்வருவதில்லை என்கிற கசப்பான நிஜத்தை எப்படி இவள் சகித்துக் கொள்வாள் என்கிற சிந்தனை வயத்துடன்.

❋ ❋ ❋

# துணை

“என்ன மாப்பிள்ளை இப்படிப் பண்ணிட்டீங்க? எங்க பொண்ணு வேணாம்னே முடிவு பண்ணிட்டீங்களா?”

தான் குற்றவாளியாக நிறுத்தி வைக்கப்பட்டுக் கேள்வி கேட்கப்படுவது போல் உணர்ந்தான் சசி. அங்கிருந்த காட்சி அமைப்பும் கிட்டத்தட்ட அதுபோல் தான் இருந்தது. எதிரே நடுநாயகமாக இருந்த சோஃபாவில் அவனுடைய மாமனார் உட்கார்ந்திருக்க அருகில் அவருடைய தர்ம பத்தினி. ஒரு பக்கம் ஒற்றை சோஃபாவில் பத்மினி கோபம் பாதி ஏக்கம் பாதியாக உட்கார்ந்து அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறாள். இரு பக்கங்களிலும் வெவ்வேறு வகை ஆசனங்களில் பத்மினியின் இரு அண்ணன்கள் அண்ணிகள் கல்யாணம் ஆகாத தம்பி ஆகியோர் உட்கார்ந்திருக்க தன்னை யாரும் உட்கார் என்று கூடச் சொல்லாதது அவனுக்கு முதலில் உறைக்கவில்லை.

பத்மினி தான் “அவரை உட்காரச் சொல்லுங்கப்பா” என்றாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்தபடி, "தாங்க்ஸ்" என்று உட்கார்ந்தான்.

என்னதான் வெளியே வெறுப்புக் காட்டினாலும் தன் புருஷனுக்கு மற்றவர்கள் உரிய மதிப்பு தந்தே ஆக வேண்டும் என்கிற அவள் உள்ளக்கிடக்கை புரிய சசிக்கு நம்பிக்கை வந்தது.

"மாப்பிள்ளை! நீங்க நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலை" என்றார் மாணிக்கம்.

"அந்த எண்ணம் இல்லாமலா இவ்வளவு தூரம் வந்தேன்? பத்மினிக்கு என் மீது கோபம் இருந்தது. அது ஆறுவதற்குக் கொஞ்சம் காலம் ஆகும் என்று தான் ஒரு மாதம் தாமதித்து இப்போது வந்தேன். சமாதானம் ஆயிட்டாள்னு நினைக்கிறேன்."

"நான் சமாதானம் ஆகறதுக்காக அவர் என்ன செஞ்சிருக்கார்னு கேளுங்கப்பா"

சசிக்கு அப்பா மட்டுமே. அம்மா கிடையாது. ஒரே பிள்ளை. அம்மா அவனுடைய பதினைந்தாவது வயதிலேயே இறந்து போக அப்பாதான் அவனுக்கு அம்மாவாகவும் இருந்து வளர்த்தார். படிக்க வைத்து இன்ஜினியர் ஆக்கினார். நண்பர்கள் மூலமாக பத்மினி குடும்பத்தினரைப் பற்றி அறிந்து பெண் கேட்டார். தனியாகவே வளர்ந்தவன் என்பதால் நிறையப் பேர் உள்ள குடும்பத்து சம்பந்தம் கிடைத்தால் உறவுகள் பெருகி சந்தோஷமாக இருப்பான் என்று நினைத்தார்.

பத்மினி நல்லவள்தான். வீட்டு நிர்வாகத்தில், சமையலில் எல்லாம் கெட்டிக்காரிதான். அவ்வப்போது படித்த படிப்பு

குறித்த எண்ணங்கள் தலைதூக்கும்போது மட்டும் நான் வேலைக்குப் போகிறேன் என்று ஆரம்பித்து இரண்டு மூன்று நாட்கள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு இருப்பாள்.

“உங்களுக்கு வீட்டுக்கு ஒரு சமையல்காரியும் வேலைக் காரியும்தான் வேணும்னா என்னை எதுக்குக் கல்யாணம் செஞ்சீங்க?” என்று முரண்டு பிடிப்பாள்.

“நீ இப்போ வேலைக்குப் போய் ஆவதென்ன?” என்று கேட்பான் சசி.

“வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்க போரடிக்குதே.”

“அம்மா தாயே, இந்த நாட்டில் பசியுடனும் பட்டினியுடனும் இருக்கும் குடும்பங்களில் ஒருவருக்குக் கூட வேலை இல்லாத நிலைமை. நம்மை மாதிரி ஓரளவு வசதி வாய்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவங்களில் ஆணும் பெண்ணும் வேலைக்குப் போய் இன்னொருத்தர் வாய்ப்பைத் தட்டிப் பறிப்பதுங்கறது என்னைக் கேட்டால் பாவம்னு சொல்லுவேன். அதை நாம் செய்ய வேண்டாம்.”

“நானும் வேலைக்குப் போனால் எனக்குப் பொருளாதார சுதந்திரம் இருக்குமே.”

“இப்போ அது இல்லையா? என் சம்பாத்தியம் யாருக்காக? ஏன் உன்னையும் என்னையும் பிரிச்சுப் பார்க்கற?”

“இப்படிப் பேசியே ஆளை மயக்கிடுங்க.”

“எங்கே! மயங்கற மாதிரித் தெரியலையே. சீக்கிரமா ஒரு பொம்பளைப் பிள்ளை பெத்துக் குடுன்னா அதை விட்டுட்டு எல்லாப் பேச்சும் பேசற.”

இந்தப் பேச்சு வந்தாலும் பத்மினிக்குக் கோபம் வரும்.

“அதென்ன நீங்களும் உங்கப்பாவும் அடிக்கடி இதையே சொல்லிட்டிருக்கீங்க? உங்களுக்குப் பொம்பளைன்னாலே பிள்ளை பெத்துத் தர்ற மெஷின்னு நினைப்பு”, என்று தாளிப்பாள்.

சசி அடங்கிப் போவான்.

இப்படி நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தபோது பத்மினியின் தோழி ஒருத்தி வேலை ஒன்றுக்கான விண்ணப்பப் படிவத்துடன் வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு பத்மினியையும் விண்ணப்பிக்க வைத்து விட்டாள்.

சசியிடம் வேலைக்கான உத்தரவுடன் சொன்னால் ஒப்புக் கொள்வான் என்கிற அசட்டு நம்பிக்கையில் அவள் அவனிடம் சொல்லாமலேயே எழுத்துத் தேர்வுக்குப் போய் வந்ததுடன் நேர்முகத் தேர்வையும் முடித்து விட்டாள்.

அவளை வேலைக்குத் தேர்வு செய்து பணியில் சேர்வதற்கான நாள் குறிப்பிட்டு உத்தரவும் வந்த அன்று சந்தோஷத்தைக் கொண்டாட வீட்டிலேயே இரண்டு மூன்று வகை இனிப்புகளைச் செய்திருந்தாள்.

மாலை சசி வந்தவுடன் அவனிடம் இனிப்புகள் அடுக்கிய தட்டினை நீட்டினாள்.

“இன்னிக்கு என்ன விசேஷம்?” என்று கேள்விக் குறியோடு பார்த்தான்.

“ஒரு சந்தோஷமான செய்தி”

“மைகாட்! நான் அப்பாவாகப் போகிறேனா?” என்று துள்ளிக் குதித்தான். இனிப்புத் தட்டினை வாங்கிக் கீழே வைத்து விட்டு அவளை அப்படியே இழுத்துத் தட்டாமாலை சுற்றினான். “ரொம்ப தாங்க்ஸ் பத்மினி! அப்பாவுடைய கனவு நிறைவேறப் போகுது” என்று உற்சாக மிகுதியில் கத்தினான்.

பத்மினிக்குக் கோபம் வந்தது. இருந்தாலும் அடக்கிக் கொண்டு, “இருங்க. என்ன ஏதுன்னு விஷயத்தைக் கேட்டுட்டு குதிங்களேன். நீங்க நினைக்கிற விஷயம் இல்லை. அதைவிட முக்கியமானது. எனக்கு வேலை கிடைச்சிருக்கு” என்றபடி அதற்கான உத்தரவுக் கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.

சசி அதனை அலட்சியமாகப் பார்த்தான். வாங்கிப் படித்தான்.

“வெரிகுட்! உன் திறமைக்கு என் பாராட்டுக்கள்” என்றான். ஒரு இனிப்புத் துண்டினை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

பத்மினியின் முகம் மலர்ந்தது. “நாளை மறுநாள் நான் வேலையில் சேரணும். சேலத்தில் போட்டிருக்காங்க. உங்க கம்பெனி பிராஞ்ச் அங்கேயும் இருக்கு. நீங்க மாறுதல் வாங்கிட்டு வந்திடலாம்” என்று பேசிக் கொண்டே போனாள்.

“பத்மினி! அதெல்லாம் ஒண்ணும் ஆகப் போறதில்லை. நீ வேலைக்குப் போவதாக இருந்தால்தானே அதெல்லாம் யோசிக்கணும்?” என்றான் சசி இதமாக.

அவளுடைய கூந்தலில் கைவைத்துக் கோத முயன்றான்.

பத்மினி ரௌத்திரமானாள்.

“நான் வேலைக்குப் போயே தீருவேன்.”

இப்படித்தான் ஆரம்பமானது பிரச்சினை. சசியின் அப்பாவும் அவளுக்கு அறிவுரைகள் சொல்ல முயல கோபமான ஒரு கட்டத்தில் அவரை மரியாதைக் குறைவாகப் பேசி விட்டாள் பத்மினி.

சசிக்குக் கோபம் உச்சத்துக்குப் போனது. இருந்தும் சினிமா அல்லது சீரியல் புருஷன்களைப் போல் அவளை ஓங்கி அறையவில்லை. “அவரிடம் மன்னிப்புக் கேள்”, என்று மட்டும் சொன்னான்.

பத்மினி முரண்டு பிடிக்க, “அவரிடம் நீ செய்த தவறை உணர்ந்து மனதார மன்னிப்புக் கேட்கும் வரையில் என்னிடம் பேசாதே”, என்று பேச்சினை நிறுத்தி விட்டான்.

மூன்றாம் நாள் பத்மினி அவளுடைய பிறந்த வீட்டுக்குப் போய் விட்டாள்.

சமாதானப் பேச்சுக்காகப் போகத் துடித்த அப்பாவைக் கஷ்டப்பட்டு நிறுத்தி வைத்தான். அவருடைய வேண்டு கோளுக்காக ஒருமாதம் கழித்து அவளுடைய வீட்டுக்கு வந்திருக்கிறான்.

“அதென்ன உங்கப்பா எப்போ பார்த்தாலும் இவளிடம் ஒரு பொம்பளைப் பிள்ளையைப் பெத்துக் குடும்மான்னு சொல்லிட்டே இருக்காராம்?” என்று பொங்கிய கடைசி மச்சினனைப் பார்த்துப் புன்னகைத்தான் சசி.

“இது குறித்துப் பேசும் பக்குவம் உனக்கு இன்னும் வரலைன்னு நினைக்கிறேன் ராகுல்” என்றான் மென்மையாக.

“வாட் டு யூ மீன்? அவனுக்கு இருபது வயதாயாச்சு. அவன் ஏன் கேட்கக் கூடாது?” என்று பொரிந்தார் பெரிய அண்ணன் சப்போர்ட்டாக.

“இன்னும் அவன் மாணவன்தான். அவனைப் பொருத்த வரை குடும்ப வாழ்க்கை என்பது நாவல்களிலும் சினிமாக்களிலும் கண்டதாகத்தான் இருக்கும். அனுபவப் படாத ஒருவனின் வெட்டி வாதங்களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்க நான் தயாரில்லை.”

ராகுல் சட்டென்று அங்கிருந்து கோபமாக எழுந்து போனான்.

“ஒ.கே. நான் கேட்கிறேன். உங்களுக்குப் பிள்ளை பெற்றுத் தரத்தான் பொண்டாட்டியா?”

“வெல். என் அம்மா இறந்த பிறகு எல்லாப்பிடிப்பையும் என் மீது மட்டுமே வைத்து அம்மாவுடன் வாழ்ந்த வாழ்க்கையின் வசந்தத்தை மட்டுமே சுவாசித்துக் கொண்டு இப்போது வயோதிகம் அடைந்திருக்கும் என் தகப்பனுக்கு, என் வாரிசாக ஒரு பெண்பிள்ளை பெற்று, அதற்கு என் அம்மாவின்

பெயரை இட்டு, அவர் மடியில் தவழ விட வேண்டும் என்று நான் நினைப்பதில் எந்தத் தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்த எதிர்பார்ப்பு அவருக்கு இருக்கக் கூடாது என்று நினைப்பது நியாயமும் இல்லை."

"ஓ காட்! நீங்க சினிமாவில் டயலாக் எழுதப் போயிருக்கலாம்."

"பொம்பளைங்கறவ வெறும் பிள்ளை பெற்றுத் தரும் மெஷின்தான்னு ஆம்பளைங்க நினைச்சா ஏன் பொண்டாட்டி யிடமே சரணடையறாங்க? நாட்டில் மிஷின்களுக்கா பஞ்சம். என் வாரிசு என் மனைவி மூலமாத்தான் வேணும்னு நினைக்கற நேர்மைக்கு இன்னொரு பெயர்தான் தாம்பத்தியம்னு புரிய வேண்டாமா?"

"இப்போ என்ன தான் முடிவா சொல்றீங்க?"

"நான் சொல்றதுக்கு ஒண்ணுமே இல்லை. எல்லா வற்றையும் ஆரம்பித்தது உங்க பொண்ணுதான். அவள்தான் முடிக்கணும். இப்போகூட என்னுடன் வீட்டுக்கு வரலாம். அப்பாவிடம் மன்னிப்புக் கேட்ட பிறகு எங்கள் வாழ்க்கையின் வசந்தம் மீண்டும் தொடரலாம்."

"மன்னிப்பா? எதுக்கு?"

"அது உங்க பொண்ணுக்கே தெரியும்."

"இந்தச் சின்னப் பொண்ணு மன்னிப்புக் கேட்கணும்னு எதிர்பார்க்கற அளவுக்கா உங்கப்பா முதிர்ச்சி இல்லாமல் இருக்கார்?"

“இது அவருடைய தேவை இல்லை. என்னுடைய தேவை. என் மனைவி பெரியவர்களுக்கு அடங்கி நடப்பதால் மட்டுமே கர்வம் இல்லாதவளாக வாழ முடியும்ங்கறது என்னுடைய நம்பிக்கை.”

“மாப்ள !” என்று ஆரம்பித்தார் பத்மினியின் அப்பா.

“நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. உங்க அப்பாகிட்ட பத்மினி மன்னிப்பு கேட்கலாம். ஆனா அதுக்கப்புறம் அவரும் அவளும் ஒரே வீட்டுக்குள்ள நடமாட முடியுமா? அவர் அவளைக் கொஞ்சமாவது மதிப்பாரா? ஒண்ணு செஞ்சா என்ன? இப்போல்லாம் நல்ல வசதிகளோட முதியோர் இல்லங்கள் வந்தாச்சு. காசு கொஞ்சம் அதிகமா கொடுத்தா ராஜ உபசரணை பண்றாங்க. அங்கே கொஞ்ச நாள் இருக்கட்டுமே உங்கப்பா. நீங்க சின்னஞ்சிறுசுகள். உங்களுக்கு இடைஞ்சலா இருந்துகிட்டு அவருக்கும் நிம்மதி இல்லாம, உங்களுக்கும் நிம்மதி இல்லாம... நான் சொல்றதை உணாச்சி வசப்படாம சிந்திச்சுப் பார்த்தீங்கன்னா சரின்னு புரியும்.”

சசி மெல்ல எழுந்தான்.

“பத்மினி! என் உறுதியைக் குலைத்து விட்டு நானே பேசறேன். பொதுவா பொண்ணு புகுந்த வீட்டில கோவிச்சுட்டு பிறந்த வீட்டுக்கு வந்தா அவளுக்கு நல்லறிவுரை சொல்லி வாழ விடுவாங்கன்னு படிச்சிருக்கேன். கேள்விப்பட்டிருக்கேன். உன் துரதிருஷ்டம்னுதான் சொல்லுவேன், நீ நல்லா வாழணும்னு இங்கே யாருக்கும் எண்ணம் இருப்பதா தெரியலை. முடிவை உன்னிடமே விட்டுடறேன். ஒண்ணே ஒண்ணை யோசிச்சுப் பாரு. உனக்கு ஏதாவது ஒண்ணுன்னா

சரியாவோ தப்பாவோ கேட்கறதுக்கு இத்தனை பேர் இருக்காங்க. சந்தோஷம். ஆனா என் அப்பாவுக்கு என்னை விட்டால் யாருமே கிடையாதுங்கறதை மட்டும் நினைவில் வச்சு முடிவெடு. எனக்கு உன் மீது நம்பிக்கை இருக்கு. அந்த நம்பிக்கையோடு போறேன். உனக்காக நம்ம வீட்டுக் கதவு என்னிக்குமே திறந்திருக்கும்."

பத்மினியின் கண்களில் நீர் பொங்கி நின்றிருந்தது. அவனுடைய நேர்ப்பார்வை அவளுக்குள் நுழைந்து என்னவோ செய்தது. தனக்கு நல்லது செய்வதாக எண்ணிக் கொண்டு அந்தப் பெரியவரை முதியோர் இல்லத்துக்கு அனுப்பச் சொல்லி ஐடியா கொடுக்கும் அப்பா, நாளை சசியை விவாகரத்து செய்யச் சொல்ல மாட்டார் என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது என்கிற சிந்தனை உள்ளுக்குள் ஓட உடம்பே நடுங்கியது.

தலை சுற்றலும் கிறுகிறுப்புமாக உணர்ந்தவள் வேகமாக எழுந்து உள்ளுக்கு ஓடி வாந்தி எடுத்தாள். மனதுக்குள் கணக்குப் போட்டுப் பார்த்து நாட்கள் தள்ளி இருப்பதை உணர்ந்தாள். எல்லோரும் அவளையே பார்த்துக் கொண்டு இருக்க, "கொஞ்சம் நில்லுங்க; நானும் வர்றேன்", என்கிற வார்த்தைகள் அவளுடைய கட்டுப்பாட்டை மீறி வந்தன. சந்தோஷச் செய்தியை முதலில் மாமனாரிடம் மன்னிப்புக் கேட்ட பிறகு அவரிடம்தான் வெளிப்படுத்துவது என்று தீர்மானித்தாள்.

எப்போதுமில்லாத புதுப் பொலிவு அந்த முகத்தில் வந்து அமர்ந்திருந்தது.

☸ ☸ ☸

# கோணங்கள்

**நா**ன் பிரம்மச்சாரியாக முப்பத்து இரண்டு வருடங்கள் கழித்து விட்டது குறித்து மிகுந்த பெருமை எல்லாம் இருந்தது.

ஆஃபீஸுக்கு ஒரு நாள் கூட நேரம் தவறாமல் போக முடிந்தது. இன்னிக்கு ஒய்ஃபுக்கு உடல் சரியில்லை; பிள்ளைக்கு ஸ்கூல் அட்மிஷன் என்பது போன்ற பொய்ச் சாக்குகள் சொல்லும் அவசியமே ஏற்பட்டதில்லை என்பதில் கர்வம் இருந்தது.

மூடு இருந்தால் வீட்டு சமையல்; இல்லையேல் விரும்பிய ஓட்டலில் என்கிற சுதந்திரம் பிடித்திருந்தது.

மாலையில் யாராவது சினிமாவுக்கு அழைத்தால் 'வீட்டில் கேட்கணும்ப்பா' என்கிற பதில் சொல்லத் தேவை இல்லாதிருந்தது.

திடீரென்று மூடு வந்தால் சட்டென்று லீவு லெட்டர் எழுதி வைத்து விட்டு ஒரே ஒரு பெட்டியைத் தூக்கிக் கொண்டு முன் பதிவு ஏதும் இல்லாமல் அதிக காசு கொடுத்து உயர் வகுப்பு ரயிலில் கூட ஊருக்குப் போய் அப்பா அம்மாவைப் பார்த்து வர முடிந்தது.

இன்னிக்கு நைட் ஸ்டார் ஸ்போர்ட்ஸில் கிரிக்கெட் மாட்ச் காட்டுகிறான் என்றால் 'இன்னும் ஒரு வாரத்துக்கு டிவி பார்க்க முடியாதுப்பா. பிள்ளைகளுக்கு எக்ஸாம்' என்பது போன்ற கவலைகள் இல்லாதிருந்தது.

மிடில் க்ளாஸ் தரத்துக்குக் கொஞ்சம் மிகையான விலையில் ஏதாவது விஷயம் மார்க்கெட்டில் அறிமுகமானால் மற்றவர்கள் யோசிக்கும்போது சட்டென்று வாங்க முடிந்தது.

எல்லாமே பிடித்திருந்தது –

போன வாரம் வரை.

**போ**ன வாரத்தில் ஒரு நாள் காலை என்னுடைய நெருங்கிய நண்பன் ராஜ் வீட்டில் இருந்து ஃபோன். பேசியது அவனுடைய இளம் மனைவி தேவிகா.

ராஜ் அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு சுருண்டு கிடக்கிறானாம்.

பதறி அடித்து காரை எடுத்துக் கொண்டு விரைந்தேன்.

கண்களில் பெருகி நிற்கும் நீருடனும், இடுப்பில் தாய் முகத்தையே பார்த்தபடி பிரமிப்பில் அமைதியாய் இருந்த குழந்தையுடனும் வரவேற்றாள் தேவிகா.

"என்னாச்சு பயில்வானுக்கு?" என்று கேட்டபடியே உள்ளே போனேன்.

நிஜமாகவே சுருண்டு கிடந்தான். பேசவே கஷ்டப் பட்டான். வலியில் துடிப்பது தெரிந்தது.

"டாக்டரிடம் போய் விடலாம்", என்றேன்.

அவனைக் கைத்தாங்கலாகத் தூக்கி நடத்தியபடி காரின் பின் இருக்கையில் படுக்க வைத்தேன்.

தேவிகா குழந்தையுடன் முன்புறம் ஏறிக் கொள்ள ஆஸ்பத்திரிக்குப் பறந்தேன்.

நல்ல வேளையாக டாக்டர் இருந்தார்.

ராஜைப் பரிசோதித்தார். அவன் சொன்னவைகளை வைத்து அவருக்கே பிடிபடாத மாதிரி இருந்தது அவருடைய முகக் குறிப்பு.

"அட்மிட் ஆகணும்", என்றார்.

"நோ ப்ராப்ளம் சார் பணத்தைப் பற்றிக் கவலைப் படாதீர்கள்", என்றேன்.

டீலக்ஸ் ரூமுக்கு ஏற்பாடு செய்தார்.

மளமளவென்று சோதனைகளுக்கு எழுதித் தந்தார்.

அந்த ஆஸ்பத்திரி எல்லா சோதனை வசதிகளும் உள்ளடக்கிய ஒன்று. அங்கேயே ஸ்கேன் எடுத்தார்கள்.

படுக்கையில் சாய்த்து ஊசிகள் போட்டுத் தூங்க வைத்து சலைன் ஏற்றிவிட்டு நகர்ந்தார்கள்.

இரண்டு மணி நேரம் ஓடியதே தெரியவில்லை.

படுக்கையில் பிரக்ஞை இல்லாமல் ஹாவென்று கிடந்த ராஜைப் பார்க்க எனக்கே கலக்கமாக இருந்தது. சட்டையின் கைப்பகுதி ஏறியிருந்ததாலும் பட்டன்கள் திறந்து கிடந்ததாலும்

தெரிந்த கட்டுமஸ்தான உடம்பும், வலுவேறிய புஜங்களும், கைகளும், இறுகித் தெரிந்த தாடையுமாக இந்தி நடிகனுக்குரிய உடல்வாகோடு இருந்தான். முகம் மட்டும் வலியால் வாடிப் போய்...

திரும்பிப் பார்த்தபோது தேவிகா தேம்பிக் கொண்டிருந்தாள்.

“சேச்சே. ஒண்ணுமில்லீங்க. எதுக்கு அழறீங்க? தைரியமா இருங்க” என்று தேற்றினேன்.

முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

“நீங்க ஆஃபீஸுக்குப் போகலையா?”

“அது கிடக்கு. நீங்க முதலில் வீட்டுக்குப் போய்க் குளிச்சு குழந்தைக்கு வேண்டியதெல்லாம் பார்த்திட்டு வாங்க. இஞ்ஜெக்ஷன் போட்டிருக்கறதுனால எப்படியும் இன்னும் இரண்டு மணி நேரத்துக்கு ராஜ் எழுந்திருக்க மாட்டான். நான் பார்த்துக்கறேன்.” என்றேன்.

அவள் முதலில் மறுத்து பிறகு என் வற்புறுத்தலுக்குப் பின் தயக்கமாகக் கிளம்பிப் போனாள்.

அவள் போன சிறிது நேரத்தில் டாக்டர் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார்.

“பயப்படும்படியா ஒண்ணும் இல்லை. அவருக்கு அப்பெண்டிஸைட்டிஸாக இருக்குமோன்னு சந்தேகப் பட்டேன். ஸ்கேனில் அது இல்லைன்னு தெரியுது. குடல் ஏற்றம் தான்...” என்றார்.

நிம்மதியாக இருந்தது.

“குடல் இறக்கம் கேள்விப்பட்டிருக்கேன். இது என்ன டாக்டர், குடல் ஏற்றம்?”

“இது கொஞ்சம் விநோதமானதுதான். உங்க ஃப்ரண்ட் எக்ஸர்ஸைஸ் ரொம்ப செய்வாரோ?”

“ஆமாம் சார். அவனுக்கு நாங்க வச்சிருக்கற நிக் நேமே பயில்வான் தான்”

“அதில்தான் ப்ராப்ளம். ஒழுங்கா ப்ராப்பர் கைடன்ஸ் இல்லாமல் பண்ணுவதால் இந்த மாதிரி எசகு பிசகாக ஆக வாய்ப்புகள் இருக்கு. தொப்பை விழுந்திருந்தா அதைக் கரைக்க மென்மையான வழிகள் இருக்கு. இவர் ஸ்டமக் ட்ரிம்மர் வாங்கி வயிற்றில் எக்கச்சக்கமா அழுத்தம் கொடுத்து ஏதாவது பண்ணியிருப்பார். மென்மையான வயிறு என்ன செய்யும்? உள்ளே உள்ள பகுதிகள் லேசா இடம் மாறிச்சின்னா வம்பில்லையா? நல்ல வேளை இவருக்கு ரொம்ப சீரியஸ் இல்லை. சில கேஸ்கள் ஆபரேஷன் வரைக்கும் போயிடும், தெரியுமா?”

இறுக்கம் விடுபட்ட உணர்வில் புன்னகையுடன் பெருமூச்சு விட்டேன்.

“ரொம்ப தாங்க்ஸ் டாக்டர் ஒரு ஃபோன் பண்ணிக் கட்டுமா?”

உடனடியாக தேவிகாவுக்குச் சொல்ல நினைத்தேன். அதிகமாக பயந்து போயிருந்தது அவள்தான்.

வீட்டில் நெடு நேரம் ரிங் போய்க் கொண்டிருந்தது. யாரும் எடுக்கவில்லை.

ஒருவேளை கிளம்பி வந்து கொண்டிருக்கிறாளா?

“எப்போ டிஸ்சார்ஜ் ஆகலாம் டாக்டர்?”

“எப்படியும் நார்மலாவதற்கு இரண்டு மூன்று நாட்களாகும். அப்புறம் பார்க்கலாம்”. ராஜ் இன்னும் தூக்க மயக்கத்திலிருந்து எழுந்திருக்க வில்லை. எழுந்து அறைக்குத் திரும்பினேன்.

கதவு திறந்து உள்ளே வந்தாள் தேவிகா. குழந்தையைக் காணோம். பக்கத்து வீட்டில் விட்டு வந்திருக்கலாம்.

நெற்றியில் விபூதிக் கீற்றும் குங்குமமும். கோயிலுக்குப் போய் வந்திருக்கிறாள் என்று தோன்றியது.

“கவலைப்படாதீங்க...”, என்று ஆரம்பித்து டாக்டர் சொன்னவைகளைச் சொன்னேன்.

“பகவானே” என்று கைகூப்பி உயரே பார்த்துத் தொழுதாள்.

பொலபொலவென்று அவள் கண்களில் நீர். இம்முறை முகத்தில் கொஞ்சம் மலர்ச்சி.

மெல்ல அவன் அருகில் நடந்துபோய் மூடியிருந்த இடதுகை திறந்து அதில் இருந்த விபூதியை எடுத்த ராஜின் நெற்றியில் பூசினாள். குங்குமம் எடுத்து வைத்தாள். மீதி இருந்த விபூதியை அவன் வயிற்றில் தடவி விட்டாள். நான் இருப்பது பற்றி கூச்ச உணர்வு கூட இன்றி தாலியை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டாள். என்னை இக்காட்சிகள் என்னவோ செய்தன.

“பயந்திட்டேண்ணா”, என்றாள்.

சிரித்தேன்.

"நீங்க வேணா போய் ஏதாவது சாப்பிட்டு வாங்களேன்" என்றாள்.

"நீங்க?"

"விரதம்ண்ணா" என்றாள்.

அவள் கோயிலுக்குப் போய் அழுததால்தான் டாக்டர் இவனுக்கு ஒன்றுமில்லை என்று சொல்லிய அதிசயம் நடந்திருக்க வேண்டும் என்று பட்டது.

அடுத்த நான்கு நாட்களில் ராஜ் படிப்படியாகத் தேறி வீட்டுக்கு வந்து விட்டான்.

அந்த நான்கு நாட்களும் தேவிகா அவன் மீது காட்டிய பரிவு, அன்பு, அன்னியோன்யம், பதற்றம், துடிப்பு எல்லா வற்றையும் அருகிலிருந்து பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது எனக்கு.

'பாசம் என்ற சொல் எதற்கு? பார்த்திருந்து துடிப்பதற்கு' என்று கவிஞர் பாடியதன் உண்மையான அர்த்தம் புரிந்த மாதிரி இருந்தது.

ராஜ் சீக்கிரமாகத் தேறி எழுந்தது முழுக்க முழுக்க அவளால்தான் என்று கூட நினைத்தேன்.

என்னதான் நானோ நர்ஸோ உதவி இருந்தாலும் தேவிகாவின் அண்மைதான் அவனுக்கு குணமாக வேண்டும் என்கிற உத்வேகம் தந்திருக்கும் என்று பட்டது. குழந்தையின்

முகத்தைப் பார்க்கும் கணங்களில் மட்டுமே அவனுடைய வாடிய முகத்தில் ஒளி பிறந்ததாகத் தோன்றியது.

'உடம்பு நல்லா திமிர் வச்சுப் போய் இருக்கும்வரை பொம்பளை அருமை தெரியாமத்தாண்டா இருக்கும். உடம்பு முடியாமல் போய்ப் படுக்கையில் விழும்போதுதான் அவள் எவ்வளவு அவசியம்னு புரிய வரும். அப்போ ரொம்பத் தாமதமாகி இருக்கும்' என்று அப்பா அடிக்கடி சொல்வாரே அது இது தானோ...

அன்று இரவே அப்பாவுக்குக் கடிதம் எழுதினேன், அவர்கள் மனதுக்குப் பிடித்த மாதிரி எனக்குப் பெண் பார்க்கும் படி. மனம் லேசான மாதிரி இருந்தது.

**ம**று நாள்.

ஒய்வுக்குப் பிறகு வேலையில் சேர்ந்திருந்தான் ராஜ். அவனுடன் காண்டீனில் டீ குடித்துக் கொண்டிருந்தேன்.

அவன் முகம் தீவிரமாக இருந்தது.

"என்னாச்சுடா? இப்போ கம்ப்ளீட்டா குணமாயிட்ட, இல்லையா?"

"அதெல்லாம் ஒக்கேதான். ஆஸ்பத்திரியில் இருக்கும் போது உன்னைப் பற்றித்தான் நினைச்சிட்டிருந்தேன். உன்கிட்ட ஒண்ணு சொல்லணும். நீ கல்யாணம் பண்ணிக்க வேண்டாம்னு இருப்பதில் இன்னும் உறுதியா இருக்கியா?"

எனக்கு சிரிப்பு வந்தது. நேற்று அப்பாவுக்குக் கடிதம் எழுதியதைச் சொல்லி விடலாமா? என்ன சொல்கிறான் என்று கேட்போமே.

“கல்யாணம் பண்ணிக்காதேடா” என்றான் பளிச்சென்று.

திடுக்கிட்டேன். “என்னடா சொல்ற?”

“ஆமாம்டா. அந்த நாலு நாளும் ஆஸ்பத்திரியில் எனக்கு இருந்த மனவேதனை எனக்குத்தான் தெரியும். திடீர்னு எனக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா தேவிகாவும் குழந்தையும் என்ன ஆவாங்க என்கிற எண்ணம் என்னை எவ்வளவு டார்ச்சர் பண்ணுச்சு தெரியுமா? இவ்வளவு குறைஞ்ச வயதில் அவள் விதவை ஆனாள்னா, அவ ராசி இல்லாதவ, என் குழந்தை பிறந்த நேரம்தான் என்னைக் கொன்னிடுச்சுங்கற மாதிரியான அபத்தமான பேச்சுகளிலேயே அவளைப் படுத்தி எடுக்குமே இந்தச் சமூகம்னு நினைச்சு ரொம்பவே கலங்கிட்டேன். நல்லவேளையா ஒண்ணும் ஆகாம பிழைச்சுக் கிட்டேன். தனியா இருந்து உடம்பு சௌகரியம் இல்லாமல் போய்விட்டால் பக்கத்து வீட்டு ஆளுங்க, ஆஃபீஸ் ஆளுங்க என்று யாராவது உதவிக்கு வந்திடுவாங்க. அது எவ்வளவோ தேவலை. நமக்கு உரியவங்க பக்கத்திலேயே இருந்து நமக்காகத் துடிப்பதைப் பார்த்திட்டிருக்கறது பெரிய கொடுமை. கல்யாணம் செஞ்சுக்கறதில்லைங்கற உன் முடிவு தான் பெஸ்ட்டுன்னு அப்போ தான் நினைச்சேன்...”

அவன் சொல்லிக் கொண்டே போக எனக்கு மயக்கம் வராத குறை.

# மகள் தந்தைக்கு

"தூயவு செஞ்சு சத்தம் போடாதீங்க ஐயா, வீட்டுல மத்தவங்க எல்லாரும் தூங்கிட்டிருக்காங்க. விழிச்சுக்கப் போறாங்க" என்று அப்பா கெஞ்சலும் கிசுகிசுப்புமாக யாரிடமோ சொல்லிக் கொண்டிருப்பது கேட்டே விழிப்பு வந்து விட்டது எனக்கு. மணி என்ன இருக்கும்? சுவர்க் கடிகாரம் நாலே முக்கால் காட்டியது. கனமான மதியச் சாப்பாட்டுக்குப் பிந்தைய தூக்கம் அசத்தி இருந்தது. மாலை வெயில் ஜன்னலுக்கு வெளியே எதிர்த் திசையில் கம்பிகளை நீட்டி இருந்தது.

அப்பா யாருடன் பேசிக் கொண்டிருக்கிறார்?

தோளிலிருந்து நழுவிய சேலைத் தலைப்பினைச் சரி செய்தவாறே மெல்ல எழுந்து உட்கார்ந்தேன்.

என்னவரும் குழந்தையும் அயர்ந்து உறங்கிக் கொண்டு இருந்தார்கள். என்னவரிடமிருந்து எழுந்து கொண்டிருந்த மெல்லிய குறட்டை ஒலி உலுக்கி எழுப்பினால் ஒழிய அவருடைய உறக்கம் கலைய வாய்ப்பில்லை என்று காட்டியது.

“அவ்ளோ கௌரவம் பாக்குற ஆளு கடன் வாங்க முன்னால யோசிச்சிருக்கணும்”

கேட்போரைக் கூனிக் குறுகச் செய்யும் வார்த்தைகள்.

கீழ்த்தளத்தில்தான் கேட்டன.

அப்பா அந்த வார்ததைகளை என்ன விதமாக எதிர் கொண்டிருப்பார் என்பதைக் கற்பனையில் கூடப் பார்க்க முடியவில்லை என்னால். யார் இப்படிப் பேசுவது என்று மட்டும் அறியும் ஆவல் உந்தித் தள்ள மெதுவாக எழுந்து அறையின் வாசல் தாண்டிப் படிக்கட்டுகளின் மேல் முனைக்கு வந்தேன். படிகளின் ஊடே குனிந்து பார்க்க அப்பா அவஸ்தையாகக் கைகளைக் கூப்பியபடி நின்றிருப்பதும் எதிரே தடியாக இரண்டு பேர் நிற்பதும் அரைகுறையாகத் தெரிந்தன.

அப்பாவின் கவனம் பதற்றத்துடன் என் திசை நோக்கித் திரும்ப நான் அவசரமாக என்னை உள்வாங்கிக் கொண்டேன்.

பார்த்திருப்பாரோ?

“ஐயா! கொஞ்சம் தயவு பண்ணுங்க. விடுமுறைக்கு வந்திருக்கும் என் மகளும் குழந்தையும் மாடியில் இருக்காங்க. அவங்க காதில் விழுந்திடப் போகுது. என் வயசுக்காவது இரக்கம் காட்டுங்க. என் பையனுக்கு இப்போதான் வேலை கிடைச்சிருக்கு. இன்னும் ஓரிரு மாசங்களில் கடனின் கணிசமான பகுதியை அடைச்சிருவேன். பெரியவர்கிட்ட நானே வந்து சொல்றேன். இப்போதைக்கு தயவு செஞ்சு கிளம்புங்கையா” என்கிற அப்பாவின் குரலில் வெளிப்பட்ட

பதற்றம் என்னைப் பார்த்து விட்டதால் இருக்குமோ என்று கூடத் தோன்றியது.

அவருடைய குரலின் ஒலி அளவும் மிகவும் குறைந்திருந்தது.

அசையாமல் அங்கேயே நின்றிருந்தேன். அப்பாவின் கெஞ்சல் அவர்களிடம் இரக்கத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. அவர்கள் என்ன செய்வார்கள்? கூலிக்கு மாரடிப்பவர்கள். ஏவி விடப்பட்ட கட்டளையை நிறைவேற்று கிறார்கள்!

“இப்போதைக்கு ஏதாவது வச்சிருப்பியே! அதையாவது குடு. ஐயாகிட்ட நாங்க வெறும் கையை வீசிட்டா போக முடியும்? எங்க கூலியே நீ தரப் போற பணத்தில்தான் தருவேன்னு சொல்லி இருக்கார்”

“ஐயா! என்கிட்ட நிஜமாவே ஒண்ணும் இல்லையா. வச்சுக்கிட்டா வஞ்சம் பண்றேன்? தயவு செஞ்சு என் நிலைமையைப் புரிஞ்சுக்கோங்கையா”

“வக்கில்லைன்னு தெரியுதுல்ல? அப்புறம் என்ன மகளையும் மருமகனையும் வரவழைச்சு விருந்து கூத்து எல்லாம்?”

அப்பா அமைதியாக நின்றார் போலும். அவருடைய கண்களில் நிச்சயமாகக் கண்ணீர் பெருக்கெடுத்திருக்கும். எனக்குத் தெரியும், அப்பா லேசாக உணர்ச்சி வசப்பட்டாலே முகம் சிவந்து போக உடல் குலுங்க அழுது விடுபவர். இத்தகைய அதிர்ச்சியான வாசகங்களை எப்படி எதிர் கொள்கிறார்?

“நாளைக்கு நீ வந்து பெரியவர் கிட்ட சொல்ற; என்ன?” என்றபடி அவர்கள் கிளம்புவது தெரிந்தது. அவர்களை அனுப்பி வெளிக்கதவைச் சார்த்திய கையோடு அப்பா அவசரமாக மாடிப் படிகளில் ஏறத் தொடங்குவது தெரிய நான் வேகமாகத் திரும்பி வந்து அறைக் கதவினைச் சார்த்திக் கொண்டு கட்டிலில் படுத்துக் கொண்டேன்.

அப்பா அறையின் வாசலில் வந்து நின்று “காயத்ரி” என்று என்னை மெல்லிய குரலில் அழைத்தார்.

நான் பதில் சொல்லக் கூடாது என்பதில் பிடிவாதமாக மூச்சினைக் கூட விட மறந்து இறுகிப் போயிருந்தேன்.

அப்பா சில விநாடிகள் அங்கேயே நின்றிருந்து விட்டு மீண்டும் ஒருமுறை என்னை அழைத்துப் பார்த்து விட்டு என்னிடமிருந்து பதில் இல்லாததில் திருப்தி கொண்ட வராகவோ என்னவோ படியிறங்கிப் போவதை என்னால் உணர முடிந்தது.

என் கண்களில் குபுக்கென்று நீர் வந்து முட்டியது.

அப்பா! அப்பா! என் கல்யாணத்தில் உங்களுக்கு இப்படிப்பட்ட சிரமங்கள் இருந்திருக்கிறதா? நான் யோசிக்கவே இல்லையே!

முதலில் இது பெரிய இடமாகத் தெரிகிறதே, உங்களால் சமாளிக்க முடியுமாப்பா என்று நான் தயங்கியபோது லட்சக்கணக்கில் சேமிப்புகள் இருப்பதாகவும் பணம் ஒரு பிரச்னையே இல்லை என்றும் சொல்லி என் வாயினை அடைத்து விட்டீர்களே! அது பொய்தானா?

நானும் அதனை அப்படியே நம்பி விட்டதில் கூட என்னுடைய சுயநலம்தான் இருந்ததோ? எப்படியாவது பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட்டுப் போய்விட வேண்டும் என்கிற ஆசை எனக்குள்ளும் இருந்ததோ? அதோடு என்னைப் பார்க்க வந்த இவரைக் கடைக்கண்ணால் பார்த்து மயங்கி இருந்ததில் அப்பாவைப் பற்றி முழு அக்கறையுடன் சிந்திக்க மறந்து விட்டேனோ?

ஆமாம்! இல்லையென்றால் 'எங்கே இருக்கிறது சேமிப்பு? என்னிடம் காட்டுங்கள் பார்க்கலாம்' என்று நான் துளைத்தெடுத்திருக்க வேண்டுமே! திருமணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் எதிர்பார்த்திருந்ததைவிடப் பெரும் செலவுகளாக வந்த ஒவ்வொரு கணத்திலும் அப்பா சிறிதும் முகம் சுளிக்காமல் நோட்டு நோட்டாக எடுத்து வீசியபோதெல்லாம் கூட இதெல்லாம் அவருடைய கடமை தான் என்பது போல் அமைதியாக வேடிக்கை பார்த்தேனே, எவ்வளவு சுலநலமி நான்!

மெத்தையின் மென்மை உறுத்தியது.

மெல்ல எழுந்து கட்டிலில் இருந்து கீழே இறங்கி உட்கார்ந்து முட்டுகளைக் கட்டிக் கொண்டு முகம் புதைத்தேன். தேம்பி அழத் தொடங்கியதில் உடம்பு குலுங்கியது.

இந்த மூன்று ஆண்டுகளாக அடைபடாத கடன் ஒருபுறம் இருக்க, என் ஓராண்டு புகுந்த வீட்டுச் சீர்கள், தேனிலவு, சீமந்தம், வளைகாப்பு, பிரசவம், பேரனுக்குப் பெயர் சூட்டு விழா, மொட்டை அடித்து காது குத்தும் விழா, இவைகள் போக ஏகப்பட்ட நேர்த்திக் கடன்களுக்கான யாத்திரைகள் என்று

சாண் ஏறினால் முழம் சறுக்கும் செலவுகளைத் தவிர இந்தக் காலங்களில் ஒரு மகளாக நான் அவருக்கு என்ன கொடுத்திருக்கிறேன்!

குற்ற உணர்வு பிசைந்தெடுத்தது மனதை.

கடவுளே! நானும் ஓர் ஆண்பிள்ளையாகப் பிறந்திருக்கக் கூடாதா?

அப்பா! நீங்களாவது என்னுடைய பொருளாதார வசதி இவ்வளவுதாம்மா என்று என்னிடம் கை விரித்து ஒரு சாதாரண இடத்தில் என்னைப் பிடித்துக் கொடுத்திருக்கக் கூடாதா? அம்மா இல்லாத பெண் என்று நீங்கள் காட்டிய இரக்கத்தினை சுயநலப் பிரயோகம் செய்திருக்கிறேனே!

என்னவர் புரண்டு படுத்தார்.

அவர் நல்லவர்தான். என்னளவில் எந்தக் கஷ்டமும் தராமல் இத்தனை ஆண்டுகளில் என் வீட்டுக்கு நான் கண்களைக் கசக்கிக் கொண்டு வராதபடிக்கு என்னை ராணி மாதிரி வைத்துத் தாங்குகிறார். கோபத்தில் யோசித்தால் கூட அவர் மீது குற்றம் என்று சொல்ல என்னால் ஒரு விரல் கூட நீட்டமுடியாத நல்ல கணவர்.

அவர்குறித்து நான் தொலைபேசிப் பேச்சுக்களிலும் நேரிலும் சொல்லும் போதெல்லாம் அப்பாவின் கண்கள் பொங்கி சந்தோஷம் நீராக வழிந்து வார்த்தைகளை மூழ்கடிப்பதைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் உலகத்தையே வென்றுவிட்டதான திருப்தியில் நிறைந்திருக்கிறேன்.

ஆனால்... ஆனால்... அதெல்லாவற்றிற்கும் பின்னணியில் அப்பாவின் இந்த அவமானங்களும் கஷ்டங்களும் இருக்கின்றனவா?

என் ஒருத்தியின் சுகத்துக்காக, நல்வாழ்வுக்காகத் தன்னை இந்த அளவுக்கா அப்பா இறக்கிக் கொண்டிருக்க வேண்டும்?

அப்பா யாரிடம் கடன் வாங்கி இருக்கிறார்? எவ்வளவு? எப்போது வாங்கியது? இன்னும் எவ்வளவு பாக்கி வைத்து இருக்கிறார்? அதற்கு என்ன கெடு கொடுத்திருக்கிறார்?

இதெல்லாம் தெரிந்து கொள்ளாவிட்டால் என் தலையே வெடித்து விடும் போல் தோன்றியது.

ஆனால் அவை தெரிந்து என்ன செய்துவிட முடியும் என்னால்?

என்னவரிடம் சொல்லி அவற்றை அடைக்க வைக்க முடியுமா? இவருடைய சம்மதத்துடன் என் நகைகளைக் கழற்றிக் கொடுத்து அப்பாவை மீட்க வைக்க முடியுமா?

ஐயோ! இவர் அப்பா மீது வைத்துள்ள மரியாதையை அது குறைத்து விடாதா? அப்பாதான் அத்தகைய ஒரு உதவியை ஏற்பாரா?

முதலில் எனக்கு இந்த விஷயம் தெரிந்து விட்டது என்கிற விஷயமே ஜீரணிக்கக் கஷ்டமாக இருக்குமே அவருக்கு!

அந்தக் கடன்காரர்களை அனுப்பிய கையோடு இங்கே படியேறி அப்பா வந்தது அவர் மாடிப்படியின் உச்சியில் நிழலுருவாகப் பார்த்தது என்னைத்தானா என்ற அறிந்து கொள்ளும் ஆவலில்தானே? தன்னுடைய கஷ்டத்தை மகள் தெரிந்து கொள்வது தன்னுடைய கௌரவத்துக்கு இழுக்கு என்று நினைக்கும் அளவு கூட அப்பாவிடம் கர்வம் இருக்க வாய்ப்பு இல்லை. அது தெரிந்து தன் மகள் மனக் கஷ்டப்படக் கூடாதே என்றுதான் உருகுவார். அதனால்தானே தன் கஷ்டங்கள் குறித்து ஒரு கோடி கூட இன்று வரை காட்டிக் கொள்ளாமல் இருக்கிறார்? தம்பி கணேசனின் வாயையும் கட்டி வைத்திருக்கிறாரே!

இப்படிப்பட்ட அப்பாவுக்கு ஏற்ற மகள்தானா நான்?

அழுது குழம்பி சிந்தித்துத் தெளிவில்லாமல் நிமிர்ந்தேன். முகத்தை அழுந்தத் துடைத்தேன். பக்கவாட்டில் இருந்த கண்ணாடியில் பார்க்க கண்கள் சிவந்திருப்பது தெரிந்தது.

அப்பா பார்த்த மாத்திரத்தில் கண்டு கொள்வாரே நான் அழுதிருப்பதை!

மீண்டும் படுக்கையில் படுத்து கண்களை மூடிக் கொண்டு உறங்க முயற்சி செய்து பார்த்தேன். கொஞ்ச நேரமாவது கண்களைச் சும்மா மூடி இருந்தால் வெளுத்து விடாதா?

மாடியில் இருந்து இறங்கி வந்ததில் இருந்து அப்பாவை நேர்முகமாகப் பார்ப்பதை அவர் உணர்ந்து விடாதபடி தவிர்த்து வந்தேன். அவரும் என்னை சமயம் வாய்க்கும்

போதெல்லாம் கூர்ந்து பார்க்க முயற்சிப்பது புரியாமல் இல்லை.

“நல்லா தூங்கினியாம்மா?” என்று சாதாரணமாக விசாரிப்பது போல் கேட்டார்.

“நம்ம வீட்டு மாடி ரூமில்தான் தூக்கம் வராதவங் களுக்குமே தூக்கம் வருமே. எனக்கென்ன?” என்று சிரித்ததை எவ்வளவு தூரம் நம்பினார் என்று தெரியவில்லை.

அப்போதிருந்தே ஒரே யோசனையாக இருந்தது. இவருக்கு நான் உதவியாக வேண்டுமே. என்னுடைய நகையை இங்கே மறந்தது மாதிரி விட்டுச் சென்று விடலாமா? இந்தாங்கப்பா, நான் உங்களுக்குன்னு எதுவுமே தந்ததில்லை, இதையாவது வாங்கிக்கோங்க என்று கையில் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து விடலாமா? என்னவரிடம் சொல்லி கணேசனுக்கு செயின் போட்டு விடச் சொல்லலாமா? எதனைச் செய்தாலும் எந்தக் கோணத்தில் பார்த்தாலும் அப்பாவுடைய தன்மானம் என்கிற மெல்லிய இழைக்கு பாதகம் வராமல் இருக்க வாய்ப்பில்லை என்கிற உண்மை சுட்டது.

சே! பெண் பிறவி என்பதே கையாலாகாத பிறவி தானா?

அப்பாவுடனான கண்ணாமூச்சியைத் தொடர்வது கூடச் சிரமமாக இருந்தது. மறுநாள் காலை வரையிலான என்னுடைய மௌனம் அவரை முழுவதுமாக சமாதானப்படுத்தி விட்டது என்றுதான் தோன்றியது.

**கா**லை நாங்கள் அனைவரும் திருப்பரங்குன்றம் கோவிலுக்குப் போவதாகத் திட்டம். திருப்தியாக சாமிதரிசனம் எல்லாம் முடித்து சந்நிதியின் சுற்றுப் பிரகாரத்தில் வந்து அமர்ந்தோம்.

“என்ன மாமா! இங்கே என்ன வேண்டுதல் வைச்சிருந்தீங்க?” என்று கேலி செய்தார் என்னவர்.

“போங்க மாப்பிள்ளை! தலைப்பிரசவத்தில் காயத்ரி கஷ்டமில்லாமல் பிள்ளை பெற்றுத் தேறினால் இங்கே உங்களை அழைச்சு வர்றதா வேண்டி இருந்தேன். ரொம்ப நாளா தடைப் பட்டுட்டே இருக்கேன்னு கவலையில் இருந்தேன். இன்னிக்கு அது திருப்திகரமா முடிஞ்சதில் நிம்மதி” என்ற அப்பா, தன் சிறு கைப்பையினைத் திறந்தபடி “கணேசா! குழந்தையை உன் கையில் வாங்கு”, என்றார் என் தம்பியிடம்.

அவன் ஏற்கெனவே திட்டம் புரிந்தவன் போல் என்னிடமிருந்து என் மகனை வாங்கி ஏந்திக் கொள்ள, பையினுள்ளிருந்து ஒரு வெள்ளி அரைஞாண் கொடியினை வெளியே எடுத்தார் அப்பா.

“இந்தாடா, தாய்மாமா! உன் மருமகனுக்கு இதனை மாட்டி விடு” என்றவராக அவனிடம் நீட்டினார்.

“அப்பா! எதுக்குப்பா இதெல்லாம்?” என்றேன் பதற்றமாக. என் ஞாபகம் சரி என்றால் முதன் முறையாக அப்பா என் பொருட்டாகச் செய்யும் உபகாரத்தினை மறுக்கிறேன்.

அவர் பளிச்சென்று என் பக்கமாகத் திரும்பி என்னைப் பார்த்த பார்வையில் வெளிப்பட்ட ஏராளமான கேள்விகளின் சங்கடப் பின்னணியில் சிக்குண்டு விடுவேனோ என்கிற பதற்றத்தில் தொடர்ந்து வார்த்தைகள் வெளிப்படுகின்றன என் வாயிலிருந்து.

“வெள்ளியில் வாங்கிக் குடுத்து தப்பிச்சுக்கலாம்னு நினைக்காதீங்க. தங்கத்துல அரைஞாண் கொடி மாட்டி விடுங்கன்னு சொல்ல வந்தேன்”

“ஏய்! உனக்கு ரொம்பவும்தான் பேராசை” என்று என்னவர் சிரிக்க அவருடன் சேர்ந்து சிரித்தார் அப்பா. “செஞ்சிட்டாப் போச்சு” என்ற அவருடைய கண்கள் நீருடன் பளபளக்க, என் கண்களில் நீர் கோர்த்து விடாமல் கட்டுப் படுத்தப் போராடிக் கொண்டிருந்தேன் நான்.

# முதல் தேதி தேவதை

இன்று முழுவதும் வேகமாக வேலை பார்த்தால்கூட முடியாது என்று மேலாளர் நினைத்திருந்த ரிப்போர்ட்டினை நண்பகலுக்குள் முடித்துக் கொடுத்தேன்.

அவர் நம்ப முடியாத ஆச்சர்யத்துடன் அதனை வாங்கி ஆதியோடந்தமாகப் பார்த்து விட்டு, "உனக்கு என் ராஜ்யத்தில் பாதியைப் பட்டயம் எழுதித் தருகிறேன்", என்று குதிக்காத குறை. சும்மாவா அவருடைய பதவி உயர்வைத் தீர்மானிக்கப் போகும் விஷயமாயிற்றே.

இரண்டரை மணிக்கு அதனை மேலிடத்துக்குத் தொலைநகலாகவும் அனுப்பிய பிறகு சாதித்து விட்ட திருப்தியில் அவர் இருந்த நேரத்தில் அரை நாள் விடுப்பு வேண்டி நின்றேன்,

என்னை ஒரு விநாடி குறும்பாகப் பார்த்தவர், "என்னுடைய நாத்தனார் ஊரிலிருந்து வந்திருக்காங்க சார். இன்னிக்கு நைட் திரும்பிப் போறாங்க. அதான்..." என்று

இழுத்ததைக் கேட்டதும், "விடுப்பு எதற்கு? நான் பர்மிஷனே கிராண்ட் பண்றேன். போயிட்டு வாங்க", என்று அனுப்பி வைத்தார்.

அவசரமாக வெளியே வந்து ஆட்டோ பிடித்தேன்.

கைப்பையில் கொண்டு வந்திருந்த மதிய உணவு டப்பா கனத்தது. ரிப்போர்ட் முடிக்க வேண்டும் என்பதற்காகவே மதிய உணவையும் மறந்து வேலை செய்திருக்கிறேன். அப்போது தெரியாத பசி இப்போது லேசாக வயிற்றினைக் கிள்ளத் தொடங்கியது.

அலுவலகத்தில் சாப்பிட்டு விட்டுக் கிளம்பி இருக்கலாம். அந்த அளவுக்குக் கூட நேரம் விரயம் செய்ய விரும்பவில்லை நான். ஏற்கெனவே நேற்று முழுதும் தனியாக வீட்டில் இருந்த ராதாவுக்கு இன்றைக்காவது கூடுதல் நேரம் கம்பெனி கொடுக்க வேண்டும் என்கிற உத்வேகம் என்னை விரட்டியது.

வீட்டுக்கு வந்து படியேற, கதவில் தொங்கிய பூட்டு தான் என்னை வரவேற்றது.

ராதா எங்கே போயிருப்பாள் என்கிற கேள்வியோடு கதவைத் திறந்து உள்ளே போனேன்.

வீட்டில் எல்லாம் அப்படி அப்படியே கிடந்தன. காலைக் குப்பையும் அடுக்களையில் கழுவ வேண்டிய பாத்திரக் குவியலும் என்னைப் பார்த்து இளித்தன. சாப்பாடு மேசை மீது காலையில் நான் எடுத்து அடுக்கி வைத்துச் சென்றிருந்த உணவுப் பாத்திரங்கள் பாதி திறந்தும் மூடாமலும் கிடக்க

பக்கத்தில் ராதா சாப்பிட்ட தட்டு அரை குறையாகக் காய்ந்து கிடந்தது.

சாப்பாட்டு மேசையை ஒழுங்கு பண்ணினேன்.

ராதா சாப்பாடு முடித்து விட்டுத் தான் சென்றிருக்கிறாள் என்றால் வேலைக்காரி வந்திருப்பாளே! அவள் மூலமாகப் பாத்திரங்களைக் கழுவி வீட்டினைப் பெருக்கித் துடைக்க வைத்து விட்டுப் போயிருக்கலாமே என்று தோன்றியது.

நானும் அவரும் காலையிலேயே வேலைக்குப் போகிறவர்கள் என்பதால் வேலைக்காரி காலை ஆறரை மணிக்கு வந்து விடுவாள். பாத்திரங்களைத் துலக்கிக் கொடுத்து விட்டு நான் சமையல் செய்து கொண்டிருக்கும் போது வீடு பெருக்கித் துடைத்து விட்டுச் செல்வாள். இப்போது ராதா வந்திருப்பதால் அவளுடைய தூக்கத்தைக் கெடுக்க வேண்டாம் என்கிற எண்ணத்தில் வேலைக்காரியை மத்தியானம் ஒரு மணிக்கு வரச் சொல்லி இருந்தேன். நேற்று அப்படித் தான் வந்து எல்லா வேலைகளையும் முடித்துச் சென்றிருந்தாள். இன்று என்ன ஆனது?

குவிந்திருக்கும் பாத்திரக் குவியல் அதிர்ச்சியைத் தர கண்களில் நீர் முட்டிக் கொள்ளாத குறை. சேலையைக் கூட மாற்றிக் கொள்ளத் தோன்றாமல் அப்படியே அவற்றைக் கழுவத் தொடங்கினேன். எல்லாவற்றையும் கழுவிக் கவிழ்த்து வீட்டினைப் பெருக்கி சுத்தம் செய்து முடிக்க மணி நாலரை ஆகி விட தலை குப்பென்று வலித்தது. சாப்பிடாதது ஞாபகம் வந்தது. அடி வயிற்றில் லேசாகப் பிரட்டிக் கொண்டிருப்பது போன்ற உணர்வு மேலோங்கி இருந்ததால் இப்போது சாப்பிடவும் பிடிக்கவில்லை.

சூடாகக் காஃபி குடிக்கலாம் என்று பாலினை ஃப்ரிட்ஜில் தேடினால் காணோம்.

அது அடுப்பு மேடையிலேயே ஓரத்தில் இருந்தது. "சூடு ஆறியவுடன் மறக்காமல் ஃப்ரிட்ஜில் போட்டுவிடு" என்று ராதாவிடம் காலையில் அவளுக்கு காஃபி போட்டுக் கொடுப்பதற்காகச் சூடு படுத்திய பிறகு சொன்ன ஞாபகம். மறந்து விட்டாள் போலிருக்கிறது.

எடுத்து முகர்ந்து பார்த்தேன். லேசாகப் புளித்த வாடை வந்தது.

எனக்கு அழுகை வந்தது. அதனையும் கொட்டி விட்டு கட்டிலில் போய் விழுந்தேன்.

**ச**னிக்கிழமை அவருடைய தங்கை ராதா வருகிறாள் என்று அவர் சொன்ன போது கொஞ்சம் அயர்ச்சியாகத்தான் இருந்தது. மறுகணமே உள்ளுக்குள் 'வீடான வீட்டுக்கு ஒரு விருந்தாளி வரக் கூடாதா, என்ன பெண் நான்! இப்படி எரிச்சல் பட ஆரம்பித்து விட்டேனே' என்கிற மனசாட்சியின் கண்டனக் குரல் எழ என்னை நானே கடிந்து கொண்டு அவளை வரவேற்க மனதளவில் தயாராகத் தொடங்கினேன்.

என்னுடைய அயர்ச்சிக்குக் காரணம் விருந்தினர் வேண்டாத கஞ்சத்தனம் அல்ல. உடல் நல ஒத்துழைப்பின்மை. வாரத்தின் ஐந்து நாட்களும் தினமும் நாற்பது கிலோ மீட்டர், பஸ், ரயில், நடை என்று பயணம் செய்து தனியார் கம்பெனியின் வேலைப் பிழிவுகளுக்கு ஈடு கொடுத்து தினசரி அலுப்பினைக் கொஞ்சம் கொஞ்சமாக உடலினுள் சேகரித்து வைத்துக் கொண்டு, ஓய்வு கேட்கும் பாகங்களை "இன்னும்

இரண்டு நாள் பொறுடா, இன்னும் ஒரே நாள் தான். இந்தா வந்தாச்சு சனி ஞாயிறு" என்று குழந்தைக்கு நிலாவைக்காட்டி ஏமாற்றுவது போல் வாரக் கடைசி வரை தள்ளிக் கொண்டு வந்து அந்த இரண்டு நாட்களில் தான் அக்கடா என்று படுத்து எழ முடிகிறது.

சரியாகச் சொல்வது என்றால் அந்த இரண்டு நாட்களிலும் கூட அப்படி ஒன்றும் முழு ஒய்வு கிடைத்து விடுவதில்லைதான். அலுவலகம் சென்று வருவதும் ரேஷன் கார்டில் குடும்பத் தலைவன் என்கிற பொறுப்பான ஸ்தானத்திற்கும் குழந்தையின் இனிஷியல் என்கிற ஸ்தானத்திற்கும் தன்னுடைய பெயரைத் தருவதையும் தவிர ஆணாகிய தனக்கு வேறு பொறுப்புகள் கிடையாது என்று இருக்கிற புருஷன் விரும்பிக் கேட்கும் பலகாரங்களைச் செய்து தருவது, வீட்டினை ஒழுங்கு செய்வது, ஒருவார அழுக்குகளை மிஷினில் போட்டு எடுப்பது, மாவு அரைத்து வைப்பது, வாரச் சந்தையில் காய்கறிகள் வாங்குவது, வேறு வகையில் ஒதுக்கி வைத்திருந்த வேலைகளைப் பார்ப்பது என்று அந்த நாட்களும் கூடக் கண்மூடிக் கண் திறக்கும் இடைவெளியில் பறந்து தான் விடுகின்றன. ஆனாலும் அந்த நாட்களில் எதையும் மணிபார்த்து மணிபார்த்துச் செய்யும் விரட்டல் இல்லாமல் இருப்பது மட்டும் ஓர் ஆறுதல்.

இந்த வாரம் ஆஸ்டலில் இருக்கும் பையனைப் பார்த்து வரும் திட்டம் இருந்தது. அதனை அடுத்த வாரத்துக்கு ஒத்தி வைத்துக் கொள்ளலாம். நல்ல வேளையாக அவனுக்கு முன்கூட்டியே நாங்கள் வருவது குறித்துத் தெரிவிக்க வில்லை. இல்லையென்றால் இது மாதிரியான திடீர்

ஏமாற்றங்களை எல்லாம் ஏழுவயசுப் பையன் எப்படித் தாங்குவான்?

இந்த வாரம் அந்த சுதந்திரமும் கொஞ்சம் இடைஞ்சல் படுகிறதே என்கிற கணநேர ஏமாற்றத்தையும் மீறி ராதா வந்த போது சிரித்த முகத்துடன்தான் வரவேற்றேன்.

வந்ததும் வராததுமாகக் கணவன் பற்றிய குற்றப் பத்திரிக்கையை வாசிக்க ஆரம்பித்தாள். "ஒரு இடத்துக்கு விடறதில்லை அண்ணி. அண்ணா எல்லாம் உங்களுக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுத்து வச்சிருக்கான். இங்க வீட்டுக்கு வரும்போதெல்லாம் அதைக் கவனிக்காமலா இருக்கார். தானாகவும் தெரியாது; சொல்லிக் கொடுத்தாலும் ஏறாது. சரியான மட ஜென்மம். எனக்குன்னு எங்கண்ணன் தேடிக் கண்டுபிடிச்ச மாப்பிள்ளை" என்று ஆரம்பித்து ஒருபாட்டம் பேசித் தீர்த்தாள். இடையே இரண்டு காஃபியையும் வாங்கிக் குடித்துக் கொண்டாள்.

"சரி, உன் பேச்சுக்கு முடிவே இருக்காது. முதலில் பிரயாண அலுப்பு போகக் குளிச்சிட்டு சாப்பிடு. அப்புறம் பேசலாம்" என்றார் என்னவர்.

"இன்னிக்கு என்னண்ணி காலைச் சாப்பாடு?"

ராதாவுக்கு பூரி கிழங்கு என்றால் உயிர். அதனைத் தான் செய்திருந்தேன்.

அவள் முகமெல்லாம் மலர்ச்சி.

"நான் சாப்பிட்டு ஒரு தூக்கம் போடுக்கறேனே, அப்புறமா குளிக்கிறேன்" என்றாள்.

4

கிட்டத்தட்ட அன்று பகல் முழுவதும் தூங்கித் தூங்கியே கழித்தாள்.

நான் வீட்டு வேலைகளை எந்தவித இடையூறும் இல்லாமல் செய்து முடித்தேன்.

இரவில் டி.வி பார்த்தபடி இருக்கும்போதே எனக்குக் கொட்டாவி தொடர்ச்சியாக வந்து தூக்கத்துக்கு அழைக்க அவள், "நான் மட்டும் தனியா கொட்டக் கொட்ட உட்கார்ந்து எப்படிண்ணீ டிவி பார்க்க முடியும், நீங்களும் கம்பெனி கொடுங்க", என்று பிடிவாதமாக என்னைத் தூங்க விடாமல் தொந்தரவு செய்து பேசிக் கொண்டிருந்தாள். அவள் புகுந்த வீட்டின் அறுவைக் கதைகளை எந்த வித சுவாரஸியமும் இன்றிப் பேசியே கொன்றாள்.

கிட்டத்தட்ட இரண்டரை மணிக்கு அவள் சாய்ந்து உறங்கி விட எனக்குத் தூக்கம் வருவேனா என்று அழிச்சாட்டியம் செய்து கொண்டிருந்தது. உறக்கம் வராத எரிச்சல் ஒருபுறம் இருக்க, காலையில் எழுந்து காஃபி டிஃபனுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமே என்கிற பதற்றம் இன்னொருபுறமாக என் தூக்கத்தை நெருங்க விடாமல் செய்து கொண்டிருந்தது.

காலையில் கண் எரிச்சலுடன் நான் எல்லாம் செய்து வைத்து உட்கார்ந்திருக்க அண்ணனும் தங்கையும் பதினொரு மணிக்குத்தான் எழுந்தார்கள்.

கிட்டத்தட்ட நேற்றைய நிலையில்தான் இன்றும் கழிந்தது. என்னுள் பாக்கி இருக்கும் உறக்கம் கடன்காரனாக நச்சரித்துக் கொண்டிருந்தது.

பகல் உணவுக்குப் பிறகு அண்ணனும் தங்கையும் பேசிக் கொண்டிருந்தபோது நான் கொஞ்சம் கண் அயர்ந்து போக, "இதுக்குத்தாண்ணே, உங்க வீட்டுக்கு வர்றதுக்கே எனக்கு யோசனையா இருக்கும். அண்ணி கம்பெனியே குடுக்க மாட்டாங்க. எப்போ பார்த்தாலும் தூக்கம் தூக்கம் தான் இவங்களுக்கு", என்றாள் ராதா.

"அதானே, நீ எந்தக் காலத்துல பகல்ல தூங்கின? ராதா வந்திருக்கும் போது ஏன் இப்படிப் பண்ற?" என்றார் இவரும் இங்கிதம் தெரியாமல் அவளை வைத்துக் கொண்டே.

அசட்டுப் புன்னகையுடன் தூக்கத்தை ஒத்தி வைத்து விட்டு அவர்களுடன் உட்கார வேண்டியிருந்தது.

அவள் அன்று இரவு போய் விடுவாள் என்கிற எதிர்பார்ப்பு என்னுள் இருந்தது. ஆனால் பிரயாணம் குறித்தோ டிக்கெட் குறித்தோ எந்தப் பேச்சும் எழவில்லை.

மாலையில் அவள் குளிக்கப் போயிருந்தபோது அவரிடம் இது குறித்து நான் மெதுவாகக் கேட்க, "ஏன், என் ஒரே தங்கை தன் அண்ணன் வீட்டில் இரண்டு நாட்களுக்கு மேல் தங்க நினைப்பது கூடத் தவறா?" என்று கேட்டார் வெடுக்கென்று.

இது ஒன்றும் தங்கை மீதான பீறிட்டு எழும் பாசத்தில் வரும் வார்த்தைகள் அல்ல என்று எனக்குத் தெரியும். மனைவி மீதான நியாயமற்ற சலிப்புகளையும், உள்ளூர பொருமி வைத்திருக்கும் கையாலாகாத கோபங்களையும் வெளிப் படுத்த நினைக்கையில்தான் எல்லா ஆம்பளைகளுக்கும்

தங்கைமீதும் தாயின்மீதும் பாசம் பொங்கும். எங்கம்மா என் தங்கை என்பது போன்ற வசனங்கள் தெறிக்கும். முந்தானைக் கேடயம் இன்றி இவர்களால் எந்த உணர்வையுமே வெளிப்படுத்த முடிவதில்லை என்பது எவ்வளவு பரிதாபமான விஷயம்!

அவரைப் பரிதாபமாகப் பார்த்தேன்.

"செவ்வாய்க்கிழமை இரவுக்குத்தான் டிக்கெட் எடுத்திருக்கு. அன்னிக்குத்தான் போறா", என்றார்.

அன்று இரவு இரண்டாம் ஆட்டம் சினிமா போக வேண்டும் என்று ஒற்றைக் காலில் நிற்காத குறையாக ராதா வேண்ட என்னுடைய மறுப்புகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவே இல்லை. "அப்படின்னா நாளை பகல் சாப்பாடு ஓட்டலில்தான்", என்றேன்.

"நல்லா இருக்கே!" என்று சிரித்தாள் ராதா. "ஒண்ணுக்கு ரெண்டு பொம்பளைங்க இருக்கோம். ஓட்டல்ல சாப்பாடு எடுக்கறதாவது. சம்பாதிக்கிறோம்ங்கற ஏத்தம் ரொம்பத் தாண்ணி இருக்கு உங்களுக்கு."

மறுநாளும் தூக்கம் முழுமையாகாத களைப்புடன் காலை வேலைகளை முடித்துவிட்டு வேலைக்குப் போய் வந்தேன். இரவு ஏழரை ஆகி விட்டது வீடு திரும்ப.

ராதா லேசான கோபத்தில் இருந்தாள்.

"ஏண்ணி! நானே எப்பவோ ஒரு தடவைதான் வர்றேன். நீங்க லீவு போட்டு என்னோட இருந்தா என்ன? தனியா இருக்க எவ்வளவு போரடிக்குது?" என்றாள்.

‘நீ பகல் முழுவதும் தூங்கத்தானே செய்கிறாய்?’ என்றோ ‘நீ வருவது ஒன்றும் எப்பவோ ஒரு தடவை அல்ல, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை’ என்றோ சொல்லிக் காட்டுவது வந்த விருந்தினை அவமதிப்பதாகி விடும் என்கிற இங்கிதத்தால் ‘சாரிம்மா, ஆஃபீஸில் லீவு கேட்க முடியாத சூழ்நிலை. இன்னிக்குக் கூட வீட்டிற்குக் கொண்டு வந்து பார்ப்பது மாதிரியான ஒரு முக்கிய வேலை. உனக்காகத் தான் அதை இங்கே எடுத்து வராமல் ஆஃபீஸிலயே முடித்துவிட்டு வந்தேன். சரி, இப்போதான் வந்திட்டேனே. எவ்வளவு நேரம் வேணுமானாலும் பேசிட்டு இருக்கலாம்” என்று சமாதானம் செய்தேன்.

“ஆமா, பொல்லாத வேலை! எங்க ஆஃபீஸ்லயும்தான் லேடீஸ் வேலை செய்யறாங்க. என்ன பண்றாங்க, எப்படிப் பண்றாங்கன்னு பார்க்காமலா இருக்கேன்?” என்று கமெண்ட் அடித்தார் என்னவர்.

“அது உங்க மேனேஜ்மெண்ட்டோட பலவீனம். எங்க ஆஃபீஸ் அந்த மாதிரி இல்லை”, என்று சிரித்தபடியே சொல்லி விட்டு அடுக்களைக்கு நகர்ந்தேன்.

ராதா அடிப்படையில் சரியான சோம்பேறி. தான் காஃபி குடித்த தம்ளரைக் கூட அலம்பு தட்டம் வரை கொண்டு போட வேண்டும் என்று எண்ணாமல் அந்த இடத்திலேயே கீழே வைத்து விட்டு டிவி பார்ப்பாள். ஒரே பெண் என்று செல்லம் கொடுத்து வளர்த்துக் கெடுத்தார்கள் என்பதோடு அவள் கணவர் தானே வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் பொறுப்பாகப் பார்த்துக் கொள்ளும் விதமாய் அமைய அவளுக்குத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டிய

அவசியத்தையே வாழ்க்கை உருவாக்கித் தரவில்லை. சிலர் வாங்கி வரும் வரம் அப்படி.

'பக்கத்து வீட்டு அக்காவுடன் மாட்னி சினிமா போனேன்; நேரமாகி விடும் என்று வேலைக்காரியிடம் நாளை வரச் சொல்லி அனுப்பி விட்டேன்' என்கிற சமாதானங்களுடன் ஆறரை மணிக்கு வந்து சேர்ந்தாள் ராதா. "நீங்க எனக்காக லீவு போட்டுட்டு வந்ததா சொல்லிட்டு தூங்கிட்டிருக்கீங்க?" என்றாள் கூடுதலாக. "நல்லா தூங்கறீங்க அண்ணி. ஆனா எப்போ கேட்டாலும் டயர்டா இருக்கறதாவும் சொல்லிக்கிறீங்க" , என்று கமெண்ட் வேறு.

சிரித்துக் கொண்டேன்.

புகைவண்டி நிலையத்தில், "அடுத்து எப்போ வருவ?" என்று கேட்டார் என்னவர்.

"போதும்ண்ணே, இனிமே நீ வேணா என்னை வந்து பாரு. நான் இங்கே வந்தா செம போர்தான். பேசறதுக்கும் கம்பெனி கிடையாது. லீவு நாளில் வந்தாக்கூட அண்ணி வீட்டு வேலைதான் முக்கியம்னு இருக்காங்களே ஒழிய என் கூட உட்கார்ந்து பேசறதிலலை. ஆஃபீஸ் நாளிலோ லீவு போடக்கூட முடியாதபடி உத்தியோகத்துல இருக்காங்க. எனக்கு அண்ணன் அண்ணின்னு ஆத்த மாட்டாம வர்றேன். வந்து போகும் போதெல்லாம் ஒவ்வொரு தடவையும் ஏன்தான் வந்தோமோங்கற ஏக்கத்தோடதான் போற மாதிரி இருக்கு", என்று அவள் புலம்பிக் கொண்டிருக்கும் போதே ரயில் கிளம்ப எனக்கு அப்பாடா என்றிருந்தது.

அந்தக் கணத்திலிருந்து இவர் உர்ரென்று ஆகி விட்டார். வீடு வரும்வரை ஏதும் பேசவில்லை. வீட்டினுள் நுழைந்ததும்,

"இருந்தாலும் என் தங்கையை ஒவ்வொரு தடவையும் இப்படித் தான் நீ அவமானப்படுத்தி அனுப்பற", என்றார் கோபமாக.

என் கவலை எல்லாம் நாளைக் காலையில் வேலைக்காரி வர மாட்டாளே; ராதா அவளிடம் தான் ஊருக்கு போவதைச் சொல்லாததால் வழக்கம் போல் மத்தியானம் வந்து பூட்டிய வீட்டினைப் பார்த்துப் போய் விடுவாளே; அவளுக்குத் தெரிவிக்க வேண்டுமே என்பதில் இருக்க, "நான் பேசப்பேச இவ்வளவு அலட்சியமா இருக்கற? எல்லாம் சம்பாதிக்கிற திமிர்", என்றார்.

"வேணும்னா வேலையை விட்டு விடவா?" என்று என்னால் கேட்டுவிட முடியும். அது என் திமிருக்கான உயர் பரிமாணமாகத்தான் எடுக்கப்படுமே ஒழிய வேறு பலன் தரப் போவதில்லை. மௌனம் உத்தமம். இவர் இந்தக் கோபத்துடன்தான் இருப்பார், முதல்தேதி வரைக்கும். தெரிந்ததுதானே!

☸ ☸ ☸

# மரியாதை

இரவு நெடு நேரம் தூக்கமில்லாமல் புரண்டிருந்ததன் விளைவு காலை எழ தாமதமானதோடு கண்களிலும் எரிச்சல் பாக்கி இருந்தது. அவர் முன்னமேயே எழுந்து விட்டார் போலும். படுக்கையை விட்டு அலுப்புடன் எழுந்து தோட்டத்துப் பக்கம் போனேன்.

அப்பா வழக்கம்போல் வாக்கிங் போய் விட்டார் என்று தெரிந்தது. நான் எனக்கு மிகவும் பிடித்தமான அந்த வேப்ப மரத்தடியில் இருந்த மேடையில் போய் உட்கார்ந்து முட்டினைக் கட்டிக் கொண்டு வெறித்தேன்.

சே! இன்னும் ஓரிரண்டு மணி நேரத்தில் கிளம்பியே தீர வேண்டும். பிறந்த வீட்டின் தற்காலிக சுகந்தம் மறந்து புகுந்த வீட்டின் நிரந்தர சுவர்களுக்குள் மீண்டும் அடைக்கலமாக வேண்டும். அது ஒன்றும் சிறை அல்லதான். மாமியார் நாத்தனார் தொல்லைகளெல்லாம் இல்லாத தனிக் குடித்தனம்தான். இருந்தாலும் இன்னும் ஒட்டுதல் ஏற்படாத இடைவெளி இருக்கத்தான் செய்தது. பக்கத்து வீட்டுக் காரர்களில் இருந்து இவருடைய அலுவலக நண்பர்களின்

மனைவிகள் என்று எல்லோரும் நன்றாகவே பழகினாலும் ஏதோ ஒரு வித பிடிப்பற்ற, உரிமை ஏற்படாத தனிமை.

"நாளானால் எல்லாம் சரியாகி விடும்டா" என்றே தேற்றிக் கொண்டிருக்கிறார் கடந்த ஆறு மாதங்களாக. திருமணத்திற்குப் பிறகு முதன்முறையாக ஒருவார விடுப்பில் எங்கள் வீட்டுக்கு வந்திருக்கிறோம்.

அவரிடம் நேற்றெல்லாம் எத்தனையோ முறை கெஞ்சிப் பார்த்து விட்டேன். விடுமுறையை நீட்டிக்கவே மாட்டேன் என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டார். ஒருவாரம் ஓடியதே தெரியாமல் ஓடி விட்டது. இன்னும் அம்மாவிடமும், அண்ணன், அண்ணி, தங்கை என்று எல்லோரிடமும் நிறையப் பேச வேண்டியது பாக்கி இருப்பது போல் ஓர் உணர்வு நெஞ்சினை அடைத்துக் கொண்டிருந்தது. அப்பாவிடம் பேசவே இல்லை என்பதுபோல் இருக்கிறது.

"இந்த உணர்வுகள் இருந்து கொண்டேதான் இருக்கும்டா. உறவு இன்னும் உயிர்ப்புடன் இருப்பதற்கான அடையாளம்தான் இந்தத் திணறல். இதற்காக சந்தோஷப்படு. இது நம்முடைய அடுத்த வரவிற்கான வரவேற்புப் பத்திரம். அடுத்த மாசம் இன்னொரு வாரம் விடுப்புக்கு ஏற்பாடு செய்து கொண்டு வரலாம்."

"இன்னும் மூணே மூணு நாளுங்க."

"வேணாம்டா. அந்த மூன்று நாட்கள் உனக்கு எந்த விதத்திலும் நிறைவு தரப் போவதில்லை. அதோடு என்னை நம்பி அங்கே ஏராளமான வேலைகள் காத்திருக்கு. எப்போது விடுப்பு எடுத்தாலும் சொன்ன நாளில் திரும்பி

வந்து சேருவேன் என்கிற இமேஜை இதுவரை நான் என்னுடைய மேலதிகாரிகளிடம் காப்பாற்றி வந்திருக்கிறேன். அர்த்தமில்லாத விஷயத்திற்காக அதில் சமரசம் செய்ய நான் தயாரில்லை."

"என்னங்க, தனியார் உத்தியோகமா மேலதிகாரிகளுக்கு பயப்பட? அரசாங்க உத்தியோகம்தானே, அதுவும் நீங்க கொஞ்ச வயசிலயே பெரிய பதவிக்கு வந்திட்டவர்தானே? யார் உங்களைக் கேள்வி கேட்க முடியும்?"

"என் மனசாட்சி" என்றார் ஒற்றைச் சொல்லில் அழுத்தமாக.

இவரிடம் மேற்கொண்டு பேசிப் பயனில்லை.

மரங்கள் அசைந்து காற்று மென்மையாகத் தழுவியது.

பிறந்தது முதல் ஒவ்வொரு மணித்துளியும் அனுபவித்துணர்ந்து வாழ்ந்த வீடு. நான் வீட்டினுள் இருந்த நேரத்தைவிட இந்தத் தோட்டத்தில் இருந்த நேரம்தான் அதிகம். இந்த சிமிண்ட் மேடைகூட அப்பா எனக்காகவே கட்டி வைத்தார். பள்ளி முடித்து வந்து வீட்டுப் பாடங்களை இங்கே உட்கார்ந்துதான் எழுதி முடிப்பேன். சனி ஞாயிறுகளில் படிப்புகூட இங்கேதான்.

இந்தத் தென்னைமரம், வேப்பமரம், மாமரம், மகிழமரம், நந்தியாவட்டை ஐந்தும் நான் அறிந்து வளர்ந்தவை. வேறுபல பூச்செடிகளும் காய்கறிச் செடிகளும் அவ்வப்போது விருந்தாளியாய் வந்து போனவை. எனக்கு இந்த மரங்களின் அருகில் இருந்தாலே ஒருவித பாதுகாப்பு உணர்வு இருக்கும். பரீட்சைக்கு இந்தக் கேள்வி வருமாடா என்று கேட்டால்கூட

பரிபாஷையில் தலை அசைத்தோ பூக்களை உதிர விட்டோ சொல்லிக் கொடுத்திருக்கும் இந்த மரங்கள் அடங்கிய இந்த வீட்டில் இருந்து கல்யாணம் என்கிற பெயரில் அடியோடு பெயர்த்தெடுத்து சம்பந்தமில்லாத ஏதோ ஒரு வீட்டில் பதியம் போட்டு விட்டார்களே என்று நினைக்க அழுகை அழுகையாக வந்தது.

"நினைச்சேன், இங்கேதான் இருக்கியா? என்னடா டல்லா இருக்க? காஃபி குடிச்சியா?" என்று கேட்டபடியே அருகே வந்து நின்றான் அண்ணன்.

அவனை ஏறிட்டுப் பார்க்க கண்களில் நீர் குபுக் என்று வந்து கோர்த்துக் கொண்டது.

"என்னடா, ஊருக்குப் போகணுமேன்னு நினைச்சு கலங்குறியா?"

ஆமாம் என்பது போல் தலை அசைத்து வைத்தேன்.

"மாப்பிள்ளை இப்போதான் சொல்லிட்டிருந்தார். நீ ரொம்ப ஹோம்சிக்கா இருக்கறியாம். இன்னும் ஒருவாரம் நீ மட்டும் இங்கே தங்கிட்டு அடுத்த வாரம் வந்தாகூடப் போதும்னு சொல்லிட்டார். நானே உன்னைக் கொண்டு போய் விடறேன். நீ முகவாட்டமா இருக்காம அங்கே வந்து சிரிச்ச முகமா அவர் கிளம்பறப்போ வழியனுப்பு. வா"

என் முகம் கொஞ்சம் மலர்ந்தாலும் அவர் கிளம்புகிறாரே என்பதில் கொஞ்சம் ஏமாற்றம் இருக்கத்தான் செய்தது.

இன்னும் கொஞ்சம் முயற்சித்துப் பார்க்கலாம் என்று தோன்றியது. நான் மட்டும் நேற்று கேட்டதற்கே இந்த

அளவிற்கு இறங்கி வந்தவர் அப்பா பக்குவமாகச் சொன்னால் விடுப்பை நீட்டித்துக் கொண்டு இருக்க மாட்டாரா என்ன? அதுவும் அப்பாவுக்கு நான் என்றால் உயிர். அவருக்கு மட்டும் என்னைப் பிரிய மனம் வருமா என்ன? எனக்காவது இது குறித்த ஏக்கம் நேற்றுதான் வந்தது. அப்பா இரண்டு நாட்களுக்கு முன்பிருந்தே முகம் வாடிப்போய் இருக்கிறாரே. எனக்காக சிறப்பு முயற்சி எடுத்து அவரிடம் பேச மாட்டாரா?

முகத்தைத் துடைத்துக் கொண்டு எழுந்தேன். மரத்தை அண்ணாந்து பார்த்து, "சொல்லுடா, நாங்க ரெண்டு பேரும் இன்னொரு வாரம் இங்கே இருப்போமா?" என்று கேட்டுப் பார்த்தேன் ரகசியமாக.

மரம் ஆடாது அசையாது நின்றிருந்தது. அதற்குள் அண்ணியும் அங்கே வந்துவிட மேற்கொண்டு ஏதும் பேச முடியாமல் அவர்களுடன் நடந்தேன்.

அவர் குளித்துத் தயாராகி இருந்தார்.

"பத்து மணிக்கு மேல்தானே?" என்று கேட்டேன் மெதுவாக.

அவர் என்னைப் பார்த்து மென்மையாகச் சிரித்தார்.

"நான் உங்ககூட வரலியா?" என்று ரகசியமாகக் கேட்டேன்.

"உன் இஷ்டம். ஒரு வாரம் இருந்திட்டு வா."

"உங்களுக்குக் கோபம் இல்லையே?"

சிரித்தார். "சேச்சே"

"நீங்க கட்டாயம் கிளம்பித்தான் ஆகணுமா?"

"வேலை தாயே."

அப்பா வாக்கிங் முடித்து வந்தார். அவரை அவசரமாக உள்ளே தள்ளிக் கொண்டு சென்றேன்.

"அப்பா அவரை இன்னும் ஒரு மூணு நாள் மட்டும் இருந்துட்டுப் போகச் சொல்லுங்கப்பா. எனக்கு உங்க கூடல்லாம் ஒண்ணுமே பேசாத மாதிரி இருக்கு. என்னை மட்டும் ஒருவாரம் இருந்திட்டு வரச் சொல்றார். அவரும் இருந்தா நல்லா இருக்குமே."

''வாஸ்தவம்தான். எங்களுக்கு மட்டும் நீயும் மாப்பிள்ளையும் சேர்ந்து இன்னும் பத்து நாள் இங்கே இருந்தா கசக்கவா செய்யும்? ஆனா அவர் சொல்ற காரணமும் சரியாத் தானேம்மா இருக்கு? நாங்க இது சம்பந்தமா ரெண்டு நாள் முந்தியே பேசியாச்சு."

''சே! அப்போ நான்மட்டும் தனியாத்தான் இருக்கணுமா?" என்று சிணுங்கினேன்.

"யார் சொன்னது? நீயும் இப்போ அவர் கூடவே கிளம்பும்மா. அவர்தான் அடுத்த மாதம் கூட்டிட்டு வர்றேன்னு சொல்லி இருக்காரே", என்றார் அப்பா பளிச்சென்று.

அதிர்ந்து போய் நிமிர்ந்தேன். யார், அப்பாவா இப்படிச் சொல்வது?

நான் மட்டுமல்ல, அண்ணி, அண்ணன், தங்கை மூவரின் முகத்திலுமே அவருடைய பேச்சு அதிர்ச்சியை வரவழைத்திருந்தது. அம்மா மட்டும் வழக்கம்போல் என் புருஷன் எப்போதும் சரியாத்தான் செய்வார் என்கிற அமைதியுடன் இருந்தாள்.

"அப்பா! என்ன இது? அத்தானே அக்கா இங்கே இருந்துட்டு வர்றதுக்கு ஒத்துக்கிட்டாங்க. அவள்மேல உயிரையே வச்சிருக்கற நீங்களா அவளைத் துரத்தறீங்க?"

"அப்படித்தாம்மா உங்களுக்குத் தோணும். ஆனா கல்யாணத்துக்கப்புறம் புருஷன்கூட பிறந்த வீட்டுக்குப் போற பொண்ணு அவர்கூடவே திரும்பிப் போனா புருஷனோட மரியாதையைப் புகுந்த வீட்டில் காப்பாத்தறா; அதோட தன்னுடைய மரியாதையைப் பிறந்த வீட்டில் காப்பாத்திக்கறாள்னு புரிஞ்சுக்கற பக்குவம் இந்த வயசில் உங்களுக்கு இருக்காது. ஆனா அதைப் பக்குவமாச் சொல்லிக் கொடுத்து நடைமுறைப்படுத்தாமல், பாசம்ங்கற போர்வையில் உங்கள் அமைதியான எதிர்காலத்துக்கான முதல் கீறலுக்குக் காரணமா இருந்தா பெரியவங்க உயிரோட இருக்கறதுல அர்த்தமே இல்லைம்மா."

பெரியவர்கள் கால்களில் வணங்கி எழுந்து சிரித்த முகங்களுடன் விடைபெற்றுக் காரில் ஏறியபோது மனதில் கனம் இருந்தாலும்கூட அதனையும் மீறிய ஒரு தெளிவு இருந்தது.

❁ ❁ ❁

# நிலாச்சோறு

**மா**ப்பிள்ளை வீட்டுப் பெண்கள் ஏழெட்டுப் பேர் வந்திருந்தார்கள். அவர்களை உட்கார வைத்திருந்த அறையில் புஷ்பாக்காவுடன் நானும் உட்கார்ந்திருந்தேன். "உங்க வீட்டுக்காரர் வரலியா?" என்று அவளிடம் கேட்டார்கள்.

"என்னங்க பண்றது? அடுத்த வாரம் அவங்க மினிஸ்டரி சம்பந்தப்பட்ட ஏதோ ப்ளானிங் மீட்டிங்காம். வேல்ட் பாங்க் ஆட்கள் வர்றாங்கன்னு ஒரே தடபுடல். இவர் செக்ஷன்ல கொஞ்சம் கீ ஃபிகர். லீவு குடுப்பாங்களா?" என்று முகத்தில் வருத்தமும் குரலில் அலட்டலுமாகச் சொன்னாள். அதோடு விட வேண்டியது தானே? "சாந்தியோட வீட்டுக்காரர் இப்போ இந்தியாவிலேயே இல்லை. போன மாசம் பிசினஸ் டிரிப்பா சிங்கப்பூர் போனார். இது திடீர்னு அமைந்த சம்பந்தம். அதனால அவராலயும் வர முடியலை...." என்று நீட்டி முழக்கினாள்.

அந்த நேரம் பார்த்து உள்ளே வந்த சாந்தி, "அப்படியும் போன்ல கேட்கத்தான் செய்தார், வேணா டிரிப்பைக் கேன்ஸல் செஞ்சிட்டு வந்திடவான்னு. நாங்கதான் இது உறுதி பண்ற ஃபங்க்ஷன்தானே, நாங்க பார்த்துக்கறோம்னு சொல்லி

சமாதானப்படுத்தினோம்”, என்று அவள் பங்குக்கு அலட்டிக் கொண்டாள்.

“எங்க வீட்டுக்கு உமா வீட்டுக்காரர்தான் ஐடியல். தமிழ் நாட்டுக்குள்ளேயே வேலை. காரைக்காலும் இங்கிருந்து அதிக தூரமில்லை பாருங்க, பிரச்சினையே கிடையாது. நான் டெல்லிலையும் சாந்தி மும்பைலையும் இருக்கறதுக்கு எங்க வீட்டு எல்லா விசேஷத்துக்கும் குடும்ப சகிதமா உமாதான் அட்டெண்ட் பண்றா. குடுத்து வச்சவ...”

வந்தவர்கள் என்னைப் பார்த்த பார்வையில் தென்பட்ட உணர்வு இளக்காரமா அலட்சியமா என்று இனம் பிரிக்க முடியவில்லை. என்னவோ என் வீட்டுக்காரர் வேலை வெட்டி இல்லாமல் காரைக்காலில் ஊரைச் சுற்றிக் கொண்டிருப்பது போலவும் இங்கே வீட்டில் ஏதாவது என்றால் ஓடி வந்து வாலாட்டக் காத்துக் கொண்டிருப்பது போலவும் ஓர் இமேஜை ஏன் இவள் கிரியேட் பண்ண முயலுகிறாள் என்று புஷ்பாக்கா மீது கோபம் வந்தது. அதனை அடக்கியபடி புன்னகைக்க வேண்டியிருந்தது. அதுவரை இருந்த என் உற்சாக மூடு உடைபட்டது. என்னவர் மீது எரிச்சல் வந்தது. எல்லாம் இவரால் தான். வீட்டுக்குப் போனதும் முதல் வேலையாக இவரை விரட்ட வேண்டும். மறுபடியும் அஸ்ஸாம் என்றால் கூடப் பரவாயில்லை என்று டிரான்ஸ்ஃபர் வாங்க வைக்க வேண்டும்.

ரொம்ப நேரம் அங்கே உட்கார்ந்திருக்க முடியவில்லை. மெல்ல எழுந்து அம்மாவிடம் போனேன். ‘தலை வலிக்கிற மாதிரி இருக்கும்மா. என் ரூம்ல போய்ப் படுத்திருக்கேன்’ என்றேன் முகச்சுளிப்புடன். அம்மா இதமாய் நெற்றியில் கை வைத்தாள். “ஃபங்க்ஷனுக்கு நேரம் இருக்கு உமா. நீ போய்ப்

படுத்திரு. டயத்துக்குக் கூப்பிடறேன்" என்றாள். அம்மா அந்த அவசர நேரத்திலும் எனக்கே எனக்காக அரை நிமிடம் ஒதுக்கியது ஆதரவாய் இருந்தது.

அப்பா நான்கு பெண்கள் பெற்றிருந்தாலும் நால்வருக்கும் தனித்தனி அறைகளுடன் பெரிய வீடாகத்தான் கட்டியிருந்தார். திருமணமாகி வெளியேறி விட்டாலும்கூட எங்கள் அறைகளின் தனித்தன்மை பாதுகாக்கப்பட்டு வந்தது. எப்போதாவது பிறந்த வீடு வந்தாலும் இன்னமும் ஹோம்லியாக உணர்வதற்குக் காரணம் இதுவாகக்கூட இருக்கலாம்.

கட்டிலில் படுத்தேன். என் அறையை ஒட்டி ஹால்.

அங்கே ஆண்கள் பேசிக் கொண்டிருந்தது என் காதுகளில் விழுந்தது.

"நீங்க ஒ என் ஜி ஸி லயா இருக்கீங்க? எவ்வளவு வருஷமா?"

"ஒன்பது வருஷமாச்சு" என்கிறார் என்னவர்.

"அஸ்ஸாம்ல எண்ணெய் எடுக்கறதும் உங்க கம்பெனி தானே?"

"எங்கே! இப்போதான் அங்கே எல்லாம் ஆக்டிவிடீசை யும் ஸ்டாப் பண்ணிட்டாள்னு பேப்பர்ல போட்டிருந்தானே" என்கிறது ஒரு அரைகுறை விஷய ஞானி.

"அதெல்லாம் இல்லை. அங்கேயும் எடுக்கிறோம்" என்கிறார் என்னவர்.

"உல்ஃபா காரா ஒ என் ஜி ஸி ஆஃபீஸ்ர்னாலே கடத்திட்டுப் போய் சுட்டுத் தள்ளிடறாளாமே?"

“பயம்தான். ஏன் சார், நீங்க அஸ்ஸாம் போயிருக்கீங்களா?”

“முதல் ஆறு வருஷம் அங்கேதான் இருந்தேன்.”

“உங்களை யாரும் ஒண்ணும்...”

என்னவர் சிரிப்பது கேட்டது.

“நீங்க துபாய் அது இதுன்னு போயிடலாமே.”

எனக்குள் ஏதோ ஒன்று அறுந்து விழுகிறது. மெல்லிய இழையாய்ப் பரவிக் கொண்டிருந்த தூக்கம் நன்கு காய்ந்த வாணலியில் விடப்பட்ட நீர் போல் மாயமாய் மறைகிறது. சே! எங்கும் ஒரே கேள்வி.

என்னவர் பதிலேதும் சொல்லவில்லை என்று தெரிகிறது. எனக்குத் தெரியும். லேசாகப் புன்னகைத்திருப்பார்.

“எதுக்குச் சொல்றேன்னா என் ஃப்ரண்ட் ஒருத்தன் உங்க மாதிரிதான். மூணு வருஷம்தான் ஓ என் ஜி ஸில இருந்தான். சவூதியோ எங்கேயோ போனான். ஒரு லட்ச ரூபாய் கிட்ட சேலரி தர்றாங்களாமே.”

“தர்றாங்க.”

“நீங்க போயிடலாமே சார்.”

எனக்கு அதற்குமேல் அங்கே படுத்திருக்கப் பிடிக்க வில்லை. எழுந்து உள்வாசல் வழியே கிச்சன் பக்கம் போனேன்.

“என்ன உமா வந்துட்ட,” என்று வாஞ்சையுடன் கேட்டாள் அம்மா சமையலை மேற்பார்வையிட்டபடியே. “மாப்பிள்ளை என்னம்மா பண்றார்?”

நான் பதில் சொல்லும்முன் சாந்தி, “அத்தான்தான் வந்திருக்கிற ஆம்பளைகளுக்கெல்லாம் ஒரே கம்பெனி. எல்லோரும் ஹால்ல உட்கார்ந்து அரட்டை” என்றாள்.

எனக்கு அவள் அதை சாதாரணமாகத்தான் சொன்னாளா அல்லது உமா வீட்டுக்காரர் என் வீட்டுக்காரர் மாதிரி இல்லை, வெறும் அரட்டைக்குத்தான் லாயக்கு என்று கோடி காட்டுகிறாளா என்று தெரியவில்லை.

“சூடா காபி குடும்மா” என்றேன்.

“நீ சாந்தி ரூம்ல போய்ப் படு உமா. பாவம் அப்போதிருந்து தலைவலின்னு கஷ்டப்படுற. விசேஷ வீடு. ஓய்வா படுக்கக்கூட முடியலை. நீ போ உமா. நான் காபி கொண்டு வர்றேன்”

போகவும் மனமில்லை எனக்கு. ரொம்பவும் சுயநலமாய் இருக்கிறேனோ என்று பட்டது. ஒரு பக்கம் சமையல் தயாராகிக் கொண்டிருக்கிறது. லதாவை உறுதி செய்ய வந்திருப்பவர்களில் பெண்களை புஷ்பாக்கா தனியே சமாளித்துக் கொண்டிருக்கிறாள். சாந்தியும் அம்மாவும் கூடமாட ஒத்தாசை என்று அலைந்து கொண்டிருக்க, அப்பா சம்பந்தியாகப் போகிறவருக்கு மில்லைக் காட்டப் போயிருக்கிறார். எல்லோரும் இந்தத் திருமண உறுதிச் சடங்கில் அவரவர் பங்கினை ஆற்றிக் கொண்டிருக்க நான் மட்டும் தலைவலி என்று ஒதுங்குவது நன்றாகவா உள்ளது?

லதாவே கூட இவ்வளவு பெரிய இடமாக அவளுக்கு அமைவதில் எனக்குப் பொறாமை என்று ஓர் ஓரத்தில் நினைத்து விட மாட்டாளா?

"இந்தா உமா காபி" என்று நீட்டினாள் அம்மா. எனக்கு அவளைப் பார்க்கப் பொறாமையாக இருந்தது. எப்படி இவ்வளவு பொறுமையாக இருக்கிறாள். லக்ஷ்மி மாதிரி என்பார்களே அப்படி ஒரு முகம். நான்கு பெண்களைப் பெற்று வளர்த்து இப்போது நான்காவது பெண்ணுக்குத் திருமண ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறாள். மூத்தவளுக்கு இரண்டு பிரசவம், எனக்கு ஒன்று பார்த்து விட்டாள். எதற்காவது முகம் சுழித்துப் பார்த்ததில்லை. நினைவு தெரிந்த நாளாய் அவள் எரிச்சல் பட்டு கோபப்பட்டு சலிப்படைந்து பார்த்ததில்லை நான். என்னவர் கூட அடிக்கடி சொல்லுவார், 'எனக்கு உன்னை விட உங்கம்மாவைத்தான் ரொம்பப் பிடிச்சிருக்கு; மாமாவும் நானும் ஒரு முப்பது வருடம் முன்னே பின்னே பிறந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்' என்று. அம்மாவிடம் சொல்வேன். சிரிப்பாள். ஒருமுறை அப்படிச் சொல்லும்போது சாந்தியும் புஷ்பாக்காவும் கூடவே இருந்தார்கள். "அத்தானுக்கு இவ்வளவெல்லாம் பேசத் தெரியுமா? பார்த்தா ஊமை மாதிரி இருக்கார்?" என்று கேட்டாள் சாந்தி.

"ஏன்? உன் வீட்டுக்காரர் பேசவே மாட்டாரோ?" என்று தெரியாமல் கேட்டு விட்டேன்.

"அவருக்குப் பேச எங்கே நேரம் இருக்கு? நாள் பூரா பிஸினஸ் பிஸினஸ்னு அலைய வேண்டியது. வீட்டுக்கு வந்தாலும் அதே பேச்சுத்தான். அத்தான் மாதிரி எல்லாம் வீட்டுக்கதை குடும்பப்பேச்சு பேசவே மாட்டார். ஆமாம், பெரியத்தான் எப்படி?"

புஷ்பாக்கா இந்தக் கடைசி வார்த்தைகளுக்காக ரன்னிங் டிராக்கில் துப்பாக்கி ஒலிக்காகக் காத்திருக்கும் பி.டி.உஷா போலக் காத்திருப்பாள்.

"உன் ஆள் அட்லீஸ்ட் பிஸினஸ் பேச்சாவது பேசறாரே. எங்காளு செக்ரட்டேரியட்ல இருக்கறதும் போதும், அஃபிஷியல் சீக்ரட்ஸ் அது இதுன்னு ஒண்ணுமே பேச மாட்டார். வெளியுறவுத் துறை வேறயா, மாசத்துல பாதி நாள் டில்லின்னா மீதி நாள் வெளிநாடு. எங்கே பேச? பிள்ளைகளுக் கெல்லாம் அப்பா முகமே மறந்து போனாலும் ஆச்சரியப் படுறதுக்கில்லை. அந்த வகையில் உமாவோட மகன்தான் கொடுத்து வச்சவன். அப்பா மடிலயே வளர்றானே..." என்று பெருமூச்சு விடுவாள்.

அந்தப் பெருமூச்சுக்கு அர்த்தம் தெரியாத அளவு விவரமில்லாதவளில்லை நான். இருவரும் தம்பட்டம் அடித்துக் கொள்ளுகிறாளுகள். பார் பார் என் புருஷன் எந்த அளவு ஆம்பளையா லட்சணமா ஊர் உலகம் சுற்றி வர்றான்; ஆணுக்கு அழகு திரைகடல் ஓடல்னு பிஸியா இருக்கான். உனக்கு மட்டும் ஏண்டி ஒரு பொண்டுகச்சட்டி மாப்பிள்ளை என்று சொல்லாமல் சொல்கிறாள்கள்.

புரிகிறதுதான். என்ன செய்வேன் நான்? இந்த மனுஷனிடம் கரையாய்க் கரைந்து விட்டேன், நீங்களும் அரேபியா, அபுதாபின்னு எங்காவது போங்களேன் என்று.

"எதுக்கும்மா?" என்பார்.

"முதல்ல இந்த அம்மா கிம்மான்னு கூப்பிடறதை விடுங்க. என்ன கிழவன் மாதிரி? எத்தனை தடவை சொல்லிட்டேன்?"

“ஓ! சாரி உமா.”

“என் கேள்விக்கு பதில் சொல்லலை நீங்க.”

“உனக்கு பதில்தான் வேணும்னா எப்பவோ சொல்லிட்டேன் உமா. உனக்கு சாதகமான பதில்தான் வேணும்னா நீ கேட்டுட்டே இருக்க வேண்டியதுதான்” என்பார் குட்டி ஹரியினை மடியில் போட்டுத் தலையினைக் கோதி விட்டபடி.

“ஏன் போக மாட்டேங்கறீங்க?”

“ஏன் போகணும்?”

“இப்படிக் கேட்டா என்ன பண்றது? எனக்காக, இப்பவே இளமையோட இருக்கும்போதே நாலு காசு சம்பாதிச்சா கசக்கவா செய்யுது?”

“நாலு காசு நம்மகிட்ட ஏற்கெனவே இருக்கு உமா.”

“சன்னியாசி மாதிரிப் பேசாதீங்க. காசு கிடைச்சா வேணாம்னு கடல்ல தூக்கிப் போட்டுடுவீங்களோ?”

சிரிப்பார். குழந்தைத்தனம், கயமை, தன்னிரக்கம், கேலி, அசட்டுத்தனம் எல்லா மாதிரியும் இருக்கும். மோனாலிஸா மாதிரியான ஒரு மர்மச் சிரிப்பு. எதிராளை அசத்தி அமுக்கி உட்கார வைக்கும் சிரிப்பு. ஆரம்பக் காலங்களில் ரொம்பவே உருகி இருக்கிறேன்.

“சும்மா இளிக்காதீங்க. பதில் சொல்லுங்க.”

“உமா! உனக்குப் பொழுது போகலைன்னு என்னைச் சீண்டிட்டிருக்கிற. நான் என் உமாவோட வெடுக் வெடுக் என்ற

பேச்சை ரசிச்சிட்டிருக்கிறேன். இதில கேள்வி எங்க இருக்கு? பதில் எங்க வருது?"

"நான் ஒண்ணும் கொஞ்சிட்டிருக்கலை. சண்டை போட்டுட்டிருக்கிறேன்."

"ரெண்டுக்கும் எனக்கு வித்தியாசம் தெரிவதில்லை உமா."

புரண்டு படுப்பேன். இது அசர்கிற ஆளில்லை. என்னை ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறார்? எனக்கும் ஏக்கங்கள் வேண்டும் என்று தோன்றாதா? இவர் எங்காவது போயிருக்க, எனக்கு ஃபோன் பண்ணிப் பேச வேண்டும் என்று இருக்காதா? காற்றடிக்கும் குளிர் இரவில் எழுந்து போய் ஜன்னலை அடைத்து விட்டு வந்து தூக்கம் கலைந்து படுக்கையில் தனியே முட்டினைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தபடி இவர் ஞாபகமாய்த் தவிக்க வேண்டும், என்னங்க பெரிய காசு; போதும் நீங்களும் உங்க காண்டிராக்டும்; உங்களை ரொம்பத் தேடுது, உடனே வாங்கன்னு மனசுக்குள்ளே பேசணும்னு இருக்காதா? அடுத்த முறை ஃபோன் பண்ணும்போது அழணும்னு மனசு திட்டம் போடாதா? இவர் ஃபோன் செய்ததை எல்லோரிடமும் சொல்ல வேண்டும் என்று இருக்காதா?

என்ன பிரயோஜனம்! என்ன கனவு கண்டு என்ன, இவர் இப்படி வந்து வாய்த்தால் என்ன பண்ணுவது?

"வெளிநாட்ல போய் என்ன புதுசா சம்பாதிக்கப் போறேன்? அப்பாவோட சொத்து நிறைய இருக்கு. எனக்கு நல்ல சம்பளம் வருது உமா. உனக்கு என்ன வேணுமோ, இந்தியன் ஐட்டமோ அல்லது ஃபாரின் ஐட்டமோ, வாங்கித்

தர எனக்கு சக்தி இருக்கு. வேலை பார்க்கறதுக்காக வெளிநாடு போக வேண்டிய அவசியம் இல்லை. டூரிஸ்ட் டிரிப்பா வேணா சிங்கப்பூர் போகலாம். இந்தியா முழுக்க சுத்தலாம். நிறைய பெரிய ஊர்களில் எங்க கம்பெனி டிரைனிங் சென்டர்கள் இருக்கு. டிரைனிங் போற சாக்குல கூட்டிப் போறேன்" என்றார். சொன்னபடியே ஒரு முறை கோவா கூட்டிப் போனார். ஒரு முறை டேராடூனில் டிரைனிங் என்று முசூரி, ரிஷிகேஷ், ஹரித்வார், சிம்லா என்று சுற்றிக் காண்பித்தார்.

ஆனால் இவரிடம் யார் இதையெல்லாம் கேட்டார்கள்?

இன்று யாரைப் பார்த்தாலும் கேட்கிறார்கள் உங்க வீட்டுக்காரர் வெளிநாடு போனால் என்ன என்று. ஹூம்! இவருக்கல்லவா வேண்டும் வேகம்!

**ல**தா திருமணம் உறுதியானது. சாஸ்திரிகள் வந்து ஏதேதோ சடங்குகள் செய்தார். பெண்ணை அலங்கரித்து எல்லோரும் பார்த்தார்கள். மாப்பிள்ளைப் பையனுக்கு இப்போது லீவு இல்லையாம். இப்போதே பந்தா. எல்லோரும் என்ன, இவர் மாதிரியா? சாஸ்திரிகள் நாள் குறித்து ஓலை எழுதிப் படித்தார். பிள்ளையைப் பெற்றவர் கம்பீரமாய் உட்கார்ந்திருக்க அப்பா பழங்களும், தேங்காய்களும் வெற்றிலைபாக்கும் பூவும் மஞ்சளும் பணக்கட்டுகளும் ஓலையும் நிறைந்திருந்த பெரிய தாம்பாளத்தை எழுந்து நின்று கொடுத்தார். சம்பிரதாயம்! அப்பா அவற்றில் எப்போதும் குறை வைப்பதில்லை.

பேசினார்கள். சிரித்தார்கள். சாப்பிட்டார்கள். கிளம்பினார்கள்.

அவர்களை வழியனுப்பிய பின் அப்பா சந்தோஷத்தின் உச்சத்தில் இருந்தார். லதாவை நிறையவே சீண்டினார். அவள்

போங்கப்பா என்று சிணுங்கிய போது சாதித்து விட்ட திருப்தியில் சிரித்தார். நான்கு பெண் பிள்ளைகள். நான்கையும் வளர்த்து பெரிய பெரிய இடங்களில் சம்பந்தம் முடித்த சாதனை.

நானும் அவரும் கிளம்பிக் கொண்டிருந்தோம். அப்பா சாந்தியிடமும் புஷ்பாக்காவிடமும் பேசிக் கொண்டிருந்தார். "என்னம்மா! மாப்பிள்ளைகளைக் கல்யாணத்துலயாவது கண்ல காட்டுவீங்களா, இல்லை அப்பவும் லீவு இல்லை அது இதுன்னு இன்னிக்குப் பண்ணின மாதிரி பண்ணிடுவீங்களா?"

"என்னப்பா..." என்று கொஞ்சிக் கொண்டிருந்தார்கள் இருவரும்.

"உமா பத்திக் கவலையே இல்லை. சொல்லணும்னு கூட அவசியமில்லை. மாப்பிள்ளை டாண்ணு வந்துடுவார். உங்க வீடுகளுக்குத்தான் அழைக்க மும்பைக்கும் டில்லிக்கும் நான் அலைய வேண்டியிருக்கும்."

சாந்தியும் புஷ்பாக்காவும் ஏன் லதாவும் கூடச் சிரித்தது எனக்குக் கிண்டலாகப் பட்டது. இவர் முகத்திலோ மாறாத புன்னகை. சே! என்ன மனுஷன்!

வழி நெடுக நான் காரில் இவரிடம் பேசவே இல்லை. இவரும் எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை. வீட்டுக்கு வந்த பிறகும் எனக்கு ஆறவில்லை.

இரவு ஒரு முடிவோடு பேச்சை ஆரம்பித்தேன்.

"என்னங்க! எங்க வீட்டு ஹால்ல வச்சு எல்லோரும் எதோ பேசிட்டிருந்தீங்களே..."

"என்ன விஷயமா?"

"அதான் எல்லாரும் சொல்லிட்டிருக்கலை, நீங்க துபாய் போகலாமேன்னு..."

வழக்கமான சிரிப்பு.

குமுறி வெடித்தேன். "நீங்க இப்படி இளிச்சவாயனா இருங்க. யாராவது உங்களை மதிக்கிறாங்களா? எல்லாம் நீங்க தந்த இடம். அவனவன் உள்ளூர்ல ப்யூனா இருந்தாக்கூட மாமனார் வீட்டுல மரியாதை பண்ணித் தாங்கலைன்னா போகாம பந்தா பண்ணிக்கறான். நீங்க ஒண்ணும் இல்லாததுக்கெல்லாம் ஓடிஓடிப் போய் நின்னா என்ன மரியாதை இருக்கும்? அப்படியே போனாலும் மாப்பிள்ளையா லட்சணமா நடந்துகிட்டாலும் பரவாயில்லை. அங்கே வந்து வர்றவங்களுக்கு சேர் எடுத்துப் போடறதும் பழம் வாங்க ஓடுறதும்... சே! அப்பா செய்ய மாட்டார்? அவர் பொண்ணுக்குத் தானே கல்யாணம்? மத்த ரெண்டு மாப்பிள்ளைகளுக்கும் எவ்வளவு மாரியாதை தர்றார்! அவங்களை அழைக்க டெல்லிக்கும் மும்பைக்கும் போவாராம். நீங்களும் ரெண்டு வெளிநாடு போயிருந்தா எவ்வளவு மரியாதை. உங்களால பொம்பளைங்க மத்தியில எனக்கு எவ்வளவு மதிப்பு குறைவு. உங்களுக்கு எங்கே புரியப் போகிறது..." என்று குலுங்கினேன்.

அமைதியாக இருந்தார்.

"எங்கப்பா எவ்வளவு கூசாம சொல்றார், உங்களுக்குச் சொல்ல வேண்டியதே இல்லையாம். டாண்ணு வந்து நிப்பீங்களாம். என்ன, நாய்னு நினைச்சாரா? இதோ பாருங்க

நீங்க என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது. அடுத்த மாசம் இருபதாம் தேதி கல்யாணம் வச்சிருக்கார். நீங்க அப்போ இங்கே இருக்கக் கூடாது. வெளிநாடு போவீங்களோ டிரான்ஸ்ஃபர்ல போவீங்களோ, இல்லை டிரைனிங் போவீங்களோ எனக்குத் தெரியாது. தயவுபண்ணிப் புரிஞ்சுக்க முயற்சி பண்ணுங்க...”

சொல்லி முடித்தேன். இன்னும் இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டும் என்று தோன்றியது. வார்த்தைகள் கிடைக்காமல் திணறினேன். படபடப்பாக இருந்தது. உணர்வுகளை மிகச் சரியாக வெளிப்படுத்த உதவும் அளவு மொழி ஸ்திரமில்லாததாக முதல் முறையாகத் தோன்றியது.

அவரோ அமைதியாக உட்கார்ந்து என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்.

“எதாவது பேசுங்க...” என்றேன்.

“உன்னோட ஒவ்வொரு வார்த்தையும் என்னை கர்வப் பட வைக்குது உமா. என் மீது இவ்வளவு வெறித்தனமா அன்பைக் கொட்டற மனைவி கிடைச்சதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும்...”

கேலி செய்கிறாரோ அல்லது எரிச்சலை மறைத்துப் பேசுகிறாரோ என்று தோன்ற உற்றுப் பார்த்தேன். இல்லை.

“உன்னுடைய எல்லா சஞ்சலங்களும் உன் புருஷனுக்கு உரிய மரியாதை தரப்படவில்லையோ என்கிற சந்தேகத்தால்

மட்டுமே என்பது எனக்கு எவ்வளவு பெருமைக்குரிய விஷயம். இந்த அளவுக்கு என்னை மூச்சுடன் பிணைத்து வைத்துள்ள உன்னைப் பிரிந்து என்னால் தூரா தொலைவு போக முடியுமா? அப்படியே நான் போனால் உன்னால்தான் தாங்க முடியுமா? விசேஷ வீடுகளுக்கு புருஷன் கூடப் போகிற பெண்ணின் கம்பீரமே தனி, தெரியுமா? ஆண்கள் கூட்டத்தில் அவனும் பெண்கள் கூட்டத்தில் அவளும் கலந்து விட்டாலும் கூட இடையிடையே நம்மாள் என்ன பண்றாள் என்று அவனும் இவர் எங்கே போனார் என்று அவளும் மற்றவர்களின் கேலியைப் பொருட்படுத்தாமல் சில மைக்ரோசெகண்டுகள் பார்வையால் கலந்து கொள்கிற சுகம் சொற்களில் அடக்க முடியாதது. உன் அக்காவும் தங்கையும் தங்கள் புருஷன்களைப் பற்றி பந்தா விடவில்லை. சின்னப்பிள்ளைக்கு நிலாவைக் காட்டி சோறு ஊட்டும் தாய்போல தங்கள் மனக் குழந்தை களுக்கு வார்த்தை ஜாலங்களைக் காட்டி அழவிடாமல் அடக்குகிறார்கள். அப்படிப் பேசிக் கொள்ளவில்லை என்றால் உன்னைப் பார்த்து உடைந்து போவார்கள். அது புரிய வில்லையா உனக்கு? அவர்களைப் பார்த்து பொறாமைப் படாதே. பரிதாபப்படு...”

உறைந்து போய் உட்கார்ந்திருந்தேன். இப்படி ஒரு கோணம் இருக்கிறதா?

“உமா உங்கப்பாவுக்கு வீட்டில் ஆண்பிள்ளை இல்லாத குறை தெரிய வேண்டாமே என்றுதான் எங்கப்பாவுக்கு என்னென்ன செய்வேனோ அவ்வளவும் செய்தேன். நான் அம்மா இல்லாமல் வளர்ந்தவன் என்பதால் உங்கம்மா மேல் கொஞ்சம் கூடுதல் அட்டாச்மெண்ட். என்னால் உங்க வீட்டில் மாப்பிள்ளை பந்தா காட்ட முடியலை. ஆனா அது உனக்கு

மரியாதைக் குறைவை உண்டு பண்ணுதுன்னு நீயாகவே கற்பனை செய்து கொண்டால் அதற்கு நானா பொறுப்பு? இதற்கு அப்புறமும் நீ உங்க வீட்டு நிகழ்ச்சிகளுக்கு நான் வராமல் இருந்தா உனக்கு அதிக மரியாதை கிடைக்கும்னு ஃபீல் பண்ணினா அதற்கான ஏற்பாடுகளையும் நான் செய்யறேன். எனக்கு என் உமாவின் சந்தோஷம்தான் முக்கியம். யோசித்துச் சொல்லு" என்றபடி புரண்டு படுத்தவர், சில வினாடிகளில் தூங்கிப் போனார்.

சாதாரணமான குரலில் கொஞ்சம்கூட அடிபட்ட எரிச்சலோ தன்னிரக்கமோ கோபமோ இன்றி எப்படிப் பேச முடிகிறது இவரால்? சேச்சே! என்னன்ன பேசி விட்டேன். தீ போன்ற வார்த்தைகள். எப்படி முகம் சுளிக்காமல் ஏற்கிறார்? பதில் சொல்கிறார்? வயிறு பிசைந்து நெஞ்சம் குழைய கண்ணீர் குளம் கட்டியது.

'அமிலம் கொட்டினாப்ல பேசறேனே, இதையா ரசிக்கிறீங்க? ஓங்கி ரெண்டு அறை கொடுங்களேன். எங்கேயும் போவதும் போகாததும் என் இஷ்டம்டின்னு அடிங்களேன்... அட்லீஸ்ட் திட்டவாவது செய்யுங்களேன்...'

அடக்க முடியாமல் அவரைக் கட்டிக் கொண்டு அழத் தோன்றியது. திறந்திருந்த ஜன்னல் வழியே குளிர்ந்த காற்று உள்ளே நுழைந்து கொண்டிருந்தது.

❋ ❋ ❋

# புரிதல்

தளவாய் லாட்ஜின் முதல்மாடி ஓர அறையின் பால்கனித் கதவு திறந்திருக்க அதன் வழியாக தூரத்தில் தெரிந்த மெயின் அருவி, மலைராஜனின் தோளில் தொங்க விடப்பட்டிருந்த வெள்ளைத் துண்டாகக் காட்சியளித்தது. கட்டிலில் குறுக்காகப் படுத்திருந்தேன். தலைவலியைக் கொஞ்சம் மறந்திருந்தேன். தலைக்கு இரண்டு தலையணை களைக் கொடுத்தபடி அருவிக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாலே இன்னும் சிறிது நேரத்தில் தலைவலி பூரணமாகப் போய்விடும் என்று தோன்றியது.

இந்தக் காட்சிக்காகவே இந்த அறையை விட்டு நீங்க மனம் வருவதில்லை. படமாக்கித் தொடங்கவிட்டது போல் என்ன அருமையான காட்சி. பால்கனிக் கதவின் விளிம்புகள் படத்தின் சட்டம் போல் அதன் மேல்பாதியில் குறுக்காகக் கோடு போட்டது போல் குற்றால மலையின் உச்சி. நவராத்திரி கொலு வைத்தது போல் சிறிதாகத் தெரியும் மரங்கள். எட்டுமணி இரவின் இருட்டை அரைகுறையாகப் போக்க முயலும் நிலவின் ஒளியில் வெள்ளைப் பால்போல் கீழ் நோக்கி பொங்குமாங்கடலுக்கு இறங்கும் அருவி.

சற்றுத் தள்ளி நாற்காலி ஒன்றில் சாய்ந்தபடி பத்திரிகை படித்துக் கொண்டிருந்தாள் என் இளம் மனைவி டான்யா. அவளுக்கு இதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல. தேனிலவுப் பயணம் குற்றாலம் தான் என்று சொல்லிவிட்டாள் என்றால் சரியம்மா உன் விருப்பம் என்று ஏற்பாடு செய்து தர அப்பா. 'என்னங்க, ஆஃபீஸுக்கு லீவு சொல்லிருங்க. அடுத்த வாரம் நம்ம குற்றாலம் டிரிப்புக்கு அப்பா எல்லா ஏற்பாடுகளும் செஞ்சிட்டாராம்'. என்னுடைய விருப்பம் குறித்தும் ஒரு வார்த்தை கேட்கலாம் என்று அவளுக்குத் தோன்றுவதே இல்லை.

"நீங்க இதுக்கு முன்னால குற்றாலம் வந்திருக்கீங்களா?"

நண்பர்கள் குழுவாக வருடம் ஒருமுறை இந்தப் பக்கம் வராத இளைஞனும் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்க முடியுமா என்ன? "வந்திருக்கேன்".

"எங்கே தங்குவீங்க?"

"இது ஒரு கேள்வியா? எங்கே இடம் கிடைக்குதோ அந்த லாட்ஜில் தங்குவோம்."

"நாங்க வந்தா எப்பவுமே இந்த லாட்ஜில்தான். சீசன் சமயத்தில் இங்கே இடமே கிடைக்காது தெரியுமா? விஐபி லாட்ஜ் பாருங்க. மந்திரிங்க, சினிமாக்காரங்கன்னு யார் வந்தாலும் இங்கேதான் தங்குவாங்க. அப்பா தன்னுடைய செல்வாக்கால இங்கே எப்பவும் ரூம் வாங்கிடுவார்."

அமைதி காத்தேன். ஆரம்பித்து விட்டாள் அப்பாவின் பெருமைப் புராணத்தை. இன்னும் கொஞ்ச நேரத்துக்கு ஓய மாட்டாள். தெரியும்.

"அப்பாவுடன் இங்கே வருஷம் தவறாம வந்திட்டிருந்தோம். இப்போதான் நான்கு வருஷமா வர்றதே நின்னு போச்சு."

ஏன் என்று கேட்டு அவளுடைய பேச்சு வளர அனுமதிக்கும் பொறுமை எனக்கு இல்லை.

இவ்வளவு ஆர்வமாகக் குற்றாலம் குறித்துப் பேசுகிறாளே தவிர அந்த மலைச் சூழலையோ அருவியின் அழகையோ வெளிக்காற்றின் சாரல் சுகத்தையோ அனுபவித்து உள்வாங்கும் எந்த நடவடிக்கையும் அவளிடம் காணப்படவில்லை. நாங்கள் குற்றாலம் போவோம்; வருடாவருடம் போவோம்; என்பது போன்ற பெருமைப் பட்டியலில் இன்னுமொரு என்ட்ரி போடுவது தவிர வேறு நோக்கம் அவளுக்கு இருப்பதில்லை.

அழைப்பு மணியின் ஓசைக்குக் கலைந்தேன்.

டான்யா எதிர்பார்த்திருந்ததுபோல் சட்டென்று எழுந்து கதவு திறந்தாள்.

"அப்பா ஃபோன் பண்ணியிருந்தாங்களாம். ஐயா குடுத்திட்டு வரச் சொன்னாங்க. வேற எதுவும் தேவைன்னா இந்த நம்பருக்குக் காண்டாக்ட் பண்ணச் சொன்னாங்க", என்று ஓர் ஆடவனின் குரல் காதில் விழுந்தது. படுக்கையில் இருந்து எழ மனமின்றி அப்படியே கிடந்தேன்.

கதவு சார்த்தி உள்ளே திரும்பினாள் டான்யா. "முழிச்சிட்டீங்களா? இந்தாங்க நீங்க சொல்லிட்டிருந்த மாத்திரை" என்று நீட்டினாள். "சூடா காஃபிக்குச் சொல்லவா?" என்று கேட்டாள் இதமாக.

"மாத்திரை ஏது? வந்தது யார்?" என்று கேட்டேன்.

"அப்பாவுடைய மேலகரம் ஃப்ரண்டு வீட்டு வேலையாள். அப்பாவிடம், ஃபோனில் பேசும்போது உங்க மருமகனுக்கு வந்த

இடத்தில் தலைவலின்னு சொன்னேன். நீங்க இந்த பார்ட்டிகுலர் மாத்திரைதான் போடுவீங்கன்னு சொன்னேன். மேலகரத்துக்குச் சொல்லி வரவழைச்சிருக்காங்க", என்றாள் சாதாரணமாக.

அதிர்ந்தேன். "டான்யா! எனக்குத் தேவையான மாத்திரையை ரூம் பாய்க்குச் சொல்லி அனுப்பி இங்கே இருக்கிற மெடிக்கல் ஷாப்பில் வாங்கிக்க முடியாதா? குற்றாலத்தில் இருந்து சென்னைக்குச் சொல்லி அங்கிருந்து மேலகரத்துக்குச் சொல்லி அங்கேயிருந்து ஆள்மூலம் கொடுத்தனுப்ப வைத்து... இதெல்லாம் கொஞ்சம் ஓவரா படலை?" என்றேன் லேசாகக் கடிந்த குரலில்.

"இங்கே ஏது மருந்துக் கடை? போன தடவை நாங்க வந்திருக்கும்போது எனக்கு வயித்துவலி வந்து அதுக்கு மருந்து மேலகரம் போய்த்தான் வாங்க வேண்டி இருந்தது. குற்றாலத்தில் மெடிக்கல் ஷாப்பே கிடையாது, தெரியுமா உங்களுக்கு?"

"உன் தலை. நீயே போன நாலு வருஷமா இங்கே வந்தது கிடையாதுன்னு சொன்ன. இன்னுமா குற்றாலம் அப்படியே இருக்கும்? பஸ்ஸ்டாண்டில் மெடிக்கல் ஷாப் இருக்கு"

"சரி விடுங்க, எனக்கு உங்க தலைவலிதான் பெரிசு. அது எப்படி குணமானா என்ன?" என்றாள் சர்வ அலட்சியமாக.

"அதுக்காக எத்தனை பேருக்கு சிரமம் தர்ற நீ?"

"ஒரு சிரமமும் கிடையாது. ரெண்டு ஃபோன். அவ்வளவு தான். அப்பாவுக்கு ஆளிருக்கு. செய்யறார். நீங்க எதுக்கு அதெல்லாம் யோசிக்கிறீங்க? மாத்திரையைப் போடுங்க. கடைத்தெரு வரைக்கும் போயிட்டு வரலாம்."

எனக்கு வலியே தேவலை என்று இருந்தது.

பொதுப்பணித் துறையில் துணை இயக்குநராக இருப்பவரின் ஒரே மகள் என்கிற தகுதியே எனக்கு டான்யா குறித்த பயத்தை ஆரம்பத்தில் ஏற்படுத்தி இருந்தது. சாதாரண நடுத்தர வசதிக் குடும்பத்தில் இருந்து முளைத்து எழுந்திருக்கும் என்ஜினியரான எனக்கு இவள் அதிகப்படியான இடம் என்கிற தயக்கத்தில் நான் சொன்ன மறுப்புகள் எடுபடாமல் உறவினர்கள் மடக்கிப் போட்டு கல்யாணம் செய்து வைத்துவிட்டு அவரவர் திசைபார்த்துப் போய் விட்டார்கள்.

என்னுடைய இயல்பு, வளர்ந்த சூழல், அபிலாஷைகள் எல்லாமே டான்யாவுக்குப் பொருத்தமில்லாதவை என்பது முதல் சில நாட்களிலேயே எனக்குப் புரிந்து போனது. என்னுடைய ஆளுமையின் வீச்சு அவளை முழுதுமாக வளைத்துப் போடும் அளவுக்கு பலமானதாக பன்முகப் பரிமாணங்கள் உடையதாக இல்லை. எனக்குள்ளே இருக்கும் சில சின்னச் சின்ன மெல்லிய உணர்வுகளின் சாயலையோ நிழலையோ அவளுடைய சிந்தனையின் எந்தக் கோணத்திலும் படர வைக்க இயலும் என்று எனக்குத் தோன்றவில்லை. தட்டிச் சொல்லி அடக்கி வைக்க அம்மாவும் இல்லாமல், தன்னுடைய அப்பா என்கிற சாம்ராஜ்யாதிபதியின் ஒற்றைச் செல்ல மகளாக வளர்ந்துள்ளவளின் சிந்தனையில் அந்த பிரம்மாண்டத்தை மீறிய எந்தச் செயலாலும் என்னைப் பதிய வைப்பதென்பது இயலாத காரியம் என்பதாலேயே என்னுடைய தோல்விகளை நடப்புகள் தொடர்ந்து பதிவு செய்தபடி இருந்தன.

ஓட்டலுக்குப் போனால் சர்வரிடம் மெனு சொல்வதானாலும் சரி, சினிமாவுக்குப் போவதென்று முடிவு செய்தால்

எந்தப்படமென்று தேர்ந்தெடுப்பதிலும் சரி, உறவினர்கள் வீடுகளுக்குப் போனால் எவ்வளவு நேரம் இருப்பது என்பதைத் தீர்மானிப்பதானாலும் சரி, சில சமயங்களில் நான் எப்போது விடுமுறை எடுக்க வேண்டும் என்று முடிவெடுப்பதிலும் சரி அவளுடைய டாமினேஷன் அளவு கடந்து போய்க் கொண்டிருந்தது.

ஆனால் இதில் பாதகமான எந்த விளைவுகளும் ஏற்பட்டு விடவில்லை என்பதையும் நான் சொல்லியே ஆக வேண்டும். அன்பு பொழிவதில் அவள் குறையே வைத்ததில்லை. என்னிடம் மட்டுமின்றி என் அம்மா, அப்பா மற்றும் தங்கைகளிடம் அவள் காட்டும் அன்பும் அக்கறையும் அவர்களை அடித்துப் போட்டிருக்கிறது. பெரிய இடத்துப் பொண்ணு என்கிற கர்வமே இல்லாமல் எவ்வளவு பாந்தமாகப் பழகுகிறாள் என்கிற நற் சான்றிதழைக் கிட்டத்தட்ட எல்லோரிடமும் பெற்றிருக்கிறாள். சமையல் மற்றும் வீட்டு வேலைகளில் சோம்பேறிதான் என்றாலும் செய்தால் திறம்படச் செய்பவள் என்று காட்டிக் கொண்டதால், ‘பாவம்டா, தாயில்லாப் பொண்ணு, ஏதோ இந்த அளவுக்குத் தெரிஞ்சு வச்சிருக்குதே, அதே பெரிய விஷயம்; நாளானா எல்லாம் சரியாப் போயிடும்’ என்று அம்மாவின் சப்போர்ட் வேறு. அவளுக்கென்ன, மகனைத் தனிக்குடித்தனம் என்று கடத்திக் கொண்டு போய்விடாதவரை மருமகள் நல்லவள்தான். டான்யாவும் வந்த உடனேயே, ‘நான் தாயில்லாமல் வளர்ந்தவள்; அதனால உங்களை அம்மான்னே கூப்பிடறேன்’ என்று சொன்னது மட்டுமின்றி ‘எங்களை எக்காரணம் கொண்டும் தனிக்குடித்தனம் அனுப்பிடாதீங்க. உங்க எல்லார் கூடவும்தான் இருப்பேன்’ என்று தீர்மானமாகச் சொல்லி விட்டதாலும் அவர்களுடைய மதிப்பில் எங்கோ உயர்ந்து போய் விட்டாள்.

யோசித்துப் பார்த்தால் என்னைத் தவிர எல்லோருக்கும் அவள் ராசியாகி விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

என்னால் அவளை ஏன் முழுமையாக என்னவளாக ஒப்புக் கொள்ள முடியவில்லை என்று எனக்குள் தினம் ஒரு போராட்டம் நடப்பதற்கு அவளே ஏதாவது தீனி போட்டபடி இருந்தாள். என்னுடைய தகுதிக்கு மீறிய பொக்கிஷம் என்று எட்ட வைத்தும் பார்க்க முடியவில்லை; எனக்குத் தூசு பெறுவாளா என்று என்னை ஏற்றிக் கொள்ளவும் மனம் ஒப்ப வில்லை.

"குட்மார்னிங். தலைவலி எல்லாம் போயாச்சா?" என்ற டான்யாவின் குரலுக்கு விழித்தபோது அதே பால்கனிக் காட்சியில் கூடுதல் மலராகத் தெரிந்தாள். அருவியின் அடர்த்தி கூடி இருந்தது. இரட்டைக் கிளைகளாகப் பிரிந்து விழத்தொடங்கியிருந்தது. மேகங்கள் மலைமுகடுகளைச் சூழ்ந்து அழுத்தி இருந்தன. தெளிவாக உணர்ந்தேன்.

"நான் ரெடி. காஃபி ஃபிளாஸ்க்கில் இருக்கு. நீங்க தயாரானா டிஃபன் சாப்பிட்டு குளிக்கக் கிளம்பலாம்" என்றாள். நெளிந்து கொடுத்து நெட்டி முறித்தேன். "குற்றால அருவிகளில் குளிச்சா இருக்கிற வியாதி எல்லாம் போயிடும்னு சொல்லுவாங்க. இங்கே வந்து தலைவலி வந்த முதல் ஆள் நீங்களாத்தான் இருப்பீங்க" என்று கேலி செய்தாள். அப்போதைக்கு நான் அதனை லேசாக எடுத்துக் கொண்டு சிரித்தாலும் இதையே இவள் தன்னுடைய அப்பா முன்னிலையிலும் சொல்லிச் சிரிப்பாளே என்கிற எண்ணம் எற்பட என்னுள் ஓர் இறுக்கம் ஏற்பட்டது. இவளுக்கு அம்மா இல்லாமல் போனதற்கு பதில் அப்பா இல்லாமல் போயிருக்கலாம் என்று கூட மனதின் சைத்தான் மூலையில் ஓர் எண்ணம் ஏற்பட்டு மறைந்தது. சே! என்று பின் மண்டையில் தட்டிக் கொண்டேன்.

காஃபி குடித்து விட்டு நான் கிளம்பிக் கொண்டு இருக்கையில் அவள் நடுநடுவே கதவைத் திறந்து திறந்து பார்த்துக் கொண்டிருந்தாள். யாரையோ எதிர்பார்ப்பது போன்ற சின்னப் பரபரப்பு அவளிடம்.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"பழத்தோட்ட அருவி போறதுக்கு பாஸ் ஏற்பாடு செய்யச் சொல்லி அப்பாவிடம் சொல்லி இருந்தேன்"

மீண்டும் அப்பா!

கணவன் மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்காகவாம் தேனிலவு. எனக்கு இந்த மூன்று நாட்களும் இந்த மாதிரியான அப்பா புராணங்கள் கேட்டுக் கேட்டு இவளைப் பற்றிப் புதிதாகப் புரிய ஏதுமில்லை என்று தான் தோன்றியது. தனக்கும் மனைவிக்கும் நடுவில் மாமனார் இருக்கும் தேனிலவு என்னுடைய பகைவனுக்கும் கூட நேர வேண்டாம் சாமி!

ஐந்தருவிக்கு மேலாக ஒரு கிலோமீட்டர் தொலைவில் இயற்கை கொஞ்சமும் செயற்கை கொஞ்சமுமாக ஏற்படுத்தப் பட்ட அருவிதான் பழத்தோட்ட அருவி. விஐபி அருவி மாதிரி. அதற்குப் போகமட்டும் அனுமதி எல்லோருக்கும் கிடைப்பதில்லை. தோட்டக்கலைத்துறையும் பொதுப் பணித்துறையும் சேர்ந்து பராமரிக்கும் அருவிப்பகுதி என்பதால் சாலையின் நுழைவுப் பகுதியிலேயே தடுப்பு வைத்திருப்பார்கள். விஐபி பாஸ் கொண்டு வருபவர்களின் வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

"அங்கே போய்க் குளித்தாலும் அதே அருவி தானே? ஐந்தருவி, கண்ணருவி, புலியருவி, பழைய குற்றாலம், மெயின்

ஃபால்ஸ், செண்பக அருவின்னு எத்தனை அருவிகள்ல குளிச்சாச்சு. அப்புறம் என்ன?"

"நீங்க அங்க குளிச்சிருக்கீங்களா?"

"இல்லை. அந்த இடம் அருவி மாதிரியே இருக்காது. சும்மா ஆறடி உயரத்துல இருந்துதான் தண்ணீர் விழும்னு கேள்விப்பட்டிருக்கேன்" என்றேன்.

"ஐயோ! அங்கே எவ்ளோ பிரைவஸி இருக்கும் தெரியுமா? மத்த அருவிங்க மாதிரி நசநசன்னு கூட்டமே இருக்காது. மொத்தமே பத்து பதினைந்து பேர்தான் இருப்பாங்க. யோசிச்சுப் பாருங்க, அந்த மாதிரியான இயற்கை சூழல்ல கூட்டமே இல்லாமல் எவ்ளோ நல்லா இருக்கும் தெரியுமா? அப்பா கூட வரும்போதெல்லாம்..."

மேற்கொண்டு ஏதும் கேட்கவில்லை நான். எனக்குப் புரிந்து விட்டது. யாராலும் சாதாரணமாகப் பார்க்க முடியாத பழத்தோட்ட அருவியில் நாங்க குளிச்சோம் என்பதுதான் இவளுடைய தேனிலவு வெற்றியாக இருக்க முடியும். அதை இழப்பதாவது!

டான்யா அதற்குமேல் பொறுக்காமல் அவள் அப்பாவை செல்லில் பிடித்தாள். படபடவென்று பேசினாள். நான் அறைக்கு வெளியே போய் நின்று கொண்டேன். இறுதியாக, "போங்கப்பா! உங்க மருமகன் கிட்ட பெருமையா சொல்லி இருந்தேன். என் மூடையே ஸ்பாயில் பண்ணிட்டீங்க" என்றபடி வெளியே வந்தாள். உங்க மருமகன்!

"என்னங்க, நாம் இன்னிக்கு நைட்டே கிளம்பியாகணுமா?" என்றாள் கெஞ்சலாக என்னிடம்.

"ஆமாம். லீவு கிடையாது. நாளை நான் ஜாயின் பண்ணியே ஆகணும்" என்றேன் கண்டிப்பான குரலில்.

"அப்பா காண்டாக்ட் பண்ணி பாஸ் ஏற்பாடு செஞ்ச ஆள் அவசர வேலையா வெளியூர் போயிட்டாராம். வேற ஆள் மூலமாக நாளைக்கு எப்படியும் ஏற்பாடு செஞ்சிடறேன்னு சொல்றாங்க."

"சாரிம்மா. இன்னிக்கு நைட் நாம் கிளம்பியே ஆகணும்", என்றேன்.

ஐந்தருவி அருகில் கார்பார்க்கிங் பகுதி கிட்டத்தட்ட நிறைந்திருந்தது. டான்யாவை அருவி மேடைக்கருகில் இறக்கி விட்டு காரினைத் திரும்ப எடுப்பதற்கு வசதியாக பழத்தோட்ட அருவி நுழைவுக்கு அருகிலேயே நிறுத்தி இறங்கி நடக்கத் தொடங்கினேன். யதார்த்தமாக பார்வை பழத்தோட்ட அருவியின் தடுப்பினை நோக்கிப் போக அப்போது உள்ளே நுழைந்த கார் ஒன்றினை அதன் டிரைவரிடமிருந்த பாஸினை வாங்கி செக் பண்ணி உள்ளே அனுப்பிக் கொண்டு இருந்த காவலாளி கண்களில் பட்டான். அவனை நோக்கி நடந்தேன்.

பழத்தோட்ட அருவி குறித்து ஏதும் தெரியாததுபோல் அவனிடம் பேச்சுக் கொடுத்தேன். நான் வடநாட்டில் வேலை செய்வதாகவும் குற்றாலத்துக்கு முதன் முறையாக மனைவியுடன் வந்திருப்பதாகவும் பாஸ் வாங்குவது குறித்து ஏதும் தெரியாது என்றும் டிக்கெட் மாதிரி ஏதும் வாங்க வேண்டுமானால் பணம் ஒரு பிரச்சினை இல்லை என்றும் கதை விட்டுப் பார்த்தேன். அவன் என்னை ஏற இறங்கப் பார்த்தான். என்னுடைய விரல் மோதிரங்களும் கழுத்து செயினும் அவனுள் என்ன எண்ண மாற்றங்களை ஏற்படுத்திய தென்று தெரியவில்லை.

“நீங்கள் எத்தனை பேர்?” என்றான்.

“இரண்டே பேர். நானும் என் மனைவியும்.”

“சரியா பத்தரை மணிக்கு இங்கே வாங்க” என்றான்.

இருளைக் கிழித்து சாலையை உருவாக்கியபடி முகப்பு விளக்கு முன்னே செல்ல பின்னேயே விரைந்து கொண்டிருந்தது கார். வேகங்காட்டியின் அறுபதில் முள் ஆடாமல் நின்றிருந்தது.

செல்ஃபோன் ஒலியெழுப்ப என் தோளில் சாய்ந்திருந்த டான்யா எடுத்து ஸ்கிரீனில் தெரிந்த எண்ணைப் பார்த்து விட்டு “உங்க மாமனார்தான்” என்றபடி அதனைக் காதில் பொருத்தி “சொல்லுங்கப்பா” என்றாள். ‘உங்க மாமனார்’ ஆகியிருந்தார் ‘எங்கப்பா!’

அவர் சொன்னது எதுவும் எனக்குக் கேட்கவில்லை.

“உங்க பாஸை நீங்களே வச்சுக்கோங்க. உங்களை என்னவோன்னு நினைச்சேன். அற்பப் பாஸுக்கு ரொம்பத் தான் அலட்டிக்கிட்டீங்க. என் வீட்டுக்காரர் ஜஸ்ட் லைக் தட் அந்த அருவிக்குக் கூட்டிட்டுப் போயிட்டார்....” என் வீட்டுக்காரர்!

தொடர்ந்து அவள் சொன்ன எதுவும் என் காதுகளில் விழவில்லை. வேகங்காட்டியின் முள் இப்போது எண்பதைத் தொட்டிருந்தது.

❋ ❋ ❋

# தங்கை

அண்ணன் வாசு நான்கு நாட்களில் ஊரிலிருந்து வருகிறான் என்கிற செய்தியே என்னைக் குதூகலத்தில் கொப்பளிக்க வைத்தது. என்னுடைய பிரச்சினைக்கு உடனேயே ஒரு முடிவு வந்து விட்டதாகத் தோன்றியது. கடவுள் இப்படித்தான் பேசுவார் என்று புத்தகங்களில் படித்தது நினைவு வந்தது. நிகழ்ச்சிகள்தான் அவருடைய பாஷை; அதில்தான் நமக்கான பதில்கள் உள்ளன என்று பாட்டி அடிக்கடி சொல்லுவாள்.

இரண்டு நாள் முன்புதான் அப்பாவுடன் சண்டை பிடித்துக் கொண்டிருந்தேன். "ப்ளஸ் டூல இவ்வளவு மார்க் எடுத்திருக்கேன். என்னைப் போய் பி.எஸ்.ஸி. படின்னு சொல்றீங்களே. நான் மெடிக்கலுக்குத்தான் அப்ளை பண்ணப் போறேன்."

அப்பா ஏதோ ஜோக் கேட்டவர்போல் சிரித்தார். தொடர்ந்து பேப்பரில் மூழ்கினார். அம்மா முகத்தைப் பார்த்தேன். அவள் என் பேச்சுக்கு இங்கே என்ன மரியாதை இருக்கு என்பது போல் உள்ளே போனாள்.

“அப்பா! நான் சீரியஸா சொல்றேன்”, என்று குதித்தேன்.

அப்பா பேப்பரை மடித்து வைத்து விட்டு நிமிர்ந்தார்.

“காயத்ரி! நீ என் செல்லப் பெண். உன்னிடம் பெரிய வார்த்தை எல்லாம் சொல்ல வேண்டாம்னு பார்த்தேன். ஒக்கே, பச்சையாவே சொல்லிடறேன். உன்னை மெடிக்கலுக்குப் படிக்க வைக்க எனக்கு வசதி கிடையாதும்மா. உன் அண்ணன்கள் ரெண்டு பேரையும் சரிக்கட்டி ஒரு வழியா செட்டில் பண்ணுவதற்குள் எனக்குத் தாவு தீர்ந்து போச்சு. இப்போ நான் சேமிப்பு இல்லாதவன். நிறைய சர்வீஸும் இல்லாதவன். உன் அக்கா கல்யாணக் கடன்களில் இருந்து முழுக்க மீளாதவன். இன்னும் உன்னைக் கட்டிக் கொடுக்க வேண்டிய பொறுப்பில் இருப்பவன். இதுதான் என்னைப் பற்றிய சித்திரம். நான்கு பிள்ளைகளைப் பெற்றிருக்க வேண்டுமா என்பது போன்ற அடிப்படைக் கேள்விகளில் நுழைந்து ஆத்ம பரிசீலனை பண்ணவோ குற்ற உணர்வில் குறுகித் தப்பிக்கவோ நான் தயாரில்லை. என்னால் முடிந்த அளவு மனதுக்கு வஞ்சகம் இன்றி எல்லாப் பிள்ளைகளுக்கும் நியாயம் செஞ்சிட்டுத்தான் வர்றேன். மீதி ஆண்டவன் விட்ட வழி. நீ நல்ல மார்க் எடுத்ததுக்கு வாழ்த்துக்கள் மட்டும்தான் என்னால் தெரிவிக்க இயலும். டாக்டராக்கிப் பார்க்க இயலாது. போதுமா?” என்றார் என் கண்களை நேர்ப்பார்வை பார்த்து.

இந்தக் கபடமற்ற பார்வைதான் எதிராளை ஸ்தம்பிக்க வைக்க அப்பாவுக்கு இயற்கை தந்துள்ள ஆயுதம்.

பொய்மையோ பூச்சோ இல்லாது வாதம் செய்வார். தன் சொற்களைத் தெளிந்த சிந்தனையில் மூழ்கடித்து வெளிப் படுத்துவதால் அதன் மேல் விவாதத்துக்கு வழியே இல்லாமல் போய்விடும்.

உடைந்து போனேன் நான். அப்பா சொல்வது நிஜம். அக்கா கல்யாணம் நினைத்ததைவிட கிட்டத்தட்ட இரு மடங்கு செலவுடன்தான் முடிந்தது. முதல் அனுபவம் என்பதாலும் மகளின் திருமணத்தில் பேரம் பேசி வியாபார நோக்கு காட்டுவதை அசிங்கம் என்று அப்பா கருதியதாலும் அதிக விரயம். அப்பா யாரையும் குற்றம் சொல்ல வில்லை. ஸ்வீகரித்துக் கொண்டார். அதிலிருந்து நிமிரும் முன் மூத்த அண்ணன் வேலைக்கு நின்றான். ஐம்பதாயிரம் கேட்கிறார்கள்; ஆனால் நல்ல வேலை என்றான். வேறு வேலைக்கு முயற்சித்துப் பாரேன் என்று அறிவுரை சொன்னார் அப்பா. மொத்த வீடும் உறவுக் கூட்டமும் அப்பாவுக்கு எதிரானது.

இந்தக் காலத்தில் வேலை கிடைப்பது எவ்வளவு கஷ்டம், ஏதோ பிள்ளை தன்னுடைய சொந்த முயற்சியில் வேலை வாங்கிட்டு வந்து நிற்கிறான், சில்லறைக் காசைப் பற்றி யோசித்தால் அவனுடைய வாழ்க்கையே பாழாகி விடுமே என்று சிபாரிசுக்கு வந்தவர்கள் யாரும் கடன் தரத் தயாராக இல்லை. அப்பா ஏற்பாடு செய்து தந்தார். அவன் பெங்களூரில் போய் வேலையில் செட்டிலாகி வீடும் பார்த்துக் கொண்டு அமர்ந்து விட்டான். மூன்று வருடங்கள் சம்பாதித்தான். அப்பா அம்மாவுக்கு ஒரு பைசா தந்ததில்லை. அப்பாவும் வாய் விட்டு அவனிடம் கேட்டதில்லை. அவனுக்குக் கல்யாணம் நடந்த

போது அந்தச் செலவுக்குக் கூட எதுவும் தரவில்லை. அம்மா ஒரு கட்டத்தில் நொந்து போய்க் கேட்டதற்கு "நானே கஷ்டத்தில் இருக்கிறேன்; இப்போ கல்யாணம் வேணும்னு கேட்டேனா? உங்களை ஊர்க்காரங்க எதுவும் சொல்லிடக் கூடாதுன்னு கல்யாணம் பண்ணி வைக்கிறீங்க. பெங்களூர்ல ரெண்டு பேர் எப்படி வாழப் போறோம்னு நானே கவலைல இருக்கேன்," என்றான் வெறுத்தவன் போல. ஆனால் அவன் வளைய வந்த விதமோ அவனுடைய உடைகளோ அப்படி ஒன்றும் அவன் கஷ்டத்தில் இருப்பதாகக் காட்டவில்லை. அந்தக் கல்யாணத்தோடு ஒதுங்கியவன்தான்.

அடுத்தவன் வாசுவுக்கோ படிப்பே ஏறவில்லை. அப்பா அவனை பிகாம் சேர்த்து விட்டிருந்தார். கூடவே ஐசிடபிள்யூ படிக்கச் சொன்னார். முக்கி முக்கிப் பார்த்தான். பிகாம் முடிக்கும் வரை அவனால் நான்கு பேப்பர் கூட முடிக்க முடியவில்லை. டெல்லியிலிருந்து மாமா ஒருமுறை வந்திருந்தார். பேச்சுவாக்கில் டெல்லியில் கம்ப்யூட்டர் கோர்ஸ் படித்தவர்களுக்கு நல்ல வேலை கிடைப்பதாகச் சொல்ல வாசுவுக்கு ஆசை வந்தது. டில்லிக்குப் போய்ப் படிக்கிறேன் என்றான். அப்பா அதே கோர்ஸை உள்ளூரிலேயே படிக்கலாமே என்று அபிப்ராயப்பட்டார்.

"மாப்ள! நீங்க எந்த உலகத்துல இருக்கீங்க? டில்லி மாதிரி பெரிய ஊர்ல படிச்சா எம்ப்ளாயிண்மெண்ட் ஆப்பர்சுனிட்டீஸ் எவ்ளோ தெரியுமா? உடனே கொத்திண்டு போயிடறான். வாசுவைப் பற்றிய கவலையை விடுங்கோ. அவனுடைய ஹாராஸ்கோப் படி அவன் அக்கவுண்ட்ஸ் லைனில் முன்னேற வாய்ப்பே இல்லை. அவன் எங்க

வீட்டிலேயே இருந்து படிக்கட்டும். உங்களுக்கு சங்கோஜமாக இருந்தால் மாசாமாசம் ஆயிரமோ ஏதோ கொடுத்திடுங்கோ, போதுமா?" என்று ஒரே போடாய்ப் போட்டார். அப்பாவுக்கு ரெட்டைத் திகைப்பு. வாசுவை டில்லி அனுப்புவது ஒருபுறம் இருக்க, அந்தக் கோர்ஸுக்கான ஃபீஸே முப்பதாயிரமோ என்னவோ சொன்னார்கள். அதுபோக மாதாமாதம் ஆயிரம். கூடவே கைச் செலவு என்று ஏதாவது மகன் கையில் கொடுக்க வேண்டும். தாங்குமா என்று திகைத்தார். இங்கிதம் கெட்ட மாமா இவ்விஷயத்தில் பணம் என்கிற தளபதியை முன்னிறுத்தி யுள்ளதால் வேறு என்ன காரணம் சொல்லி மறுத்தாலும் பணத்துக்கு யோசித்துத்தான் அப்பா என் வாழ்க்கையைப் பாழடித்து விட்டார் என்று வாசுவே நினைக்கும் வண்ணம் ஆகி விடும். நிஜத்தில் டெல்லி மாமா அப்படி ஒன்றும் வாசு மீதான அக்கறையில் அப்படிச் சொல்லவில்லை; இரண்டு வருட டெபுடேஷனில் அவர் மட்டும் வெளிநாடு போக வேண்டி இருப்பதால் வீட்டுத் துணைக்கு ஆம்பளை தேவை என்பதற்காகத்தான் தூண்டில் போட்டிருக்கிறார் என்று அப்புறம் தெரிய வந்தது.

வாசு போய் ஒன்றரை வருடங்களாச்சு. கம்ப்யூட்டர் கோர்ஸுக்கென்றே காத்திருந்தவன் போல் நன்கு பிடித்துக் கொண்டான். இடையே இரண்டு முறை வந்து போனான். நல்ல மாற்றம் தெரிந்தது. உடையில், பேச்சில், நாகரீகம் வந்திருந்தது. வார்த்தைகளில் நடுநடுவே ஆங்கில இந்திச் சொற்களை உபயோகிக்க ஆரம்பித்திருந்தான். வத்தல் உடம்புடன் இருந்தவன் கொஞ்சம் பூசி மெழுகியது போல் ஆகியிருந்தான். அவனுடைய கோர்ஸ் முடிந்து இவனுடைய பேட்சில் இருந்து இவன் உள்பட மூன்று பேர் உடனடியாக

வேலை பெற்றிருந்தனர். ஒரு வருஷம் ப்ரோபேஷன் பீரியடாம். பதினைந்தாயிரம் ஆரம்ப சம்பளம். ஒரு ப்ராஜக்ட் விஷயமாக ஊட்டி போகப் போவதாகவும், அப்போது வீட்டுக்கு வந்து மூன்று நாட்கள் தங்கிப் போவதாகவும், கூடவே அவனுடைய பேட்ச் மேட்டையும் கூட்டி வருவதாகவும் எழுதியிருந்தான்.

அப்பாவையும், அம்மாவையும்விட நான்தான் அவன் வரவை மிக ஆவலாக எதிர்பார்த்திருந்தேன். சின்ன வயதிலிருந்தே, பெரிய அண்ணன், அக்கா இருவருடன் மிக மரியாதை கலந்த பழக்கம் என்பதால் ஒதுக்கம் தானாகவே வந்திருந்தது. வாசுதான் எல்லாம். ஐந்து வயது வித்தியாசம் என்றாலும் நீ என்று ஒருமையில்தான் அழைப்பேன்.

“என் ஃப்ரண்ட்ஸ் முன்னாலேயும் இப்படிக் கூப்பிடற, ஒரு நாளைக்கு இருக்கு உனக்கு” என்பான்.

“அப்பா! வாசு பணம் தர்றேன்னு சொன்னா என்னைப் படிக்க வைப்பீங்களா?” என்று கேட்டேன்.

அப்பா சிரித்தார். “நான் உன் அண்ணன்களிடம் எப்போதுமே பணம் கேட்டதில்லையேம்மா. அது எனக்கு ஒப்புதல் இல்லாத விஷயமும்கூட காயத்ரி.”

“நீங்க ஒண்ணும் கேட்க வேணாம்ப்பா. நான் கேட்கிறேன். எனக்கு அவன் மறுக்க மாட்டான். தங்கை படிப்புக்கு அண்ணன் பணம் தந்தா என்ன? கடமை தானே. அதோட அவன் எனக்கு நிறையக் கடன்பட்டு இருக்கிறான்.”

"அவன் உனக்குக் கடன்பட்டிருக்கிறானா?" அப்பா வியப்புடன் கேட்டார்.

"அதெல்லாம் உங்களுக்குப் புரியாது. அவன் வரட்டும் பேசிக்கிறேன்", என்றேன் நமுட்டுச் சிரிப்புடன்.

'குறிச்சு வச்சுக்க காயத்ரி. இந்த ஒரோரு ரூபாயும் ஒரொரு லட்சமா ஒரு நாள் உனக்கு நான் திருப்பித் தருவேன். நான் பெரிய ஆளானப்புறம் பார்' வாசு அடிக்கடி சொல்லிய வசனம். அது ஒரு காலம்.

வீட்டில் எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்கும்போது தன் அறையில் தனியே படித்துக் கொண்டிருப்பான் வாசு. இன்னும் இரண்டொரு நாளில் ஐசிடபிள்யூ பரீட்சை இருக்கும். எனக்குப் பாவமாக இருக்கும். எனக்கெல்லாம் எதைப் படித்தாலும் சட்டென்று பதிந்து விடுகிறது. வாசுவுக்கு ஏன் மண்டையில் ஏறுவதில்லை என்று சங்கடமாக இருக்கும். முடிந்தால் அவனுக்காக நாம் படிக்கலாமே என்று கழிவிரக்கம் தோன்றும். தனியாக உட்கார்ந்து படித்துக் கொண்டு இருக்கிறானே என்று பரிதாபப்பட்டு எழுந்து அவனிடம் போவேன்.

அவன் மேசையின் மீது உள்ள புத்தகத்தை பூனையைப் பார்க்கும் சுண்டெலிபோல் பார்த்துக் கொண்டிருப்பான். "என்ன வாசு, படிக்கக் கஷ்டமா இருக்கா?" என்று கேட்பேன். "ஆமா இழவு. எனக்கு புரியவே மாட்டேங்குது", என்பான் எரிச்சலுடன். பரீட்சைகள் இல்லாத சிஸ்டம் வரணும் என்று சீர்திருத்தம் பேசுவான். நான் அவனையே பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருப்பேன். "ஏதாவது காசு வச்சிருக்கியாடி?"

என்று கேட்பான். "என் கிட்ட ஏது?" "வச்சிருப்படி. ஹாண்ட் பேகை நோண்டிப் பாரு. எதாவது இருக்கும். கடனாத்தாண்டி கேக்கறேன் குடு." "எதுக்கு?" "இப்படியே சின்னதா ஒரு வாக் போயிட்டு பஸ்ஸ்டாண்ட் கடையில் ஒரு டீ அடிச்சிட்டு வந்தா கொஞ்சம் ஃப்ரஷ்ஷா இருக்கும்." "டீ நான் போட்டுத் தர்றேனே" என்பேன் வேண்டுமென்றே. முறைப்பான். "ரெண்டு ரூபாய் பிச்சைக்காசுக்கு இவ்வளவு பேச்சு பேசற! வேணாண்டி உன் ரூபாயும் டீயும். போ உள்ளே. நான் படிக்கணும்" என்று முகத்தைத் திருப்பிக் கொள்வான். நான் உள்ளே போய் என் பேகைத் திறந்து சிறுவாடு ஒதுக்கி வைத்ததில் இருந்து மூன்று ரூபாய் எடுத்து வந்து கொடுப்பேன். "இதோடு அம்பத்தஞ்சு ரூபா ஆச்சு." "அம்பத்தஞ்சு லட்சம்னு சொல்லுடி. ஒரு நாள் பாரு ஐயா பெரிய ஆளா ஆனப்புறம் உன் ஒரொரு ரூபாய்க்கும் ஒரு லட்சம் தான் ரிடர்ன்," என்றபடியே மீசையைத் தடவிக் கொண்டு எழுவான். "அண்ணா! ரொம்பவும் தம் அடிக்காதே சட்டையெல்லாம் நாத்தம் வருது. அப்பா ஒரு நாள் சந்தேகப் பட்டுக் கேட்டார்", என்பேன் மெல்லிய குரலில். அவனுக்கு கேட் திறந்து விட்டபிறகு வந்து படுப்பேன். அவனை நினைத்தால் பாவமாக இருக்கும். அவனுக்கு நல்லபடியாக வாழ்க்கை அமைத்துக் கொடு பகவானே என்று மனம் குழைந்து வேண்டுகையில் கண்களில் நீர் துளிர்க்கும். அவனோ அந்த முறையும் ஃபெயில் ஆன செய்தியைக் கவலை இல்லாமல் சொல்லுவான்.

**வா**சு வந்தான். அவனுடைய பேட்ச் மேட் என்று அவன் அழைத்து வந்தது பையனல்ல, ப்ரதிமா தாஸ் என்கிற பெண். பெங்காலிப் பெண்ணாம். பெயருக்கேற்ற மாதிரி ப்ரதிமை மாதிரி இருந்தாள். நல்ல நிறம். மென்மையான குரல். வணங்கியபடி கை கூப்பியதில் குழந்தைத்தனம் தெரிந்தது.

இவள்தான் என் தங்கை என்று வாசு என்னை அறிமுகப் படுத்திய போது சிநேகமாக அருகே வந்து தோளையும் கைகளையும் பிடித்துக் கொண்டாள்.

அம்மா கொஞ்சம் பயம் கலந்த பார்வையுடன் வரவேற்றாள். ஆங்கிலம் பேச வராததால் வாசு மொழி பெயர்த்து உதவ சிரிப்பும் அசைவுமாகச் சமாளித்து விட்டு உள்ளே போய் விட்டாள்.

அப்பா அவளை உட்கார வைத்து உபசரித்தார். அப்பா அவ்வளவு அழகாக ஆங்கிலம் பேசுவார் என்பது எனக்கே அப்போதுதான் தெரிந்தது.

ப்ரதிமா பிரமிப்புடன் அப்பாவிடம் பேசிக் கொண்டு இருந்தாள். வாசு லேசான பதற்றத்தில் இருப்பது தெரிந்தது.

"மதுரை பார்க்கணும்னு ஆசைப்பட்டாப்பா. அதான் பிடிவாதமா என் கூடவே வந்திட்டா. நானும் காயத்ரியோட கம்பெனி கிடைக்குமேங்கிற நம்பிக்கைல சரி சொல்லிக் கூட்டி வந்திட்டேன். இன்னும் ரெண்டு நாளில் ஊட்டி கிளம்பிடுவோம்", என்று தன்னிலை விளக்கம் தந்தான்.

நான் அவளை மீனாட்சி அம்மன் கோவிலுக்குக் கூட்டிச் சென்றேன். இவ்வளவு பிரம்மாண்டமான கோவிலா என்று ஒவ்வொரு சதுர அடியையும் பிரமிப்புடன் ரசித்தாள். மதுரையைப் பற்றி, தமிழ் மக்களைப் பற்றி, எங்கள் வீடு பற்றி ஆர்வமான கேள்விகளால் துளைத்தெடுத்தாள். எனக்கு அவளுடைய நட்பு மிகவும் பிடித்துப் போனது. மதுரைக்கு இரண்டு நாட்கள் போதாது; ஊட்டி ப்ராஜக்ட் முடிந்து போகும் முன் இங்கே வந்து கொஞ்ச நாள் தங்கி விட்டுப் போங்கள்

நிறைய இடங்கள் பார்க்கலாம் என்று சொன்னேன். புன்னகைத்துக் கொண்டாள். அவளுடைய குடும்பம் பற்றிச் சொன்னாள். ஒரே பெண்ணாம். அம்மா கிடையாதாம். பணக்கார அப்பா பாதி நாள் வெளிநாட்டில் தான் இருப்பாராம். படித்தது பெரும்பாலும் ஹாஸ்டலிலும் ஆயாவிடமும் தானாம்.

'உங்க வீடு கோவில் மாதிரி இருக்கு. உங்கம்மா மடில படுத்து அழணும் போல இருக்கு. உங்கப்பா ரொம்ப கிரேட். எவ்வளவு விஷயங்கள் தெரிஞ்சு வச்சிருக்கார்...' என்று சொன்னபோது அவள் கண்களில் நீர் கோர்த்திருந்தது.

வழியில் பழைய தங்கம் தியேட்டர் ரோட்டில் மீன் கருவாடு வண்டிகளைக் கடந்து வரும்போது மூக்கினைப் பொத்திக் கொண்டபடி, "நீங்க பெங்காலிஸ் நிறைய மீன் சாப்பிடுவீங்களே" என்று கேட்டேன். "இப்போதெல்லாம் நான் சாப்பிடறதில்லை" என்றாள்.

வாசுவிடம் என் மெடிக்கல் படிப்பு பற்றிக் கேட்பதற்கு நேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். இரவு சாப்பாட்டுக்குப் பிறகு, "மொட்டை மாடிக்கு வா, உன்னிடம் பேச வேண்டும்", என்று அவனே அழைத்தான். ப்ரதிமாவுக்கு என் அறையை ஒழித்துக் கொடுத்துவிட்டு நான் மாடிக்குப் படியேறினேன்.

முன்னிரவுக் காற்றின் லேசான குளிர் உடம்பைத் தழுவியது சுகமாக இருந்தது. தூரத்தே தெரிந்த மீனாட்சி கோயிலின் கோபுரங்கள் மனதுக்கு தைரியம் தந்தன.

"வாசு! உங்கிட்ட பணம் இருக்கா?" என்று கேட்டேன் எடுத்த எடுப்பிலேயே.

"என்ன, திடீரென்று?" என்று கேட்டான்.

"பதில் சொல்லு" என்றேன்.

"அதெல்லாம் நிறைய வச்சிருக்கேன். இப்போதான் ஆரம்பம். இனிமேல் பாரு இரண்டே வருஷத்தில் என்னிடம் லட்சங்கள் புரளும்" என்றான் கம்பீரமாக.

எனக்குள் நிம்மதிப் பெருமூச்சு. "வாசு! என்னுடைய ரிஸல்ட் எல்லாம் வந்தாச்சு தெரியுமா? மேற்கொண்டு என்ன செய்வது என்பதை உன்னைக் கேட்டுக்கொண்டுதான் முடிவெடுக்கணும்னு இருக்கேன்" என்றேன்.

அவன் எங்கோ வெறித்துக் கொண்டிருந்தான்.

"என் பேச்சைக் கேட்கறியா இல்லையா? என்ன சிந்தனை?" என்று கலைத்தேன்.

"காயத்ரி! ஒரு ஸ்ட்ரெயிட் கொஸ்டின். ப்ரதிமா பற்றி என்ன நினைக்கற?" என்று கேட்டான்.

எனக்கு எல்லாம் புரிந்து போனது. ப்ரதிமா 'நான் மீன் சாப்பிடுவதில்லை' என்று சொன்னதற்கு அர்த்தம் இப்போது தெரிந்தது. வாசுவுக்கு இப்போது என்னுடைய உதவி அவசியம். அம்மாவிடமும் அப்பாவிடமும் பேசி விவகாரத்தை மீடியேட் செய்வதற்கு நான் தேவை.

"எனக்கு உன்னால் ஒரு காரியம் ஆகணும்டி. பதிலுக்கு நீ என்ன கேட்டாலும் செய்யறேன்" என்றான் இறைஞ்சும் குரலில்.

எனக்குள் ஏதோ ஒன்று அறுந்து விழுந்தது.

பெண் என்பவள் எப்போதும் எந்த வயதிலும் உறவின் எந்த வடிவத்தில் இருந்தாலும் கொடுப்பதற்கு மட்டுமே. இப்போது என்னால் வாசுவிடம் என் படிப்புக்கு உதவும்படிக் கேட்கவே முடியாது. அது பேரமாகி விடும். வேண்டாம். கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள் கேட்கக் கூடாது. அதுவும் யாருக்குக் கொடுத்தோமோ அவர்களிடம் கேட்கவே கூடாது.

என்னுடைய மௌனத்தைத் தப்பர்த்தம் செய்தது போல் "உன் படிப்பு பற்றி ஏதோ பேசணும்னு சொன்னியே", என்று கேட்டான் வாசு.

"இல்லையே! நான் பி.எஸ்.ஸி. தான் சேரப் போறேன். அதை விடு. உனக்கு ஏதோ காரியம் ஆகணும்னு சொன்னியே, என்ன அது?" என்று கேட்டேன்.

என் குரலில் ஒரு கம்பீரம் வந்திருப்பதை என்னாலேயே உணர முடிந்தது.

❁ ❁ ❁

# சக்கர நாற்காலி

தனி வீடு. சுற்றிலும் தோட்டம் போட வசதியாகச் சுற்றுச் சுவருக்கும் வீட்டுக்கும் நடுவே கொஞ்சம் திறந்த வெளி ஒரு கிணற்றுடன். ஏற்கெனவே ஒரு வேப்ப மரம், தென்னைமரம் மற்றும் மாமரம் ஆகியவை இருந்தன. சில வகை குரோட்டன்ஸ்களும் கூட இருந்தன. அருமையான காற்று. ஆழ்ந்து சுவாசித்து நெஞ்சு நிரப்பி மகிழ்ந்தேன். நாளை முதல் தியானம் செய்ய ஆரம்பிக்கலாம். வாழ்க்கையின் போக்கினையே மாற்றிவிட முடியும் என்று நம்பினேன். தோட்டத்தை ஒழுங்கு செய்து இன்னும் பயனுள்ள செடி கொடிகள் வளர்த்தால் வீட்டையே ஃபாம் ஹவுஸாக்கி விடலாம் என்று தோன்றியது.

வந்த அன்றே ராம்சரண் கம்பெனி எம்டி ரஞ்சேக்கர் செல்ஃபோனில் பிடித்தார். “சாரி சார்! உங்க ஃபேர்வெல்லுக்கு வரமுடியாமல் போயிடுச்சு. நான் லண்டன்ல இருந்தேன். என் பையனை அனுப்பி இருந்தேன்”, என்று சம்பிரதாயமான மரியாதையுடன் பேசினார். “நீங்க பேசாமல் எங்க கம்பெனில சேர்ந்திருக்கலாம். உங்களுக்காகவே பிளானிங் செக்ஷன் தலைமைப் பொறுப்பைக் காலியாக வைத்திருக்கிறேன்.

பிடிவாதமா ஓய்வெடுக்கப்போறதா சொல்லிட்டுப் போயிட்டீங்கன்னு சொன்னாங்க. எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கு. உங்க நல்ல பதிலுக்காகக் காத்திருக்கிறேன்", என்றார் தொடர்ந்து.

அவருக்கு நன்றி சொன்னேன். என்னுடைய திட்டங்களைச் சொல்லி அவருடைய அழைப்பினை நாசூக்காக மறுதலித்தேன். அவர் மட்டுமல்ல, பிரிவுபசார விழாவில் கூட ஆளாளுக்கு என் முடிவை விமரிசித்தார்கள். இத்தகைய உயர் பதவியில் இவ்வளவு காலம் இருந்து விட்டு அந்த அனுபவங்கள் சகலத்தையும் விட்டுவிட்டு நான் தனிமை நாடி செல்லக் கூடாது என்றும் குறைந்த பட்சம் ஒரு கன்ஸல்டன்ஸியாவது தொடங்கி அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் அறிவுரைகள் வழங்கியபடி பணியில் நீடிக்க வேண்டும் என்றெல்லாம் பேசிக் குளிர வைத்தார்கள்.

ஆனால் நான் என் முடிவில் உறுதியாக இருந்தேன்.

சின்ன வேலைகளில் குறைந்த சம்பளத்தோடு ஓய்வு பெறுகிறவர்கள் கூட நிறைவோடு அழகாகப் பதவி ஓய்வு வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள். ஜிஎம், டெபுடி டிரெக்டர், டிரெக்டர் மாதிரி பெரிய பதவிகளில் இருந்து போகிறவர்கள் தான் ஓரிரு மாதங்கள் கூட வீட்டில் கிடப்பதில்லை. எதாவது தனியார் நிறுவனங்களில் நுழைஞ்சிர்றாங்க. அதில் பல பேருக்கு அவங்க தகுதிக்கு ஏத்த பதவிகள் கூடக் கிடைக்கற தில்லை. எப்படித்தான் சமரசம் பண்ணிக்கறாங்களோ! நான் அந்த ரகமில்லை என்பதை நிரூபித்தே ஆக வேண்டும்.

"நம்முடைய கம்பெனியின் கிளைகளே இல்லாத ஓரிடத்தில் தனியாக வீடொன்று பிடித்து நானும் என்

மனைவியும் மட்டும் எங்களே எங்களுக்காக வாழப் போகிறோம். இனியாவது நான் என் மனைவியுடைய ஆசை களுக்கு மரியாதை அளித்து அவளுடைய எண்ணப்படியே தனியான இடத்தில் எங்கள் இருவருக்கும் மட்டுமான வாழ்க்கையை மேற்கொள்ளப் போகிறேன். என்னுடைய பணிஓய்வு டிக்ளரேஷன் இதுதான்."

அப்படித்தான் இந்த ஊருக்கே வந்து சேர்ந்தோம் நானும் என் மனைவியும். வேலையில் இருந்த நாட்களில் ஒரு வித எதிர்காலத் திட்டமும் இன்றி கம்பெனியில் குறைந்த வட்டியில் லோன் கிடைக்கிறது என்கிற ஒரே காரணத்துக்காக பரோடா அவுட்ஸ்கர்ட்ஸில் கட்டிய ஒரு வீடு யாருக்கும் உபயோகம் இன்றி நல்ல விலையும் கிடைக்காததால் விற்கவும் இயலாமல் இருக்கிறது.

இரண்டு பிள்ளைகளில் மூத்தது பெண். கல்யாணமாகி கல்கத்தாவில் இருக்கிறாள். பையன் பாங்க் ஆஃபீஸராக சென்னையில் வாசம். எங்களுடன் வந்து விடுங்கள் என்கிற அவர்களின் வேண்டுகோள்களை அன்புடன் புறந்தள்ளி இங்கே வாடகைக்குத்தான் வீடு பிடித்தேன்.

சாமான்கள் பார்ஸல் பிரித்து ஒழுங்குபடுத்தி வீடு ஒரு ரூபத்துக்கு வர மகளும் மருமகளும் வந்து நின்று உதவினார்கள். ஒருவாரம் உடனிருந்து விட்டு என்னையும் மனைவியையும் தனிக்குடித்தனம் வைத்தது போல் வைத்து விட்டுக் கிளம்பினார்கள்.

இந்த ஊரில் செல்ஃபோனுக்கான சிக்னல் விட்டு விட்டுத்தான் கிடைக்கிறது. இன்னும் டெலிஃபோன்

கனெக்ஷன் கிடைக்கவில்லை. டிபார்ட்மெண்ட்டுக்கு அலைய வேண்டும். போகலாம். இனிமேல் என்ன, நேரமோ நேரம் தானே! அப்படியே நர்ஸரி எங்காவது போய் தோட்ட வளர்ச்சிக்கு ஏதாவது வாங்கி வர வேண்டும். அங்கேயே ஆலோசனை தர யாராவது இருப்பார்கள்.

கல்லூரி நாட்களில் நன்றாக ஓவியங்கள் வரைவேன் நான். அப்புறம் விட்டுப் போச்சு. அதனை மீண்டும் பழகிப் பார்க்க வேண்டும். தொடர்பு விட்டுப் போனதால் தூரிகையை என் மனவாகுக்கு ஏற்ப கைகள் இழுத்துச் செல்லுமா தெரிய வில்லை. நேரமிருக்கிறதே, முயற்சித்துப் பார்க்கலாம். மனைவிக்கு ஓய்வு கொடுத்து அவ்வப்போது சமையலும் செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அவளிடம் நிறையப் பேச வேண்டும். கடந்த இருபது வருடங்களில் மனம் விட்டு சொந்த விஷயங்கள் எதையும் அவளிடம் பேசவில்லை; அவளையும் பேசவிட்டுக் கேட்டதில்லை. அந்த இடைவெளியை நிரப்ப வேண்டும்.

திட்டங்கள்... திட்டங்கள்...

புதிய உலக வாழ்க்கை முறைக்கு ஒத்துப் போதல் என்கிற பரீட்சைக்கு என்னுடைய தன்முனைப்பின் ஒத்துழைப்பு எந்த அளவுக்குக் கிடைக்கும் என்பது குறித்த பயம் மனமூலையில் எழுந்தது. அலட்சியப்படுத்தினேன்.

மறுநாள் காரினை எடுத்துக் கொண்டு டவுன் எல்லை தாண்டி நர்ஸரி இருக்கும் கிராமப் பகுதிக்குச் சென்று திரும்பிய போதுதான் அது நிகழ்ந்தது.

**கா**ர் திடீரென்று முன்பக்கம் சமநிலை இழந்து ஆட்டம் கொடுக்க எனக்குத் தெரிந்து விட்டது இடது பக்க டயர்

பங்க்சர் என்று. உடனடியாக ஓரம் கட்டி இன்ஜினை நிறுத்தினேன்.

அப்புறம்?

அப்படியே சில விநாடிகள் உட்காா்ந்து விட்டேன். காாின் கண்ணாடியை இறக்க முகூா்த்த நாளில் பேருந்து நிலையத்துக்குள் நுழையும் பேருந்தின் படிகளின் வழியே இருப்பவரை இறங்க விடாமல் உள்ளே பாயும் பிரயாணியாக உள்ளே பாய்ந்த சூடான காற்று இது வரையில் இருந்த உள் குளிர்ச்சியை விரட்ட என் நெற்றியில் அப்போதே வியா்வைப் பூக்களின் அணிவகுப்பு.

கதவைத் திறந்து இறங்கினேன். சுற்று முற்றும் யாருமே இல்லை. திடீரென்று இந்த உலகத்தில் எல்லோரும் எங்கோ ஒளிந்து கொண்டது போல் தனிமை. காரினை ஒருமுறை சுற்றி வந்தேன். டயரை மாற்ற வேண்டும். அப்போதுதான் மேற்கொண்டு பிரயாணம் செய்ய இயலும்.

ஒரு ஸ்டெப்னி மாற்றி விட முடியாதா? எத்தனை சினிமாக்களில் பாா்த்திருக்கிறேன். இன்று அனுபவித்தும் பாா்த்து விட்டால் போகிறது. டிக்கியில் ஸ்டெப்னி டயா் இருக்கும். ஜாக் வேண்டுமே. அது எங்கே இருக்கும்?

பின்பக்கமாக வந்து டிக்கியினைத் திறந்தேன்.

தடுப்பு விரிப்புகளை விலக்கி டயா் இருப்பதை உறுதி செய்தி கொண்டேன். அதனை வெளியே எடுப்பதற்கே நான்கு நட்டுகளைக் கழற்ற வேண்டும் என்பது அப்போதுதான் தெரிந்தது. அதற்கான ஸ்பானா்களைத் தேடி எடுப்பதற்குள் எனக்குப் பாதி மூடு போய்விட்டது. ஜாக்கினை வெளியே எடுத்து அதை இயக்கும் கம்பியைத் தேடிக் களைத்து...

ஜாக்கினை எங்கே வைத்து இயக்குவது என்பதற்கான இடம் தேடக் குனிய வேண்டி இருந்தது. தொப்பை தடுத்தது. கிட்டத்தட்ட படுத்துப் பார்க்க வேண்டி இருந்தது. சட்டையில் மண் ஒட்டியது. அது உயிரைத் தைத்தது.

ராஜரத்தினம்! இது உன் வேலையா? நீ இருந்த இருப்பென்ன, அழைப்புமணியை அழுத்திய மாத்திரத்தில் அலாவுதீன் பூதமாக உன் ஏவல்களை நிறைவேற்ற ஆட்கள் அணிவகுத்த நாட்களென்ன? வீட்டில் தண்ணீர் வரவில்லையா? மின் சப்ளையில் பிரச்னையா? கேஸ் கட்டாகி விட்டதா? ப்யூன் பார்த்துக் கொள்வான்; காய்கறி வாங்கித் தர பியூன்; ரேஷன் கார்டு, எலக்ஷன் கார்டு, கூடுதல் தொலை பேசி கனெக்ஷன், பிள்ளைகளுக்கு டிரைவிங் லைசென்ஸ், அவர்களுக்கான கல்லூரி அட்மிஷன்கள் எல்லாமே பியூன்களே செய்து விட்டார்கள். பெண்ணின் கல்யாணம் உள்ளிட்ட வீட்டு விசேஷங்களை காண்டிராக்டர்களின் பட்டாளங்கள் கவனித்துக் கொண்டார்கள்.

நான் என்னதான் செய்தேன்? கம்பெனியின் சிறந்த ஜெனரல் மானேஜர் என்று பாராட்டப் பெற்றேன். தன் சொந்த வேலைகளைக் கூடக் கண்டு கொள்ளாமல் கம்பெனி சிந்தனையுடனேயே இருப்பவன் என்று போட்டி மானேஜர்களால் கூட ஒப்புக் கொள்ளப்பட்டேன். அவார்டுகள் வாங்கிக் குவித்தேன்.

அவைகள் வெற்றிகளா, இயலாமைகளை மறக்கடித்த போதை வஸ்துகளா?

கம்பியைச் சுழற்றச் சுழற்ற கார் ஜிவ் ஜிவ்வென உயர்ந்த போது வியர்வையை மீறிக் கொஞ்சம் சந்தோஷமாகவும் இருந்தது. பலமுறை இத்தகைய காட்சிகளை சினிமாவில்

பார்க்கும் போதெல்லாம் அவ்வளவு எளிதாகச் சுழற்ற எப்படி கனமான பொருள் மேலே எழுகிறது என்று முயற்சித்துப் பார்க்கும் ஆசை, படித்த படிப்பையும் மீறி எழுவதுண்டு, பேருந்துகளிலும் ஆட்டோவிலும் இருக்கும் ரப்பர் முண்டு ஹார்னை அமுக்கிப் பார்க்கும் ஆசை போல்.

அது இப்படியா நிறைவேற வேண்டும்?

அறுபது வயதுக்கு இது அதிகப்படி வேலை என்று பட்டது. ஒருமுறை பரோடாவில் அவசர மீட்டிங் என்று அகமதாபாத்திலிருந்து அலுவலகக் காரில் சென்று கொண்டிருக்கும் போது வழியில் பங்க்சராகி விட்டது. சரியாக எட்டு நிமிடங்களில் ஸ்டெப்னி மாற்றி வண்டியை எடுத்தான் டிரைவர். அந்த எட்டு நிமிடங்களுக்குள் என்னிடமிருந்து அவனுக்குக் கிட்டத்தட்ட லட்சார்ச்சனையே நடந்தது இப்போது நினைவு வந்தது. அவன் மெதுவாகச் செய்வதுபோல் எனக்குத் தோன்றியது அப்போது. அவன் அன்று சாபம் விட்டிருப்பான்.

**மூ**ச்சு மூட்ட காரின் டயர் மாற்றி வீட்டுக்கு ஓட்டிவரும் வழியிலேயே தீர்மானித்து விட்டேன். மறுநாள் முதல்வேலையாக ரஞ்சேக்கருக்கு ஃபோன் செய்தேன்.

என் குரல் கேட்ட மாத்திரத்தில் பரிச்சயம் கண்டு உற்சாகமாகப் பேசினார்.

அடுத்த வாரம்.

ராம்சரண் கம்பெனியின் பிரம்மாண்டமான அலுவலகத்தின் மூன்றாவது மாடியில் பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்த குளிரூட்டப்பட்ட வராந்தா வழியாக ரஞ்சேக்கர் என்னைக் கைப்பிடித்தபடி அழைத்துச் சென்று பித்தளைத் தகட்டில் ஜொலிப்புடன் என் பெயர் மின்னிய

அறையினுள் நுழைந்து பெரிய மேசைக்குப் பின் இருந்த நாற்காலியில் உட்கார வைத்து சம்பிரதாயமாகக் கைதட்டினார். கூடவே வந்திருந்த டைரக்டர்களும் கைகளைத் தட்ட கம்பீரமாக உணர்ந்தேன். எதிரே இருந்த சுவரில் "உங்கள் குடும்பங்களை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்; கம்பெனி நலனை நீங்கள் கவனியுங்கள்'' என்கிற ஆங்கில வாசகம் கம்பெனியின் குறிக்கோளாக மிளிர்ந்தது.

நாற்காலி செல்லமாக அசைந்து கொடுத்தது. திடீரென்று என்னுடைய கால்கள் இரண்டும் இல்லாத மாதிரியான உணர்வு ஏன் என்னை வந்து தாக்கியது என்று தெரியவில்லை. குனிந்து நோக்க அது சக்கர நாற்காலியாகத் தோற்றமளிப்பதான பிரமை. என்னுடைய இயலாமைகள் என் முன்னே விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கின. என்னுடைய எல்லாத் தேவைகளையும் இதுநாள்வரை நிறைவேற்றித் தந்த அலுவலகப் பியூன்கள் என்னுடைய ஏவலாட்கள் அல்ல, அவர்கள்தான் என்னுடைய நாற்காலியின் உண்மையான சக்கரங்கள் என்பது தெரிய வர உள்ளூர அவமானமாக இருந்தது. நான் கால்களை மறந்து போனவனா, கால்கள் மரத்துப் போனவனா, கால்களே இல்லாதவனா என்பது பற்றிய பட்டிமன்றத்தின் முடிவை எதிர் நோக்கும் தைரியம் இன்றி கவனம் திரும்ப விழைந்து அழைப்பு மணியை அழுத்தினேன்.

கதவு திறந்தது உள்ளே நுழைந்த புதியவன் ஒருவன், "என் பெயர் முகேஷ். ஐ'ம் அட் யுவர் சர்வீஸ். மேடம் உதவிக்கு ஏற்கெனவே முருகன்னு ஒருத்தனை அனுப்பி இருக்கிறேன்," என்று பணிந்து நின்றான். புதிய சக்கரங்கள்!

❁ ❁ ❁

# தோழமை

மூன்று நாட்கள் குற்ற உணர்வாகவே இருந்தது. தொலைபேசியைப் பார்க்கும் போதெல்லாம் உறுத்தியது. தப்புப் பண்ணுகிறேனோ என்கிற தவிப்பு ஒரு புறமும், இல்லை இல்லை நான் பட்ட அதே அவஸ்தைகளை குறைந்த பட்சம் என்னிடமிருந்தாவது சாந்தினி பெறாமல் இருக்கட்டும் என்கிற எண்ணம் ஒரு புறமுமாக அல்லாடினேன்.

பத்து நாட்களுக்கு முன் அலுவல் விஷயமாக நான் ஹரியானா போகும் ரயில் பயணத்தில் இருந்த நாளில் சாந்தினியின் தந்தை சொந்த ஊரான தூத்துக்குடியில் இறந்து போயிருக்கிறார். மூன்றாம் நாள் ஓட்டல் அறை செட்டில் ஆனபிறகு, ரயில் பயணத்தில் ஏற்பட்ட ஓர் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக சாவகாசமாக சாந்தினி வீட்டுக்கு ஃபோன் செய்தபோது அவளுடைய கணவர் கோபி தான் எடுத்து விஷயம் சொன்னார். ஆடிப் போனேன். நன்றாக ஆரோக்கியமாகவே இருந்த மாமனார் திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பினால் இரவு தூக்கத்துனூடேயே இறந்து விட்ட விவரங்களை அவர் விவரிக்கக் கேட்டுக் கொண்டேன்.

முக்கிய சடங்குகள் முடித்து அப்போதுதான் அவர் மட்டும் திரும்பி இருப்பதாகவும் சாந்தினி இன்னும் அம்மாவுடன் தூத்துக்குடியில் இருப்பதாகவும் சொன்னார்.

சாந்தினிக்கு இது எப்பேர்ப்பட்ட இழப்பு என்பதை என்னால் உணர முடிந்தது.

மென்மையான தோழி அவள். பேச்சின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் அவளுடைய அப்பாவுக்கு ஒரு பாத்திரம் உத்திரவாதமாக இருக்கும். 'அப்பா புராணம் கொஞ்சம் ஜாஸ்தி தான்' என்று கோபி அடிக்கும் கேலிக் கமெண்ட்டுகளை அவள் பொருட்படுத்துவதில்லை. இந்த இழப்பின் கனம் அவளை எவ்வளவு தாக்கியிருக்கும் என்கிற அக்கறையான எண்ணமே எனக்குள் அதிகமான சுமையை ஏற்படுத்தியது.

இப்போது உடனடியாக தூத்துக்குடி கிளம்பிப் போய் அவளைப் பார்க்க மனம் துடித்தாலும் அடக்கிக் கொண்டேன். ஊரிலிருக்கும் அப்பாவுக்கு தொலைபேசியில் விவரம் சொன்னேன். அப்பாவுக்கு சாந்தினியைத் தெரியும். அடடா என்று இரக்கப்பட்டார். நான் தூத்துக்குடிக்கே போய்த் துக்கம் கேட்டு வர வேண்டும்; அது தான் முறை என்று பணித்தார்.

தாமதம் ஏற்கெனவே ஆகி விட்டது. இனி தொடர்பவை எல்லாம் சம்பிரதாயம் தொடர்பானவை. அந்த வீட்டில் சாந்தினியைத் தவிர வேறு யாரையும் எனக்குத் தெரியாது என்கிற நிலையில் இதில் பங்கெடுப்பதென்பது ஆள் கணக்குக் காகத் தவிர வேறு பலனளிக்கப் போவதில்லை. ஊரிலிருந்து அவள் வரட்டும் பார்த்துக் கொள்கிறேன் என்று மட்டும் சொன்னேன்.

இது என்ன விதமான சம்பிரதாயம் என்று விளங்கவில்லை. எந்த வீட்டிலாவது சாவு நிகழ்ந்தால் அது சம்பந்தமான இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்ள முடியாதவர்கள் அடுத்த சில நாட்களுக்குள்ளாவது அவர்கள் வீட்டுக்குப் போய் இறந்தவர்களின் முக்கிய உறவினர்களிடம் அந்த சாவு நிகழ்ந்த விதம் குறித்துக் கேட்க வேண்டும். சில சமூகங்களில் அதற்கான பிரத்தியேக நாட்கள் கூட உண்டு. ஞாயிறு அல்லது வியாழனில்தான் துக்கம் கேட்க வேண்டும். அதற்காக துக்கம் கேட்கச் செல்லும் வரையில் அவர்கள் கண்களில் பட்டுவிடாமல் இருக்கும் அபத்தங்களும் உண்டு.

**எ**னக்கு நன்றாக நினைவிருக்கிறது, என்னுடைய கல்லூரி நாட்களில் என் அம்மா இறந்து போன நாட்கள். என் உயிருக்குயிரான அம்மா. உறவுக் கூட்டம், பள்ளி நண்பர்கள் மட்டுமின்றி கல்லூரி வட்டாரத்திலும்கூட என்னுடைய 'அம்மாக் கோண்டுத்தனம்' மிகவும் பிரசித்தம். என்னால் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னும் கூட ஜீரணிக்க முடியாத ஓர் இழப்பாக அது இருந்தது.

அம்மாவின் இறப்பு உறுதி செய்யப்பட்டபோது எல்லோருடைய கவனமும் என் மீதுதான் திரும்பியது. அதனாலேயே எனக்கு அழுகை வரவில்லை. "உடைந்து அழுடா", என்றெல்லாம் எல்லோரும் என்னை உலுக்க முயன்றது ஏனோ சினிமாத்தனமாக இருந்தது. எல்லோரும் என்னைப் பார்த்துக் கொண்டிருந்ததாலேயே என்னால் அழ முடியவில்லை. இறுதிச் சடங்கு முடிந்து தொடர் சம்பிரதாயங்கள் பதினாறு நாட்கள் நடந்தன. என்னுடைய கண்கள் துளிக் கூடக் கலங்கவில்லை. உள்ளூர இருந்த

கலக்கமும் கனமும் விடுபட தனிமை தேடின. என்னுடைய துக்கம் போக உதவி செய்வதாக எண்ணி உறவும் நட்பும் படுத்திய பாடு தாங்க இயலாததாக இருந்தது.

கருமாதி முடிந்த மறுநாள் என்னை வலுக்கட்டாயமாக சினிமா ஒன்றுக்கு வேறு கூட்டிப் போனார்கள். என்னைக் கலகலப்பாக்குகிறார்களாம். சினிமாவில் நாயகனின் அம்மா இறந்து போக அவளுடைய இறுதிச் சடங்குகளை விலாவாரி யாகக் காட்டிக் கொண்டிருந்தார்கள். கதையில் தம் இல்லை என்றால் இந்த மாதிரி செண்டிமெண்ட்டல் காட்சிகளைத் தானே நம்புகிறார்கள் தமிழ் சினிமா டைரக்டர்கள். நானே ஒரு வித கேலிப் புன்னகையோடு அந்தக் காட்சியின் அபத்தங்களைப் பார்த்துக் கொண்டிருக்க, மாமா திடீரென்று எழுந்து பின் வரிசையில் இருந்தவர்களின் எதிர்ப்பை சட்டை செய்யாமல், “மாப்பிள்ளை! கொஞ்சம் என் கூட வா” என்று அழைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

காரணமே புரியாமல் வெளியே அவருடன் நான் நின்றிருந்தேன். சில நிமிடங்களுக்குப் பிறகு மீண்டும் என்னை உள்ளே அழைத்துச் சென்றார். அப்புறம்தான் தெரிந்தது அந்தக் காட்சி என்னை பாதித்துவிடப் போகிறது என்கிற பதற்றத்தில்தான் அவ்வாறு செய்தார் என்று. அப்படிப்பட்ட காட்சி இருக்கும் படத்தைத் தேர்ந்தெடுத்ததற்காக அவர் மகனுக்கு அன்று இரவு லட்சார்ச்சனை நடந்தது.

அதுவரைகூடப் பரவாயில்லை. அதற்குப் பிறகான நாட்கள்தான் என்னை மிகவும் படுத்தியவை. திடீர் திடீர் என்று யாராவது வீட்டுக்கு வந்த வண்ணம் இருந்தார்கள். மூத்த பையன் என்று மொட்டைத் தலையுடன் இருக்கும் என்னை

அருகே அழைத்து அமர வைத்துக் கொள்வார்கள். "உனக்கு இப்படி ஒரு தலை எழுத்தாடா?", "இப்படிச் சின்ன வயசில் உன்னை இப்படித் தவிக்க விட்டுப் போக அவளுக்கு எப்படிடா மனசு வந்தது?", "நல்லாத்தானேடா இருந்தா உங்கம்மா, என்னடா செஞ்சது?" என்பது போன்ற அபத்தக் கேள்விகளால் கொன்றார்கள்.

அவர்களுடைய துக்கம் இயல்பான ஒன்றும் கிடையாது. அவர்களைப் பொருத்தவரையில் அவர்கள் தம் வாழ்வில் பார்த்துவிட்ட எத்தனையோ சாவுகளில் இதுவும் ஒன்று. என் அம்மாவின் இழப்பு என்னைப் பாதித்து இருப்பதை அவர்கள் பிரதிபலிக்க வேண்டிய அவசியமும் இல்லை. நானே ஓரிரு முறை மாடி பால்கனியில் நின்றிருக்கும்போது பார்த்திருக்கிறேன். தூரத்தே சிரித்துப் பேசியபடி கலகலப்பாக வருபவர்கள்கூட எங்கள் வீட்டினை நெருங்கியவுடன் கர்ச்சீப்பால் முகத்தின் கலகலப்பினைத் துடைத்தெறிந்து விட்டு, முகத்தை வாட வைத்துக் கொண்டு, சோக சுந்தரர்களாக பாவித்துக் கொண்டு உள்ளே நுழைவார்க்ள்.

நடிக்கிறார்கள் என்று அவர்களுடைய செயல்களைக் கொச்சைப் படுத்த மனமில்லை என்றாலும் அடுத்தவர்களின் மென்மையான உணர்வுகளை பலி கொடுத்தாவது சம்பிரதாயத்தின் கடைப்பிடிப்பிற்கு முக்கியத்துவம் தந்துதான் ஆக வேண்டுமா என்கிற கேள்வி என்னைப் படுத்தி எடுத்த வாரங்கள் அவை.

யாராவது கண்களில் பட்டாலே மனப்புத்தகத்தினுள் ஒரு பக்கம் புரண்டெழுந்து ஒரு மாயப்பேனா இன்னார், அம்மா சாவு விஷயத்தில் தன் கடமை முடித்து விட்டாரா என்று டிக் அடிக்க ஆரம்பித்திருந்தது. பாக்கி இருப்பவர்

என்று அறிய வரும் போது உடலும் மனமும் நடுங்கியதுண்டு. போச்சுடா, என்ன கேட்கப் போகிறாரோ, எந்தெந்த விஷயங் களைக் கிளறித் தொலைப்பாரோ என்று பதற்றம் வந்து மூச்சுத் திணற வைக்கும். அவர்கள் பேசி முடிக்கும் வரை நானும் என் முகத்தைக் கட்டாயமாக இறுக்கமாக வைத்திருக்க வேண்டிய அவஸ்தை ஒரு கூடுதல் தண்டனை. எல்லாம் பேசி முடித்து விட்டு "நீ பெரிய பையன். பொறுப்பான பிள்ளை. அம்மாவின் இழப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து மத்தவங்களுக்கு ஆறுதலா இருக்கணும்'' என்கிற பொருத்தமில்லாத அறிவுரையையும் கடனே என்று சொல்லி விட்டுப் போவார்கள்.

அம்மாவின் சாவு என்பது மறக்கப்பட வேண்டிய ஒன்று அல்ல. அவளுடைய பூத உடல் எப்படி எரு அடுக்கி மண்பூசி வைக்கப்பட்ட நெருப்பில் கொஞ்சம் கொஞ்சமாக வெந்து பொசுங்கி சாம்பலாகி பிரபஞ்சத்தின் பூதங்களுடன் கலக்க அனுமதிக்கப்பட்டதோ அதேபோல் அவளுடைய நினைவு களும் நெஞ்சின் நினைவலைகளுடன் அலைக்கழிக்கப் பட்டு மெல்ல அடங்கி சிந்தையில் கலந்து அமிழ்ந்து ஆழமாக என்னுடைய ஒரு பகுதியாகவே ஆக சிறிது தனிமை தேவை. ஆறுதல் என்கிற பெயரில் எரியும் உணர்வுகளைக் கிண்டிக் கிண்டி விட்டு நாறடிக்காத ஒதுங்குதல் மற்றவர்களுக்கு வேண்டும். சுடுகாட்டில் எரியூட்டப்பட்ட கையோடு திரும்பிப் பார்க்காமல் எல்லோரும் போனது போல் அதோடு இது குறித்த பேச்சுக்களையும் விட்டு விட வேண்டும் என்கிற சம்பிரதாயம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

அப்பாவின் தொடர்ந்த தொலைபேசி அனர்த்தல்கள் தான் என்னுள் குற்ற உணர்வை அவ்வப்போது விதைத்தபடி

இருந்தன. சாந்தினியோ, எங்கள் நட்பு கண்ணியமான முறையில் தொடர அனுமதித்திருப்பதோடு அதில் சந்தோஷமும் கொண்டிருக்கும் கோபியோ எதாவது நினைத்துக் கொள்வார்கள் என்கிற அப்பாவின் பயம் அர்த்தமற்றது என்று விளக்க முடியவில்லை.

சாந்தினியைப் பார்க்கும் மனதைரியம் இந்தக் கணத்தில் இல்லை எனக்கு. எப்போதும் வாய் நிறைந்த புன்னகையோடு மட்டுமே என்னை வரவேற்றிருக்கும் அவள் முகம் துக்க இழுப்புகளால் கோணலாகி என்னை எதிர் கொள்ளும் கோலத்தைக் கற்பனை செய்யவே வேதனையாக இருந்தது. அவள் உடைந்து அழுவாள் என்பது கிடக்கட்டும், நானே உடைந்து விடும் வாய்ப்புகள் இருக்கின்றன. சாவினைச் சம்பிரதாயமாக எடுத்துக் கொள்ளும் பக்குவம் எல்லோருக்கும் இருக்கிறதோ இல்லையோ, எனக்கு இன்னும் வந்திருக்க வில்லை. நிகழ்வு முடிந்து இத்தனை நாட்கள் கழித்து அவளை அழவிட்டுப் பார்க்கும் குரூரம் எனக்கு இல்லை.

அதனாலேயே தூத்துக்குடி செல்வதில்லை என்று தீர்மானித்தேன்.

அவள் இங்கே வரும் வரை பொறுத்திருப்பது என்பதற்கும் மனம் இடம் தரவில்லை. தொலைபேசியில் பேசினால் என்ன என்று தோன்றியது. உள்ளூர பேச வேண்டிய வார்த்தைகளைப் பலமுறை ஒத்திகை பார்த்துக் கொண்டேன்.

**“ஹ**லோ!” என்றது சாந்தினியின் குரல் மெலிதாக. வழக்கமான விசாரிப்பின் எதிர்நோக்கில் அவளுடைய காது

மடல்கள் சூடாகி இருக்கும் என்பதை இங்கிருந்தே என்னால் உணர முடிந்தது. என்னுள் கழிவிரக்கம் பெருக்கெடுத்தது. என்னவொரு கொடுமையான வழக்கம்.

“ஹலோ! நான் மோகன் பேசறேன்” என்று ஆரம்பித்தேன். தொடர்ந்து, “டீ.வி. பார்த்திட்டிருந்தேன். உங்க வீட்டில் ஒருமுறை டீவி பார்த்திட்டிருந்தப்போ அசாருதீனுக்குப் பொம்பளை வேஷம் போட்ட மாதிரி இருக்கிறாள்னு நீங்க கமெண்ட் அடிச்சீங்களே ஒரு கதாநாயகியைப் பற்றி, ஞாபகம் இருக்கா? அந்தப் பாட்டு திரும்பவும் போட்டான். அது எந்தப் படம் தெரியுமா? இன்னிக்கு நோட் பண்ணிட்டேன்” என்றேன் அவசரமாக அவள் பேசும் முன் முந்திக் கொண்டவனாக.

“ஆங், சொல்லுங்க. எந்தப் படம்?” அவளின் குரல் பழைய தன்மையில் பத்தில் ஒருபங்குடன் மீண்டிருந்தது.

சொன்னேன்.

“அதுவா? சரி, எப்போ ஊரிலிருந்து வந்தீங்க? பயணமெல்லாம் எப்படி இருந்தது?”

“அது பத்தில்லாம் நெறைய சொல்லணும். உங்க காஃபியைக் குடிச்சபடி ஆரம்பிச்சாத் தான் கோர்வையா வரும்” என்றேன்.

“அடுத்த ஞாயித்துக் கிழமை தான் ஊருக்கு வருவேன்”

“காத்திருந்திட்டாப் போச்சு” என்றேன்.

மறுமுனை ஒரு கணம் மௌனம் காக்க, “அம்மாவையும் வேணா அழைச்சிட்டு வாங்களேன். அவங்களையும் பார்த்து

ஒருவருஷத்துக்கு மேல ஆச்சு. அவங்க கூட நான் நிறைய பேசியது கிடையாது. நம்ம அறுவை எல்லாம் கேட்கட்டுமே", என்றேன், அமைதியைப் பொறுக்க முடியாதவன் போல்.

"அந்த முயற்சிக்காகத்தான் அடுத்த ஞாயிற்றுக் கிழமை வரை தங்கல்."

"நல்லது. குட்டிப் பாப்பா எப்படி இருக்கிறா? புது ஆளுங்களைப் பார்த்ததும் அப்பா மாமாவெல்லாம் மறந்திட்டு ஜாலியா இருப்பாளே! சந்தோஷமா இருக்கிறது எப்படின்னு அவள் கிட்டத் தான் படிச்சுக்கணும்! சீக்கிரம் கூட்டிட்டு வாங்க, பார்க்கணும் போல இருக்கு. அப்பப்போ பேசுங்க, நானும் பேசறேன்", என்றேன்.

"புரிந்து கொண்டேன்" என்றாள்.

தொலைபேசியை வைத்துவிட்டு நிமிர்ந்த போது படபடப்பு குறைந்திருந்தது. நிதானமாக அழுகை வந்தது. சாந்தினியின் துக்கத்தை உள்வாங்கி ஒரு பாட்டம் அழுது தீர்த்தேன். அவளும் அங்கே இன்று அழக் கூடும். எல்லாம் மீறி அடுத்த வாரம் அவள் வீட்டுக்குப் போகும்போது என்னைப் புன்னகையுடன் அவள் வரவேற்பாள் என்பதற்கும் என்னால் இறுக்கம் இன்றிப் பேச இயலும் என்பதற்கும் உத்திரவாதம் கிடைத்த நிம்மதி மட்டும் இருந்தது.

# விளிம்பு

**"எ**ன்னை எதற்குப் பிழைக்க வைத்தீர்கள்?" என்பது தான் ராமதுரையின் முதல் உளறல் வார்த்தைகளாக இருந்தன அரைகுறையாக நினைவு வந்தவுடன்.

"உதைபடப் போற. பேசாம இருடா" என்கிற என் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்கும்முன் அவனுடைய நினைவு மீண்டும் தப்பி விட்டது.

நான் பதற்றமாக டாக்டரைப் பார்க்க, அவர், "இனிமேல் அபாயம் இல்லை. மொத்த விஷத்தையும் வெளியே எடுக்க வாமிட் பண்ண வைத்ததில் பாடி ரொம்பவே டி ஹைடிரேட் ஆகியிருக்கறதுனால இப்படித்தான் நினைவு தப்பித் தப்பி வரும். நீங்கதான் இங்கே ஐ.ஸி.யூ.வில் அவருக்குத் துணை இருக்கப் போறவரா?" என்று கேட்டார்.

"ஆமாம் சார்."

"இவரைத் தவிர வேறு யாரும் தன்னைப் பார்க்க உள்ளே வரக்கூடாதுன்னு பேஷண்ட் கண்டிப்பா சொல்லி இருக்கார் சார். இல்லைன்னா ரொம்பவும் எக்ஸைட் ஆகறார்" என்று ஒத்துப் பாடினார் ஸ்டாஃப் நர்ஸ்.

டாக்டர் புன்னகையுடன் என்னை ஏறிட்டார். “நீங்க...?”

“இவனோட க்ளோஸ் ஃப்ரண்ட் சார்”.

“வெல், நைட் முழுசும் டிரிப் ஏறட்டும். பார்த்துக்கோங்க. அவருக்கு நினைவு வரும் போதெல்லாம் வேற ஏதாவது பேச்சுக் கொடுங்க. கம்ப்ளீட்டா நினைவு திரும்பி தெளிவா எழுந்து உட்கார்ற வரைக்கும் ஏன் இப்படி தற்கொலைக்கு முயற்சி பண்ணினார்னு கேட்டு அவரை எக்ஸைட் ஆக்காதீங்க. அவருக்கு நல்லதில்லை”, என்று அறிவுரைத்து விட்டு அடுத்த படுக்கைக்கு நகர்ந்தார்.

அரைகுறை நினைவுடன் வாடிக் கிடக்கும் நண்பனைப் பரிதாபமாகப் பார்த்தபடி அருகே இருந்த ஸ்டூலின் மீது உட்கார்ந்து கொண்டேன். முப்பத்தைந்து வயதுக்குள் எதைக் கண்டு சலித்து விட்டதாக இந்தத் தற்கொலை முயற்சி?

டாக்டர், நர்ஸ்கள் பரிவாரம் எல்லாம் மொத்தமாக யூனிட்டைக் காலி செய்து விட்டுப் போய்விடும் முன் அவசரமாக டாக்டரிடம் ஓடிப் போய், இரவில் ஏதும் மருந்தோ ஊசியோ போட வேண்டி இருக்குமோ என்று கேட்டேன். “காலை வரை டிரிப்ஸ் மட்டும் போதும்” என்றார். “அவர் கையை அசைக்காமப் பார்த்துக்கோங்க” என்று கூடுதல் அறிவுரை கொடுத்தாள் கொஞ்ச வயசு நர்ஸ் ஒருத்தி. “டிரிப்ஸ் தீர்ந்து போனா என்ன செய்யணும் சிஸ்டர்?” என்று கேட்டேன். “நான் தான் டூட்டில இருப்பேன். என்னை வந்து கூப்பிடுங்கள் வந்து மாத்தி விடுவேன்” என்றாள் இதமாக. அவர்களுடனேயே வெளியே போய் வாடிய முகத்துடன் காத்திருந்த ராமதுரையின் மனைவி மற்றும் பெற்றோர்களிடம் தைரியம் சொல்லி காலை வரும்படி சொல்லி அனுப்பி விட்டு உள்ளே வந்தேன்.

சில்லென்ற ஏஸியின் தாக்கம் ஒருபுறமும், அதிகமாக ஒளி உமிழாத பல்புகளின் அரைகுறை வெளிச்சமும் அந்த இடத்தை அமானுஷ்யமாக ஆக்கி இருந்தது. அரசாங்க ஆஸ்பத்திரிக்கே உரிய சுத்தமில்லாத வாடை, உயிருக்குப் போராடியபடி ஆங்காங்கே படுக்கைகளில் கிடந்த நோயாளிகள், கிட்டதட்ட எல்லாப் படுக்கைகளுக்கும் மேலே பச்சைக் கலரில் கிராஃப் போட்டுக் கொண்டிருந்த விதவிதமான கருவிகள், நினைவின்றிக் கிடக்கும் நோயாளிகளின் அருகே அவஸ்தையுடன் அமர்ந்து கடவுளை வேண்டிக் கொண்டு இருக்கும் ஒற்றை உறவினர்கள் என்று சூழ்நிலையே வயிற்றைப் பிசைந்தது.

ராமதுரை லேசாக நெளிந்து கொடுத்தான். முனகினான். குனிந்து அவன் முகத்தருகே காதைக் கொண்டு போனேன். "நான் சாகணும்டா. என்னை ஏண்டா காப்பாத்தறீங்க?" என்றான் தூக்கத்திலேயே.

எனக்குக் கோபம் வந்தது. அடக்கிக் கொண்டேன். என்ன கொள்ளை வந்ததென்று இவன் இந்த முடிவை எடுத்தான்? அறிவு வேண்டாம்? முதிர்ச்சி வேண்டாம்? ஆண்மகன் தற்கொலைக்கு முயற்சிக்கலாமா? அப்படி என்ன பிரச்சினை? நண்பர்கள் உறவினர்கள் என்று கவனத் திருப்பலுக்கு எத்தனை வழிகள் உள்ளன? அப்படியா எல்லாக் கதவுகளும் அடைபட்டுவிட்டன?

தெளிந்து எழட்டும் படவா ராஸ்கல், தொலைத்து விட வேண்டும் என்று கருவிக் கொண்டேன்.

சோகமே உருவாக அழுதபடி திரும்ப மனம் இல்லாமல் இடுப்பில் குழந்தையுடன் திரும்பி நடந்த அவன் மனைவி,

மேல்துண்டை வாயில் பொத்தியபடி துக்கத்தையும் கண்ணீரையும் அடக்கப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்த அவனுடைய அப்பா, மகளுடைய வாழ்வைக் குறித்து அஞ்சுவதா மருமகனுடைய நிலைமைக்காக இரக்கப்படுவதா என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த மாமனார், மற்றும் அம்மா, மாமியார், தங்கை, உறவுக்காரப் பெண்கள், ஆண்கள் என்று அத்தனை பேர் உள்பட என் தூக்கத்தையும் இன்று கெடுத்து விட்டு மருந்தின் மயக்கத்திலும் களைப்பிலும் அரைகுறைத் தூக்கத்தில் இருந்து கொண்டு, 'நான் சாகணும்' என்று புலம்புபவனைப் பார்க்க சிரிப்பதா அழுவதா என்று புரியவில்லை எனக்கு. இதைக் கேட்டால் அவனுடைய மனைவியும் மற்றவர்களும் எவ்வளவு தூரம் வேதனைப் படுவார்கள் என்று கொஞ்சமாவது இவனுக்கு அறிவு வேண்டாம்?

மடத்தனமாக இவன் எதையோ செய்து வைக்க மற்றவர்களுக்கு எவ்வளவு கஷ்டம்? தற்கொலை என்றால் சாதாரண விஷயமா? ஊர் உலகமே, அந்த நிமிடத்திற்கு முன் வந்து நின்று உச் கொட்டி விட்டு கொஞ்சம் நகர்ந்தவுடன் கண்காது மூக்கு ஒட்ட வைத்து கதை கட்டி சந்தோஷப்படும் சமாச்சாரம் ஆச்சே! ஏதோ என்னுடைய மாமா எஸ்பியாக இருப்பதால் விவகாரம் போலீஸ் கேஸ் ஆகாமல் பார்த்துக் கொண்டு விட முடிந்தது. ஆஸ்பத்திரி ரெக்கார்டுகளுக்காக வேறு கதை ஜோடித்துக் கொள்ள முடிந்தது.

சாவின் விளிம்பில் நிற்கும்போதுகூட தன் மனைவியையோ குழந்தையையோ அம்மாவையோ அப்பாவையோ பார்க்க விரும்பாமல் என்னை மட்டுமே அருகே இருக்க அவன் அழைத்தது குறித்து என்னால் கர்வப்பட

இயலவில்லை. அந்த அளவிற்கு அவன் அவர்கள் அத்தனை பேர் மீதும் நம்பிக்கை இழந்து விட்டானா அல்லது குற்ற உணர்வின் வெட்க வீச்சின் காரணமாக அவர்களை ஏறிட்டுப் பார்க்கும் தைரியம் இல்லாதவனாக நண்பனாக என்னை மட்டும் அருகே அழைத்தானா என்று புரியவில்லை. அப்படி ஒரு குற்ற உணர்வு இருக்கும் பட்சத்தில் அரைகுறை நினைவில் கூட மீண்டும் சாவைப் பற்றியே ஏன் அவன் பேச வேண்டும்? எனக்குள் குழப்பம் கூடுகட்டிக் கொண்டிருந்தது.

படுக்கைக்கு கீழே சப்தம் கேட்டது. பாட்டிலில் அவன் யூரின் போவது தெரிந்தது. பாட்டில் நிறைந்து விட்டால் என்ன செய்வது என்று கேட்டு வர எண்ணி டூட்டி நர்ஸிடம் போனேன்.

வாரப்பத்திரிகை ஒன்றில் ஆழ்ந்திருந்த அவள், "இதென்ன கேள்வி? வந்து வேற ஒரு பாட்டில் வாங்கிப் போங்க", என்றாள் சாதாரணமாக. டாக்டரின் முன்னிலையில் கனிவாகப் பேசியவளின் புதிய அவதாரம் என் கவனத்தை அறைந்தது.

"அதையும் நான்தான் பொருத்தணுமா? அல்லது நீங்க வருவீங்களா?" என்று கேட்க எண்ணிய நான் அவளுடைய அலட்சியத்தில் மிரண்டிருந்தேன்.

சொட்டுச் சொட்டாக இறங்கிக் கொண்டிருக்கும் சலைன் துளிகளையே வெறித்தபடி உட்கார்ந்திருந்தேன். நடுநடுவே ராமதுரை கண்களை அகல விரித்துப் பார்த்தபடி ஏதாவது முனகுவதும் மீண்டும் மயங்குவதுமாக இருந்தான். அபாய கட்டத்தைத் தாண்டி விட்டான் என்பது தெரிந்தது. நிம்மதியாக இருந்தது.

இந்த முறை காப்பாற்றியாகி விட்டது. இவன் புலம்புவதைப் பார்த்தால் இன்னும் தீவிரமாக இருப்பான் போலிருக்கிறதே என்கிற கவலை வந்தது. இப்போதைக்கு தெளிவாகி எழுந்து விட்டான் என்றாலும் நிறைய கவுன்ஸலிங் தேவைப்படும் போலிருக்கிறதே. முதல் காரியமாக பெரியவர்களை வைத்து கொண்டு பேச வேண்டும். அதன் பிறகு ஒரு நல்ல சைக்கியாட்ரிஸ்ட்டிடம் அழைத்துச் சென்று இவனுடைய குழப்பங்களைத் தெளிவிக்க வேண்டும்.

அடுத்த ஓரிரு மணி நேரத்தில் டிரிப்ஸ் பாட்டில் தீர்ந்து போகும் நிலைக்கு வந்தது. நர்ஸிடம் ஓடினேன். அவள் யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள். பேசு குழலை மூடியபடி, “நீங்க போங்க, இதோ வந்திடறேன்”, என்றாள்.

நான் தயங்கியபடி ஓரிரு நிமிடங்கள் அங்கேயே நின்றிருந்து விட்டு படுக்கைக்கு வந்தேன். கால்மணி நேரம் ஆகியும் நர்ஸைக் காணோம். சலைன் பாட்டிலில் கடைசிச் சொட்டுக்கள் பலகீனமாக இறங்கிக் கொண்டிருக்க, மீண்டும் நர்ஸிடம் சென்றேன். அவள் சாவகாசமாக புத்தகம் படித்துக் கொண்டிருந்தாள். எனக்குள் முகிழ்த்த கோபத்தை அடக்கிக் கொண்டு அவள் எதிரே போய் நின்றேன்.

“என்ன?” என்றாள், என்னை முதன்முறையாகப் பார்ப்பவள் போல்.

“சிஸ்டர்! அப்போதே வந்தேன்.”

“என்ன விஷயமா?”

“சிஸ்டர்! சலைன் பாட்டில் மாத்தறதுக்கு வர்றேன்னு சொன்னீங்க” என்றேன்.

முகத்தைச் சலிப்பாக வைத்துக் கொண்டு ஒன்றும் பேசாமல் எழுந்தாள். அலமாரியைத் திறந்து புதிய பாட்டிலை எடுத்துக் கொண்டு என்னுடன் வந்து ராமதுரையின் புறங்கையில் செருகப்பட்டிருந்த பட்டாம்பூச்சி ஊசியைத் திருகி மூடிவிட்டு பழைய சலைன் பாட்டிலை நீக்கினாள்.

அவள் அதைச் செய்து கொண்டிருக்கும்போதே இன்னொரு படுக்கை நோயாளியின் உதவிக்கு இருந்த பெண் ஓடி வந்து, "சிஸ்டர்! அவருக்கு உடம்பு தூக்கித் தூக்கிப் போடற மாதிரி இருக்கு. சீக்கிரமா வந்து பாருங்க" என்று பதறினாள்.

"நீ போம்மா. இதோ வர்றேன்" என்றபடி சலைன் மாற்றிக் கொண்டிருந்தாள் நர்ஸ்.

"சிஸ்டர்! இதனை எப்படிச் செய்ய வேண்டும் என்று எனக்குச் சொல்லிக் கொடுத்தீர்கள் என்றால் உங்களை சிரமப்படுத்தாமல் நானே செய்து விடுவேன். நீங்கள் அவங்க கேஸைப் பார்க்கப் போகலாம்" என்றேன் மெதுவாக.

திரும்பி என்னை முறைத்தாள். "அதுக்குத்தான் நாங்க இருக்கறோம். நீங்க உங்க வேலையை மட்டும் பாருங்க. எதாவது இசகுபிசகாச் செய்துட்டு விஷயத்தைக் காம்ப்ளிகேட் பண்ணிடாதீங்க" என்றாள் கண்டிப்பான குரலில்.

"சிஸ்டர்!" என்று கெஞ்சாத குறையாக அரற்றிய பெண்ணிடம் வள்ளென்று எரிந்து விழுந்தாள் : "ஏம்மா! எனக்கென்ன ஆயிரம் கையா இருக்கு? இதை முடிச்சுட்டுத் தாம்மா வர முடியும். போ. போய் உன் புருஷன் பக்கத்துலயாவது இரு. அவ்வளவு ஸ்பெஷல் அட்டென்ஷன் வேணும்னா

பிரைவேட் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டியதுதான? இங்கே வந்து என் தாலியை ஏன் அறுக்கறீங்க?"

அந்தப் பெண் ஏதும் பேசாமல் நகர்ந்தாள். இது கோபம் காட்டும் நேரம் இல்லை என்று அடக்கிக் கொண்டேன்.

இரவு ஏறி இறங்க இறங்க ராமதுரைக்கு நினைவு மெல்ல மெல்லத் திரும்பிக் கொண்டிருந்தது. அதிக நேரம் விழித்திருக்கக் தொடங்கினான். பேச்சிலும் தெளிவு ஏறி இருந்தது. "நீ தூங்கலையாடா?" என்று கேட்டான்.

"இந்த யூனிட்டுக்குள் தூக்கம் வரணும்னா மயக்க மருந்து கொடுத்தால் தான் சாத்தியம்" என்றேன் சுற்றிலும் இருந்த படுக்கைகளை ஒரு பார்வை பார்த்தபடி. ராமதுரையின் முகத்தில் களைப்பை மீறிய புன்னகை விரிந்தது காண எனக்குள்ளும் நம்பிக்கை முழுதுமாகத் துளிர் விட்டு இருந்தது.

அடுத்த சந்தர்ப்பமாக அதிகாலை நாலரை மணிவாக்கில் நர்ஸிடம் எனக்குப் போக வேண்டி இருந்தது. ராமதுரை அடி வயிற்றில் லேசாக வலி இருக்கிறது என்றான். அது குறித்துக் கேட்பதற்காக நர்ஸிடம் போனேன். அவள் எதிரே இருந்த மேசையில் கைகளைக் கட்டி அதன் மீது நெற்றியைச் சாய்த்து தூங்கிக் கொண்டிருந்தாள். நான்கைந்து முறை அழைத்த பிறகு விழித்த எரிச்சலுடன் என்னைப் பார்த்த மாத்திரத்தில் அவளுக்குக் கோபம் பீறிட்டது.

"ஐயய்ய! உங்களோட பெரிய ரோதனையாப் போச்சு, பேஷண்டுக்கு உயிர் போகுதோ இல்லையோ என் உயிரை எடுத்துருவீங்க போலிருக்கே" என்றாள்.

அதற்காகவே காத்திருந்தது போல் வெடித்தேன். முழு இரவும் என்னிடம் மட்டுமின்றி எல்லோரிடமுமே அவள் காட்டிய

அலட்சியத்தைப் பார்த்துப் பார்த்து என்னுள் பொங்கியிருந்த அத்தனை கோபமும், வெளிவர வாய்ப்பு கிடைத்து அணை நீராகப் பிரவாகம் எடுத்தன. வாயடைத்துப் போய் அதிர்ச்சியுடன் என்னைப் பார்த்தபடி சிலையாக நின்றாள் அவள். என் வார்த்தைகளை இந்த ஜென்மத்தில் மறக்க மாட்டாள்.

ராமதுரையிடம் திரும்பினேன். என் முகம் இன்னும் சாந்தமடையாமல் இருந்திருக்க வேண்டும்.

“என்னடா ஆச்சு? கோபமா இருக்கற போலிருக்கு” என்று கேட்டான் ராமதுரை. அவனுடைய குரல் பலகீனமாக இருந்தாலும் இப்போது முழுதுமாகத் தெளிவு வந்திருந்தது. அதை வழிமொழிவதுபோல் முகமும் கிழக்கு வானமாக வெளுத்திருந்தது.

“இந்த நர்ஸ் பொம்பளை ரொம்பவும்தான் அலட்டிக்கறாடா. இந்த யூனிட் முழுசும் எமன் வாய் வரைக்கும் போய்ட்டு திரும்பி இருக்கற உசிர்கள். அவை அவஸ்தைல இருக்குங்கற அக்கறை கொஞ்சமாவது வேணாம்? சேவை உணர்வும் கருணையும் இல்லாமல் ஏனோ தானோன்னு வேலை பார்க்கற புத்தி இருக்கறவளெல்லாம் எதுக்கு நர்ஸ் உத்தியோகத்துக்கு வர்றா? இன்னிக்கு சீஃப் டாக்டர் வரட்டும், வச்சுக்கறேன் இவளுக்கு கச்சேரியை” என்று பொரிந்தேன்.

“டேய்!” என்று ஈனஸ்வரத்தில் பதறினான் ராமதுரை. “நர்ஸ் கூட ஏண்டா வம்பு பண்ற? அவ பாட்டுக்கு கோபத்துல எதாவது ஊசியைப் போட்டு என்னைக் கொன்னு போடப் போறா”, என்றான்.

❋ ❋ ❋

# இது சாபமல்ல; வரம்!

“மேடம்! உங்களை அக்கான்னு கூப்பிட்டுக்கட்டுமா? அப்பத்தான்க்கா என் மனசுல உள்ள பயத்தை எல்லாம் கொட்டி அழ முடியும்” கலக்கமாக வெளிப்பட்டது பத்மினியின் குரல்.

காக்கிச் சட்டையின் விறைப்பு உள் பக்கமாகக் கொஞ்சம் குழைந்தது.

பெண் போலீஸ் இன்ஸ்பெக்டர் . ராமதிலகத்தின் கண்களில் கனிவு படலமிட்டது. இதழ்களில் புன்னகை எட்டிப் பார்த்தது.

“உட்கார்ந்து சொல்” என்றாள்.

பத்மினி சொல்ல ஆரம்பித்தாள். அவளும் அவளுடைய தாய்மாமன் மகன் கணேசனும் சின்ன வயதில் இருந்தே கணவன் மனைவியாக இரண்டு வீட்டாராலும் அங்கீகரிக்கப் பட்டு வளர்க்கப்பட்ட கதையைச் சொன்னாள். விவரம் அறிந்த நாள் முதலாக இந்த வார்த்தைகளையே கேட்டு வளர்ந்ததால் தன்னையும் அறியாமல் கணேசன் மீது ஒரு வித ஈர்ப்பு ஏற்பட்டு மனதில் அதுவே காதலாக உருமாறிவிட்டதாகவும் பின்னாளில் அவன் இல்லாவிட்டால் தான் இல்லை என்கிற

அளவுக்கு அந்த எண்ணம் உறுதிப்பட்டு விட்டதாகவும், இப்போது இருவர் வீட்டிலும் இந்தக் காதலை எதிர்ப்பதாகவும் கண்ணீர் மல்கத் தெரிவித்தாள்.

பத்மினியின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த ராமதிலகம் அவளுடைய கண்ணீர் பொய் இல்லை என்பதை வெகு சீக்கிரம் கண்டு கொண்டாள். பத்மினிக்கு அருகில் நின்ற தன்னுடைய உறவுக்காரப் பெண் சுகந்தியைப் பார்த்தாள்.

"உனக்கு இந்த விவகாரம் முழுசாத் தெரியுமா?"

"தெரியும்க்கா. இவள் எனக்கு சின்ன வயசில் இருந்து தோழி. இவங்க இரண்டு போர் வீட்டிலயும் எவ்வளவு ஆசை காட்டி வளர்த்தாங்கன்னு எனக்குத் தெரியும்".

"சரி, இவளை என்னிடம் எதுக்குக் கூட்டி வந்த?"

"அக்கா! இவள் தற்கொலை செஞ்சுக்குவேன்னு ரெண்டு நாளா புலம்பிட்டிருந்தா. அதான் உங்ககிட்ட ஏதாவது தீர்வு கிடைக்கும்னு கூட்டிட்டு வந்தேன்."

ராமதிலகம் இரண்டு பெண்களையும் மாறி மாறிப் பார்த்தாள்.

கல்லூரியில் இரண்டாம் ஆண்டில் இருக்கிறாள் சுகந்தி. ஒரே வகுப்பில் படித்தவர்கள் என்றால் பத்மினிக்கும் இப்போது பதினெட்டு வயது முடிந்திருக்கும்.

"படிக்கிறயா?"

"இல்லைக்கா. படிப்பை விட்டு நின்னுட்டேன்".

"ஏன்? படிப்பு வரலையா?"

"அக்கா! ஸ்கூல்ல அவ முதல் மூணு ராங்க்குக்குள்ள வருவா" என்று குறுக்கிட்டாள் சுகந்தி.

"அப்புறம் ஏன் படிப்பை நிறுத்திட்ட?"

"என் மாமனுக்கு அதுக்கு மேல படிப்பு இல்லை. அதான்...."

ராமதிலகத்துக்கு சிரிப்பு வந்தது.

"உங்க ரெண்டு வீட்டுக்கும் ஏன் இப்போ திடீர் தகராறு?"

"எங்கப்பாருக்கு லாட்டரில பத்து லட்ச ரூபா விழுந்திச்சு போன வருஷம். அன்னில இருந்து தலைகால் புரியாம திரியறாரு. என் மாமன் இப்போ கஷ்டத்துல இருக்காரு. அந்த இளக்காரம்" என்று வெறுப்பை உமிழ்ந்தாள் பத்மினி.

"இப்போ நான் என்ன செய்யணும்னு நினைக்கிற?"

"அக்கா! எங்க வீட்டுல யாரோ சம்பந்தமில்லாத ஒரு பணக்கார வீட்டுல என்னைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செஞ்சிட்டிருக்காங்க. சத்தியமா சொல்றேங்க்கா, என் மாமன் எனக்கு இல்லைன்னு ஆச்சுன்னா நான் உசிரையே விட்டுருவேன். நீங்கதாங்க்கா எப்படியாவது எங்க ரெண்டு பேத்தையும் சேத்து வைக்கணும்".

"உன் மாமன் உன்னைக் கட்டிக்கத் தயாரா இருக்கானா?"

"இருக்காருக்கா. அதுனாலதான எங்கப்பாருகிட்ட வீரம் பேசப் போய் அடிபெத்து ஆஸ்பத்திரில கெடக்காரு".

"அவனோட அப்பா அம்மா என்ன சொல்றாங்க?"

“அவுக என்ன சொல்லுவாக. எங்கப்பாரோட கோர மொகத்தைக் கண்டு மெரண்டு போய்க் கெடக்காங்க. அன்னிக்கு நான் போய் அவுங்க வீட்டுல அளுதேன். நீ உங்கப்பாரு பேச்சைக் கேளு புள்ள, எங்க பையன் எங்களுக்கு உசிரோட வேணும்னு என் கையைப் பிடிச்சு வெளில தொரத்திட்டாங்க”.

ராமதிலகம் நெற்றியில் தட்டிக் கொண்டாள்.

“ஸோ, ரெண்டு வீட்டிலயும் தயாரில்லை”.

“ஆமாங்கக்கா”.

“உன் மாமன் பையன் ஏதாச்சும் வேலை வெட்டி பார்க்கிறானா?”

“டவுன்ல ஒரு கடையில வேலை பாக்குது”.

“இப்போ எந்த நிலையில் இருக்கான்?”

“நாளக்கு ஆஸ்பத்திரில இருந்து வீட்டுக்குப் போவாங்கன்னு சொல்லிக்கிட்டாங்க”.

“நீ போய்ப் பாத்தியா?”

“அப்படிப் பார்க்க வந்தா எங்கப்பா கிட்ட சொல்லிடுவேன்னு அத்தையே மிரட்டி வச்சிருக்கா. அப்படி போட்டுக் குடுத்தாள்னா அவ்ளோதான். எங்கப்பாரு என்னைக் கொன்னே போட்டிருவாரு”.

“உங்களுக்குக் கல்யாணம்னு ஆனா பொறுப்பா வச்சுக் காப்பாத்துவானா?”

பத்மினியின் கண்களில் மீண்டும் கண்ணீர் பெருகியது. இந்த முறை நன்றிப் பெருக்கில்.

“கண்டிப்பா அக்கா. நீங்க மட்டும் எங்க கல்யாணத்தை நல்லபடியா நடத்தி வச்சீங்கன்னா எந்த ஜென்மத்துலயும் மறக்க மாட்டேங்க்கா. எங்களுக்கு ஆம்பளைப் பையன் பொறந்தா ராமன்னும் பொம்பளைப் புள்ள பொறந்தா திலகம்னும் பேரு வக்கிறோம்க்கா'' அந்தக் கணத்திலேயே தனக்கு கணேசனுடன் கல்யாணமே நடந்து விட்டது போன்ற திருப்தியில் வார்த்தைகள் அடிவயிற்றில் இருந்து வந்தன பத்மினிக்கு.

ராமதிலகத்துக்குச் சிரிப்பு வந்தது.

“சரி, சரி, ரொம்பவும் ஐஸ் வைக்க வேணாம். நான் வேணா உங்கப்பா கிட்டப் பேசிப்பாக்கவா?”

“ஐயோ!” என்று அலறாத குறையாகத் துள்ளினாள் பத்மினி. “அவ்வளவுதாங்க்கா, என்னுடைய கையைக் காலை முறிச்சு மூலையில கெடாசி எவனுக்காவது கட்டி வச்சிருவார் எங்கப்பா. நான் இப்போ இங்கே வந்ததே கூட சுகந்திக்கு ஒடம்பு சொகமில்லை பார்த்துட்டு வர்றேன்னு சொல்லித்தான். இந்த மாதிரி உங்க கூட பழக்கம் வச்சிருக்கேன்னு தெரிஞ்சாலே தொலைஞ்சேன்”.

ராமதிலகம் சிந்தனையில் ஆழ்ந்தாள். “சரி, நீ கவலைப் படாமல் போ. எப்போ என்ன செய்யணும்னு நான் சொல்லி விடறேன். அதுவரைக்கும் நீ உங்க வீட்டுல யாருக்கும் சந்தேகம் வராதபடிக்கு நல்ல பிள்ளையா நடந்திட்டிரு” என்று தேற்றி அனுப்பி வைத்தாள்.

அடுத்த நாட்களில் ராமதிலகம், பத்மினி சொன்னவை களில் எவ்வளவு உண்மை இருக்கிறதென்று தன்னுடைய ஆட்கள் மூலமாக விசாரித்தாள். இரண்டு வீட்டாருமே வீண்

பிடிவாதங்களில் அழுத்தமாகப் பொதிந்து போய் இருப்பது அவளுக்குத் தெரிய வந்தது. இவர்களுடைய பிடிவாதத்தால் உண்மையான அன்புடன் இணைய விரும்பும் ஒரு ஜோடி நியாயமின்றிப் பிரிக்கப்பட்டுப் பாழாக இருக்கிறார்கள் என்பதும் தெரிய வர தன் மேலிடத்துக்கு விஷயத்தைத் தெரிவித்து அவர்களுடைய சம்மதத்துடன், ஒரு நாள் காவல் நிலையத்திலேயே கணேசனுக்கும் பத்மினிக்கும் திருமணத்தை நடத்தி வைத்தாள்.

விஷயம் அறிந்து இரண்டு வீட்டாரும் காவல் நிலையம் முன்பு கூடி விட்டார்கள்.

பெரிய அளவில் வாய்ச் சண்டைகள். தரக் குறைவான வார்த்தைகளால் இரண்டு தரப்புக்கும் அர்ச்சனைகள். ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்ளாத குறை. இரண்டு தந்தைகள் குறிப்பாக பத்மினியின் தந்தையின் கண்களில் தெரிந்த அனல் ராமதிலகத்துக்கு உள்ளூர ஒரு வித கலக்கத்தையே கொடுத்தது.

ஆனால் கணேசனும் பத்மினியும் தாலி கட்டி விட்ட தைரியத்தில் அலட்சியமாக இருந்தார்கள்.

“உங்களால் முடிந்தால் எங்களை ஆசீர்வதித்து வாழ வைங்க. அல்லது எங்க போக்கில் விட்டுடுங்க, நாங்க எங்க வழியைப் பாத்துக்கிட்டு டவுன்ல போய் வாழ்ந்துக்கறோம்”.

“எப்படி வாழ்ந்திடறீங்கன்னு பார்த்திடறேன்” என்று உறுமினார் பத்மினியின் தந்தை.

அமைதியாகப் பேசிச் சமாதானம் செய்ய முடியாமல் போக, ஓங்கிய குரலில் மிரட்டித் தான் அவர்களை வாயடைக்கச் செய்ய முடிந்தது ராமதிலகத்தால்.

"இதோ பாருங்க. என்ன இருந்தாலும் நீங்க இந்த ஜோடியின் பெற்றோர்கள்ங்கற ஒரே காரணத்துக்காகத்தான் உங்க கோபத்துக்கு மரியாதை கொடுத்து உங்க பேச்சுக்குக் குறுக்கே பேசாமல் இருந்தேன். இதே ஸ்டேஷன்ல பல கல்யாணங்கள் நடந்திருக்கு. உங்களை விட அதிகமா கோபம் காட்டின பல பெற்றோர்கள் கொஞ்ச நாள்லயே சமாதானமாகி சந்தோஷமா சேர்ந்துகிட்டதை நாங்களும் பார்த்திருக்கோம். உங்க கோபம்லாம் தணிஞ்சப்புறம் நிதானமா யோசிச்சுப் பார்த்தீங்கன்னா உங்க பிள்ளைங்க அப்படி ஒண்ணும் மாபாதாகம் பண்ணிடலைன்னு தெரிய வரும். அது வரைக்கும் கொஞ்சம் பொறுமையா உங்க வீடுகளுக்குப் போங்க" என்று அவர்களைக் கலைத்து விட்டாள். அவர்கள் கோபக் கனல் தெறிக்கும் பார்வைகளுடன் நகரும்போது "ஒண்ணே ஒண்ணு எச்சரிக்கையாச் சொல்றேன். இந்த ஜோடியில் யாருக்காவது ஏதாவது ஆச்சு, நீங்க அத்தனை பேரும் கம்பி எண்ண வேண்டியிருக்கும்" என்றாள் அழுத்தமான குரலில்.

பத்மினியின் தந்தை அவள் தாயைப் பளார் என்று அறைந்தார், அத்தனை பேருக்கும் முன்பாக.

"பொண்ணாடி வளத்திருக்க, நாயே! கண்ட கண்ட இடத்துலயும் இப்படிக் கேவலப்பட வச்சுட்டாளேடி" என்று உறுமியபடி நடந்தார்.

கண்ணீர் பெருகிய கண்களுடன் காவல் நிலைய வாசல் வரை சென்ற பத்மினியின் தாய் அங்கே குனிந்து இரண்டு கைகளாலும் மண்ணை வாரித் தூற்றினாள் ராமதிலகத்தை நோக்கி.

"அடிப்பாவி! நாலு வார்த்தை பக்குவமா படிச்சுச் சொன்னா சரின்னு கேட்டுக்கற என் மகளோட மனசைக் கெடுத்து உன் போலீஸ் உத்தியோகம் கொடுக்கற திமிர்ல

அவளை என் பகையாளி மகனுக்குக் கட்டி வச்சு, என் மேல தூசு படாமப் பார்த்துக்கிட்டு வாழ்ந்த புருஷன் கையால எனக்கு அடி வாங்கிக்கொடுத்திட்டல்ல. பத்மினியைப் பெத்த என் வயிறெறிஞ்சு சொல்றேண்டி. நாளைக்கு உன் மகளும் இப்படி எவனையாவது கூட்டிட்டு ஓடிப் போய் உன்னைக் கேவலப் படுத்தும்போது தெரியும்டி, பெத்த வயித்தின் வேதனைன்னா என்னன்னு" என்று ஆவேசமாய் ஓங்காரமாய்ச் சொல்லி விட்டு நகர்ந்தாள்.

ராமதிலகம் ஸ்தம்பித்தாள். அவளையும் அறியாமல் அவளுடைய கைகள் அடி வயிற்றைத் தடவின. நிற்க முடியாமல் தள்ளாடியதுபோல் தொப்பென்று அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

சுற்றி இருந்தவர்கள் ஆறுதலாக அவள் தோளில் கை வைத்தார்கள்.

"அவங்க சார்பில நான் மன்னிப்பு கேட்டுக்கறேங்க்கா" என்று அழுதாள் பத்மினி.

"அவ கிடக்கறா. ஏதோ கோபத்துல உளறிட்டுப் போறா. இதை எல்லாம் பெரிய சாபம்னு நினைச்சு கலங்காதீங்க" என்றார்கள் மற்றவர்கள்.

ராமதிலகத்தின் இதழ்களில் விரக்தி மீறிய ஒரு புன்னகை. 'அந்த வார்த்தைகள் கட்டாயம் பலிக்கணும் கடவுளே. அதுக்காகவாவது எனக்கு ஒரு பெண் பிள்ளை பிறந்தாகணுமே' என்கிற வெளிச்சொல்லாத வார்த்தைகள் திருமணமாகி ஆறு ஆண்டுகள் ஆகியும் ஜனிக்காத அவள் வயிற்றினைச் சுகமாக வருடி விட்டன.

❁ ❁ ❁

# பத்ம வியூகம்

“நான் போன பிறகு படித்துப் பாருங்கள். இப்போதாவது சொல்லியே ஆக வேண்டும் என்று என் மனதில் பட்டவைகளை எல்லாம் எழுதியிருக்கிறேன். தவறாக இருந்தால் மன்னித்துக் கொள்ளுங்கள்” என்கிற முன்னுரையோடு காகிதக் கற்றை ஒன்றைத் தந்த மகன் பரதனை மீனம்பாக்கம் காமராஜர் டெர்மினலின் உள்ளே ஏஸி குளிரில் உச்சி மோந்து ஆசீர்வதித்து அவன் எஸ்கலேட்டரில் சிறிது சிறிதாக மறையும் காட்சிக்குக் கண்ணீர் மல்கிய கண்களோடு டாட்டா காண்பித்து விட்டு பார்வையைத் திருப்ப மனமின்றி அப்படியே சிலையாக சிறிது நேரம் நின்றிருந்து விட்டு பக்கவாட்டில் திரும்பி மனைவி மங்களத்தை சிவராமன் பார்த்த போது அவள் முந்தானையால் வாயையும் கண்களையும் மறைத்திருந்தாள்.

மூன்றாவது பிள்ளை அமெரிக்காவுக்குப் போகிறான். இங்கிருந்து மும்பை போய் அங்கிருந்து நாளை விமானத்தில் ஆம்ஸ்டர்டாம், அப்புறம் அங்கிருந்து என்று தொடரப் போகும் பயணம். சிறு வயது முதல் சொல்லிக் கொண்டே

இருந்ததை சாதித்து விட்டான். பெருமை ஒருபுறம் இருந்தாலும் அதனையும் மீறி எதையோ இழந்தது போன்ற மனநிலை.

கிட்டத்தட்ட தானும் அவளுடைய மனநிலையிலேயே இருந்ததால் அவள் தன் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக் கொள்ள அவகாசம் தந்தவர் போல மெதுவாக அவளிடமிருந்து விலகி நடந்து அங்கிருந்த தனி ஆசனம் ஒன்றில் அமர்ந்து மகன் தந்த கடிதத்தைப் பிரித்தார். ஏதாவது காதல் விஷயமாக அப்ளிகேஷன் போடுகிறானோ என்கிற புன்னகையோடு படிக்கத் தொடங்கியவருக்கு ஏஸியின் குளிரையும் மீறி வியர்க்கத் தொடங்கியது.

கடிதமா அது? அவருடைய கைகள் லேசாக நடுங்கின. படித்து முடித்து மீண்டும் ஒரு முறை படித்தார். கண்கள் பொங்கின. உதட்டைக் கடித்துக் கொண்டு பதற்றம் மறைக்க முயன்றார். மங்களம் அருகில் வந்து "என்னங்க, போகலாமா?" என்று கேட்டபோது தான் தன்னிலைக்கே வந்தார்.

**செ**ன்னையின் வெயில் பத்தரை மணிக்கே அதிகமாகக் கொளுத்தியது. இவ்வளவு ஆண்டுகளாக உணராத சூட்டினை உடம்பு இப்போது உணர்ந்தது. உடம்பும் மனமும் தளர்ந்தது போல் இருந்ததை நடை காட்டியது. இது சாதனையா சங்கடமா என்று இனம் பிரிக்க முடியாத வேதனை இருவர் முகங்களிலும். சந்தோஷ நிலவில் சில சங்கட கலங்கல்கள்.

எதிரே திரிசூலம் ஸ்டேஷன் வந்து தொடர்ந்த முக்கால் மணிநேரப் பிரயாணத்தின் போதும் அவர் முகம் தீவிர சிந்தனையில் இருந்தது. பரதனின் கடித வாக்கியங்கள்

சினிமாவின் டிரெயிலர்போல் கோர்வையின்றி மனதில் ஒலித்துக் கொண்டே இருந்தன.

எங்கள் மூவருக்குமே உங்களையோ அம்மாவையோ பார்த்தால் பீறிடும் உணர்வு பாசம் அல்ல. வெறும் இரக்கம் தான் என்பதே அதிர்ச்சியான விஷயம் இல்லையா?

தியாகம் என்கிற பெயரில் உங்களை நீங்களே ஏமாற்றிக் கொண்டு என்ன சாதித்திருக்கிறீர்கள் என்று இப்போதாவது கணக்குப் போட்டுப் பாருங்கள்.

நீங்கள் தான் என்றில்லை. தமிழ்நாட்டின் அப்பர் மிடில் க்ளாஸ் என்றொரு பைத்தியக்காரக் கும்பல் இந்தத் தவறைத் தான் செய்து கொண்டிருக்கிறது. நீங்கள் யாரும் உங்களுக் காகவோ உங்கள் பிள்ளைகளின் தேவைகளுக்காகவோ எதையும் வாங்கவில்லை. நீங்கள் வாங்கியது வாங்குவது எல்லாம் உங்கள் உடன் வேலை பார்ப்பவன் வாங்கி விட்டானே உங்கள் பக்கத்து வீட்டுக்காரன் வாங்கி விட்டானே என்கிற ஒப்புமை ஏக்கத்தில்தான்.

குழந்தைகளுக்குத் தெரியும்ப்பா, நம் பெற்றோர் கஷ்டத்துக்குப் பணம் சேர்க்கிறார்களா தேவைக்கு சேர்க்கிறார்களா பந்தாவுக்கு சேர்க்கிறார்களா என்று. அதை ஒட்டித்தான் பெற்றோர் மீது அவர்களுக்கு மரியாதையே பிறக்கிறது.

அண்ணனுடன் மாதம் ஒரு முறையாவது ஐஎஸ்டியில் பேச விட்டிருக்கிறீர்களா? அக்காவுடன் வாரம் ஒரு முறையாவது எஸ்டிடியில் பேசியிருக்கிறீர்களா? எவ்வளவு ஆகியிருக்கும்? மாதம் இருபத்தையாயிரத்துக்கும் மேல்

சம்பாதித்த உங்களுக்குக் கட்டுப்படி ஆகாத தொகையா இதெல்லாம்?

இரண்டு ஆபரேஷன்களுக்குப் பிறகும் அம்மாவை வேலைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறீர்கள். யாருக்கு வேண்டும் அவள் சம்பாத்யம்? போதும், வீட்டில் இரு என்று அவளுக்கு ஓய்வு கொடுத்தால் என்ன?

எதைக் கேட்டாலும் எங்கப்பா எங்களுக்காக வீடு சொத்து என்று சேர்த்து வைக்காமல் விட்டார். அந்தத் தவறை நானும் செய்து எங்கள் பிள்ளைகள் ஏங்கி விடக் கூடாதே என்றுதான் இவ்வளவு சேர்க்கிறோம் என்பீர்களே. தாத்தா புத்திசாலி. அவரிடம் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு முறை சொன்னார்: என் பிள்ளைகளுக்கு சிறகுகளை விரிக்கக் கற்றுக் கொடுத்துள்ளேன்; அவர்கள் பறக்க வேண்டிய திசைகளைக் காட்டினேன்; இப்போது பார் நன்றாக இருக்கிறார்கள் என்று. நீங்களோ பெரியப்பாவோ சித்தப்பாவோ உங்கள் அளவில் நல்ல வேலைகளில் அமர்ந்தீர்கள்தானே? நீங்களாகத் தீர்மானித்த எதிர்காலம்தானே குழம்பி யிருக்கிறது?

நீங்கள் கட்டி வைத்திருக்கும் வீடுகள் எல்லாம் எங்கள் மூவருக்கும் கல்லறைகளாகத்தான் தோன்றுகின்றன. எங்களுடைய ஆசைகள், எதிர்பார்ப்புகள், ஏக்கங்கள், இழப்புகள் எல்லாம் அவற்றில் புதைந்துள்ளன.

அகமதாபாத்தில் பனிரெண்டு வருடங்கள் இருந்தோம். ஒவ்வொரு முறை கோடைவிடுமுறையின்போதும் நாம் குடும்பத்தோடு விமானத்தில் சொந்த ஊருக்குப் போய் வர உங்கள் கம்பெனியே காசு கொடுத்தது. நீங்கள் அந்தப்

பணத்தையும் என்கேஷ் பண்ணுகிறேன் என்று எங்களை வறுத்தெடுக்கும் நாற்பத்தைந்து டிகிரி வெயிலில் நவஜீவன் எக்ஸ்ப்ரஸின் இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்ட்டில் கூட்டி வருவீர்கள். அதே ரயிலில் ஏர்கண்டிஷன் கோச்சு கூட உண்டு. அதிலாவது கூட்டி வந்திருக்கலாம். அதுவும் கிடையாது. கேட்டால் அப்படி மிச்சம் செய்து சேர்த்த பணத்தில்தான் ஒரு ஃப்ளாட் வாங்க முடிந்தது என்பீர்கள். இப்போது அங்கே யார் வசிக்கிறார்கள்?

அக்காவுக்கு டைஃபாயிட் காய்ச்சல். ஸ்கூல் ஃபைனல் பரீட்சை நேரம். உங்களைப் பக்கத்தில் இருக்கச் சொல்லி அழுறா. நீங்க பிடிவாதமா பத்து நாள் எதோ வெளியூரில் அலுவலக ட்ரெயினிங் என்று கிளம்பிப் போனீங்க. நீங்க நினைத்திருந்தால் அதைத் தவிர்த்திருக்க முடியும். இந்த மாதிரி டிரெயினிங் போனால் தான் டிஏடிஏ பில்லில் ரெண்டாயிரம் ரூபாய் வரைக்கும் காசு பார்க்க முடியும்னு சொன்னீங்க. அதில் மிச்சம் பிடிச்ச காசுன்னு சொல்லி அக்காவுக்கு நீங்க ஒரு மோதிரம் வாங்கிக் கொடுத்தீங்க. அவள் அதை இன்று வரைக்கும் அணிஞ்சதே கிடையாது தெரியுமா?

அண்ணன் ஸ்கூல்ல படிக்கிற காலத்தில் ஒரு சைக்கிள் கூட வாங்கித் தந்ததில்லை நீங்க. கேட்டா அவன் ப்ரொஃபஷனல் காலேஜில் சேர்வதற்கு கேப்பிடேஷன் பணம் சேர்க்கிறேன்னு சொன்னீங்க. ஒரு டூர், எக்ஸ்கர்ஷன் அனுப்பிச்சது கிடையாது. நீங்களும் எங்கும் பிக்னிக் கூட்டிப் போனது கிடையாது. பணம் சேர்த்தீங்க. என்ன ஆச்சு? அவன் உங்க பணம் அவசியப்படாதபடிக்கு மெரிட்லயே சீட் வாங்கிட்டான். அப்போவாவது அந்தப் பணத்தில் அவன் ஒரு பைக் வாங்கிக் கொடுக்கச் சொல்லிக் கெஞ்சினான். இப்போ

அவசியமில்லைன்னு சொல்லி அந்தப் பணத்தில் அலங்கா நல்லூரில் இடம் வாங்கிப் போட்டீங்க. கம்பெனி கொடுத்த லோனில் கட்டிய வீடு சொந்த ஊரில் இருக்கு. கூடவே அகமதாபாத்தில் ஒரு ஃப்ளாட் இருக்கு. இரண்டிலும் நாம் போய் குடியிருக்க விதி இல்லை; விற்கவும் மனம் வரவில்லை. அடுத்த இடத்துக்கு என்ன அவசியம்னு உங்களுக்குத் தோன்றியதோ....

இடம் வாங்கிப் போட்டா வேல்யூ ஏறும்னு சொன்னீங்க. இரண்டு லட்சத்துக்கு வாங்கி அதிக விலை ஆன பிறகு விற்றால் தானப்பா வேல்யூ ஏறியதாக அர்த்தம். புதையல் காத்த பூதமாக அதைப் பார்த்துப் பார்த்து வேல்யூ ஏறிடுச்சுன்னு சந்தோஷப்படுவதில் என்ன சாதிச்சீங்கன்னு புரியலை.

சொத்துக்கள் வாங்குவது அவற்றை விற்பது வேறு முதலீட்டில் போடுவது பெருக்குவது போன்றவை எல்லாம் பரம்பரையாக வியாபாரக் குடும்பங்களில் வரும் பாரம்பரிய ரத்தம் உடையவர்களுக்குத்தான் சாத்தியம். மாத சம்பளக்காரர் களுக்குக் குருவி சேர்த்த மாதிரி சேர்த்த பணத்தில் வாங்கிய வீட்டை பெரிய வீடு வாங்குவதற்கோ வேறு காரணங் களுக்காகவோ விற்பதென்பது இதயத்தைக் கசக்கிப் பிழிய வைக்கும் வேதனையாகும். ஏனென்றால் வியாபாரிகளுக்கு வீடோ நகையோ அவர்களுடைய முதலீட்டின் வேறு வகைகளே. மாதச் சம்பளக்காரர்களுக்கு வீட்டின் ஒவ்வொரு சதுர அங்குலமும் உணர்வு பூர்வ சங்கிலிகள். அதனால்தான் ஐந்து லட்ச ரூபாய் செலவு செய்யத் தயாராக இருந்தால் போன வருடமே அமெரிக்கா சென்றிருக்க முடியும் என்கிற நிலை இருந்தும் அந்த இடத்தை விற்றுப் பணம் தர உங்களுக்கு

மனம் வரவில்லை. நானாக சொந்த முயற்சியில் கம்பெனி மூலமாகவே போவதுதான் நல்லது, இல்லாவிட்டால் அங்கே போய் ஏமாந்து விடும் வாய்ப்புகள் இருக்கும் என்று வறட்டு அறிவுரை சொன்னீர்கள். என்னுடைய வாழ்நாளின் ஒரு வருடம் என்பது உங்களுக்கு அவ்வளவு சாதாரணமாகப் போனது.

நம் வீட்டில் நல்ல டிவி கிடையாது. நல்ல மியூஸிக் சிஸ்டம் கிடையாது. நல்ல ஃபர்னிச்சர்கள் கிடையாது. புதிய கார் கிடையாது. விஸி ஆர் கிடையாது. கம்பெனி கொடுத்த ஃபோன் என்று சொல்லி எங்களை உபயோகிக்க விட மாட்டீர்கள். இன்னொரு ஃபோனோ செல்ஃபோனோ கிடையாது. நல்ல வாஷிங் மெஷின் கிடையாது. ஃப்ரிட்ஜ் வாங்கி இருபது வருஷமாச்சு. மாற்ற மனமில்லாமல் இருக்கிறீர்கள். ஒரு ரூமில் கூட ஏசி கிடையாது. இவை யெல்லாம் வாழ்க்கையின் அத்தியாவசியமான விஷயங்கள் என்று நான் சொல்ல வரவில்லை. நம் வீட்டின் வசதிக்கும் பிள்ளைகளின் இயல்புக்கும் அஃபோர்டபிளான விஷயங்கள் தான் என்று கூட உங்களுக்குப் புரியவில்லை.

ஒரு சொந்தக்காரர்கள் வீட்டு விசேஷத்துக்கும் சென்றதில்லை. எங்களை உறவினர் வீடுகளுக்குச் செல்ல விட்டதில்லை. அவர்களுடன் நெருக்கம் வைத்தால் கடன் கேட்டு விடுவார்களோ என்கிற பயத்தில் கூடு கட்டிக் கொண்டு வாழ்ந்தீர்கள்.

சிக்கனத்துக்கும் கஞ்சத்தனத்துக்கும் எப்படி மெல்லிய வித்தியாசமோ அதே மாதிரிதான் ஆடம்பரத்துக்கும் நிறைவுக்கும். நான் உங்களை ஆடம்பரமாக வாழச் சொல்ல வில்லை. நிறைவா வாழலாமே. நம் குடும்ப சூழலுக்கு, இருந்த

வசதிக்கு நாமும் அனுபவித்து மற்றவர்களுக்கும் சந்தோஷம் அளித்து வாழ்ந்திருக்க முடியுமே.

இந்தக் கடிதத்தின் நோக்கம் உங்களைக் குறை சொல்வதோ குத்திக் காட்டுவதோ இல்லை என்பதை தயவு செய்து புரிந்து கொள்ளுங்கள். இப்போது அமெரிக்கா போகிற நான் எப்போது வருவேன் என்று சொல்ல இயலாது. அண்ணனையும் நீங்கள் கிட்டத்தட்ட இழந்த மாதிரிதான். இருவருக்கும் ஒரே சுற்றம் அக்காதான். அவளும் டில்லியில் இருக்கிறாள். இனிமேலாவது உறவினர்களுடன் நெருக்கம் வளர்த்துக் கொள்ள முயலுங்கள்.

வழியில் ரயிலில் உட்கார இடம் கிடைத்த இடைவெளியில் மீண்டும் ஒரு முறை அந்தக் கடிதத்தை சட்டைப் பையில் இருந்து எடுத்துப் படித்தார்.

ரிஸப்ஷனில் சாவி வாங்கும்போது, சட்டைப்பையில் பரதன் தந்த பணம் உறுத்தியது. இந்தாங்கப்பா! செலவுக்கு வைத்துக்கொள் என்று நீங்க தந்த ஐநூறு ரூபாய் நோட்டுக் கட்டு. இதில் ஒரு ஐநூறு ரூபாய் மட்டும் எடுத்துக் கொண்டேன். மும்பை இண்டர்நேஷனல் டெர்மினலுக்குள் போன பிறகு இந்தக் காகிதங்களால் எனக்கு என்ன பயன்? எனக்குத் தேவையான டாலர் நோட்டுக்களைத் தான் கம்பெனி தந்து விட்டதே.

“ஏஸி ரூம் ஏதும் காலி இருக்கா?” என்று கேட்டார்.

“இருக்கு சார். உங்க ரூமுக்கு அடுத்த ரூம் ஏஸி தான். மாத்திடலாமா சார்?”

“மாத்திடுப்பா”.

மங்களத்துக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. வாழ்க்கையில் முதன்முறையாக ஏஸி ரூமில் தங்கப் போகிறாள்.

அறைக்குள் நுழைந்து ஏஸியின் குளிர்காற்றையும் மீறி உடம்பு தகிப்பது போன்ற உணர்வில் முகத்தைப் பொத்திக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தார்.

“என்னங்க, என்னங்க” என்று தேற்ற முயன்ற மங்களத்தின் கைகளைப் பிடித்து முகத்தில் அழுத்திக் கொண்டு கண்ணீரால் ஈரமாக்கினார்.

“என்னை மன்னிச்சிடு மங்களம்”.

மங்களம் துடித்துப் போனது போல் பார்த்தாள். எங்கோ வெறித்துக் கொண்டிருந்து விட்டுப் பேசினார்.

“என்ன வாழ்க்கைடீ வாழ்ந்திருக்கோம்...! நேற்று இதே நேரத்தில் வாழ்க்கையில் எல்லாவற்றையும் சாதிச்சிட்டதா நினைச்சு நான் அடைந்திருந்த கர்வம் எல்லாம் பொடிப் பொடியாப் போச்சுடி. என்ன அழகா உன் மகன் பாடம் சொல்லிக் கொடுத்திட்டுப் போயிருக்கான்...”

மங்களத்துக்கு என்ன சொல்வது செய்வது என்று தெரியவில்லை. அவளுக்கு உலகமே அவரும் அவரைச் சுற்றியும்தான்.

“மங்களம்! இது வரைக்கும் நான் உன்னிடம் கேட்டுக் கொண்டோ கலந்து கொண்டோ ஒன்றுமே செய்ததில்லை. முதன் முறையா சில விஷயங்கள் பண்ணலாம்னு இருக்கேன், உன் சம்மதம் இருந்தால்...”

மங்களம் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

“நீ ப்ளேன்ல போனதே இல்லை அல்லவா?”

மங்களம் ஏக்கத்தோடு உதடு பிதுக்கினாள்.

சிவராமன் கைகளில் பரதன் திரும்பத் தந்து விட்டுப் போன ஐநூறு ரூபாய் நோட்டுக்கட்டை விசிறியபடியே சொன்னார். “நாம் இருவரும் நாளை ப்ளேன்ல மும்பை போறோம். பரதன் போகும் விமானம் நாளை நைட்தான். அவனுக்கு சர்ப்ரைஸா நாம் மும்பை விமான நிலையத்திலேயே சென்ட் ஆஃப் கொடுக்கிறோம். அவன் நம்மை நிச்சயமா அங்கே எதிர்பார்க்க மாட்டான். சந்தோஷத்தில் அவனை இப்போதாவது திணற வைக்கலாம்.”

மங்களத்தின் முகத்தில் திருப்தியின் அடையாளமாக ஒரு புன்னகை.

“அதுக்கப்புறம் அங்கிருந்து நாம் டில்லி போறோம். மகளையும் மாப்பிள்ளையையும் பேத்தியையும் பார்த்து எவ்ளோ காலம் ஆச்சு...”

மங்களத்தின் கண்கள் பொங்கின. ஆனந்தத்தில் அவருடைய கைகளைப் பிடித்துக் கொண்டாள். திடீரென்று ஞாபகம் வந்ததுபோல் சொன்னாள் : “ஐயோ! நான் நாளை மறுநாள் டூட்டி ஜாயின் பண்ணணுமே”.

சிவராமன் சிரித்தார். “நான் சொல்லப் போகும் மூணாவது விஷயமே அதுதான். உன் வேலையை நீ ராஜினாமா செய்கிறாய் உடனடியா” என்று முடித்தார்.

அவர் முகத்தில் இத்தனை வருடங்களாக இருந்து வந்த இறுக்கம் தளர்ந்து தெளிவு வந்து விட்டிருந்தது.

❁ ❁ ❁

கங்கை

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794